செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௭-ஆவணி	பகுதி
௬௨	1966—செப்டம்பர்	௧

௧. தமிழ் மொழிக்குச் சங்கம் செய்த தொண்டுகள்
தமிழவேள் பி. டி. இராசன் ௧

௨. அந்தமான் தீவு ஓங்கே மக்களின் வாழ்க்கை
சு. சக்திவேல் எம். ஏ. ௨௮

௩. சிறுபாணாற்றுப் படையில் இலக்கியச் சுவை
மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல். ௩௭

௪. கவிதையில் ஓசை நயம்
க. ப. அருணாசலம், பி. ஓ. எல். ௪௬

௫. சமநிலைச் சமுதாயம்
சு. பாலச்சந்திரன், எம். ஏ , எம். லிட். ௫௫

௬. மதிப்புரை ௬௮

௭. சங்கச் செய்திகள் ௬௯

மதுரைத் தமிழ்ச் சங்கம்

செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௭ – ஆவணி	பகுதி
௬௨	1966 — செப்டம்பர்	௧

தமிழ் மொழிக்குச் சங்கம் செய்த தொண்டுகள்.

—●—

—: தமிழவேள் பி. டி இராசன் :—

பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட, உலகப்பண்பாட்டின் தொட்டிலாக விளங்கிய, தொன்மைப் புகழ்படைத்த தமிழகத்தினின்று, இன்று நடைபெறும் இவ் 'உலக இலக்கியப் பேரவை'யிற் கலந்து கொள்வதில் நான் பெருவகை கொள்கின்றேன். தமிழ் இனத்தைப் பற்றிக் கூறவந்த அறிஞர் பலரும், "படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடி" என்றும், "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி" என்றும், "பதிகெழு வறியாப் பழங்குடி", என்றும் போற்றிப் புகழ்வாராயினர். இத்தகு பெருமைசால் தமிழ் இனத்தின் ஏற்றத்திற்கும் எழுச்சிக்கும் பாடுபட்ட தமிழ்ச் சங்கங்கள் நான்கு என நல்லோர் நவில்வர். 'நான்காம் தமிழ்ச் சங்கம்' என

இற்றை நாளில்போற்றப்பெறும் 'மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்' சார்பில், உலகப் பேரறிஞர் கூடிய இம்மாமன்றத்திற் பேசும் பெருமையை எனக்களித்த இம்மன்றத்தினர்க்கு என் உளமார்ந்த நன்றியறிதலை உளப்படுத்துகின்றேன்.

இப்போது உங்கள் முன்னிலையில், நான் பேச எடுத்துக்கொண்ட பொருள், '**தமிழ் மொழிக்குச் சங்கம் செய்த தொண்டுகள்**' என்பது ஆகும்.

உலகத்தில் தோன்றி பல்வேறு மொழிகளில், தமிழ் மொழி காலத்தாற் பழமையானது; இலக்கண இலக்கியச் செறிவுடையது; தனித்து இயங்கும் தன்மை கொண்டது; ஏறக்குறைய நான்கு கோடி மக்களால் பேசப்படுவது; உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் நின்று நிலவுவது; கன்னடம், களிதெலுங்கு, கவின்மலையாளம், துளு முதலான மொழிகட்குத் தாயாகத் திகழ்வது; என்றும் குன்ரு இளமை நலம் உடையது.

ரிக் வேதத்தில் 'பிரஜா: திஸ்ரோ அத்யாயம் ஆயூஷ்' என்ற சுலோகம் காணப்படுகின்றது. இதற்குப் பொருள் உரைக்கும் தைத்ரிய ஆரண்யகம், "யாவைத்தா இமாஷ்பிரஜாஷ் திஸ்ரோ அத்தியாயம் ஆயம்தானி இமானி வாயாம்சி வங்க வாஹதாஷ் சேரபாதாஷ்' என்று கூறுகிறது. இதற்கு 'கீத்' (Keith) என்ற மேனாட்டறிஞர், 'வங்க வாகதாஷ் சேரபாதாஷ்' என்பன வங்கர்களையும், மாகதர்களையும், சேரர்களையும் குறிக்கும்' என்ருர். எனவே வேத காலத்திலேயே சேரர்களாகிய தமிழர்களைப் பற்றிப் பேசப்படுவதால், வேத கால ஆரியர்களும் அறிந்து உரைக்கும் அளவில், தமிழ்நாடும் தமிழும் விளங்கின என்னும் உண்மையை உணர்கின்ருேம். வேத கால முதற்கொண்டு இன்று வரையில், தமிழ் மொழி, தன் எழுத்திலோ இலக்கண அமைப்பிலோ குறிக்கத்தக்க அளவு மாற்றம் இன்றி விளங்கி நிற்கின்றது. இச்சிறப்புக் கண்டுதான், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

'பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்'

எனத் தமிழ் மொழியின் அழியாத் தன்மையை வியந்து வியந்து போற்றுகின்ருர்.



கோலாலம்பூரில், மலேசியா பிரதமர் திரு. துங்கு அப்துல்ரகுமான்
அவர்களுக்குத் தமிழவேள் பி.டி. இராசன் அன்பளிப்புவழங்குதல்.

தமிழின் சீர்மையைச் சொல்ல வந்த புலவர்கள் எல்லாம் 'செந்தமிழ்' 'நற்றமிழ்' தீந்தமிழ்' 'வண்டமிழ்' 'ஒண்டமிழ்' 'கன்னித் தமிழ்' 'பைந்தமிழ்' என்று பலவாறாகப் புகழ்ந்துள்ளனர். இவையெல்லாம், தமிழ் மொழியின் உயர்வு குறித்து உரைக்கப்பட்டனவேயன்றித் தமிழின் பல்வேறு கிளை மொழிகள் (Dialects) என எவரும் தவறுபட எண்ணி விடலாகாது.

ஐயாயிரம் ஆண்டுகட்கும் முன்பே, தமிழுக்கெனச் 'சங்கம்' கண்டு, அதனை வளர்த்த பெருமை தமிழ் இனத்திற்கே உண்டு. அது பற்றியே தமிழைச் 'சங்கத் தமிழ்' எனக் குறிப்பிடுவர் புலவர். எண்ணிறந்த புலவர் பெருமக்கள், மொழிக்கெனத் தனிக் கழகம் கண்டதும், அதன் வாயிலாக மொழி ஆய்வு நடாத்தி, நூற்றுக்கணக்கான அரிய நூல்களை ஆக்கியதும், அந்நாளில் உலகம் கண்டறியா விந்தைச் செயல்களாகும். நாகரிகமும் பண்பாடும் உயர்ந்த நிலையில் கால்கொண்டிருந்தாலல்லாமல், இத் தகைய விழுமிய செயல்களைச் செய்திருத்தல் இயலாது. தமிழ்ப் புலவர்களின் செயல்பற்றிக் குறிப்பிடவந்த 'அபிடுபாய்' (Abbe Dubois) என்ற அறிஞர், 'இம்மக்கட்கு மருத்துவத்தை யும் கணக்கையும் கூடச் செய்யுளாகத்தான் பாட முடிந்தது' என வியக்கின்றார்.

சங்கம், தமிழுக்குச் செய்த தொண்டுகளைப் பற்றி ஆராயப் புகுமுன், 'சங்கம்' என்னும் சொல்லைப் பற்றி ஆராய்வது நல்லது எனக் கருதுகிறேன்.

'சங்கம்' என்ற வடசொல், பொதுவாகக் 'கூட்டம்', 'கூடுதல்' 'கூடல்' என்று பொருள்படும். ஆயினும், அது. ஒரு சிலர், குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்காக ஒன்று சேரும் கூட்டமாகிய 'சபை' என்னும் பொருளில் பண்டைக் காலத்திலிருந்து பயன்பட்டு வருகின்றது.

'தமிழ்' என்று எண்ணும்போதே, 'சங்கத்'தைப் பற்றியதோர் எண்ணம் நமது உள்ளத்தில் எழுவது இயல்பு. அவ்வாறே 'சங்கம்' என்று நினைக்குங்கால், 'மதுரை'யைப்பற்றிய நினைப்பும் தோன்றுகிறது. மதுரைக்கு உரிய பல்வேறு பெயர் களில் 'கூடல்' என்பதும் ஒன்று.

ஆறுகள் ஒன்றோடொன்று கூடுகின்ற இடத்தையும் 'கூடல்' என்பர்; ஆறுகள் கடலோடு கூடுகின்ற இடத்தையும் 'கூடல்' என்பர். இன்னும் இவை, தமிழ் நாட்டில் பெருவழக்காய் இருந்து வருகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில், பாலாற்றங் கரையில் உள்ள 'திருமுக்கூடல்', திருச்சி மாவட்டத்தில் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள 'வெஞ்சமாக் கூடல்', திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 'முக்கூடல்' ஆகியன இவற்றிற்குப் பெருஞ் சான்றுகள். தமிழர்கள், தங்கள் வீடுகளில், வீட்டாரும் ஏனையோரும் கூடிப் பேசுதற்குரிய ஓர் பகுதியைக் 'கூடம்' என அழைப்பது மரபு. பல மாணவர்கள் ஒன்றாகக்கூடிப் படிக்கும் இடம் 'பள்ளிக்கூடம்' என வழங்கப்பட்டு வருதலை அனைவரும் நன்கறிவர்.

மதுரையில் வையையாறு ஓடுகின்றது; ஆனால், அவ்யாறு வேறு ஆற்றுடனோ, அன்றிக் கடலுடனோ கூடவில்லை. அங்ஙன மிருக்க, மதுரைக்குக் 'கூடல்' என்ற பெயர் எங்ஙனம் வந்தது என்ற கேள்வி எழலாம். பல்வேறு இடங்களில் தோன்றிய புலவர்கள், பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர்கள், இம்மதுரையில் ஒன்றாகக் கூடினர்; தமிழை ஆராய்ந்தனர். அவர்கள் கூடிய இடம் 'கூடல்' என்று பெயர் பெற்றது மிக மிகப் பொருத்தம்தானே!

"தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே!"
"புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடல்"
"பாடல் சான்று பல்புகழ் முற்றிய கூடல்"
"புலம்பூத்துப் புகழ்ஆனாக் கூடல்"

என வரும் சங்க இலக்கியச் செய்யுள்களால், மதுரையில், தமிழ் ஆய்ந்தபகுதி, 'கூடல்' என்ற பெயரால் சிறப்பிக்கப்பெற்றதை அறியலாம். இக்'கூடல்'தான், பிற்காலத்தவரால் 'சங்கம்' என வழங்கப்படுவதாயிற்று.

இனிக்'கூடல்'என்னும் சொல்லுக்குச் 'சங்கம்'என்றுபெயர் எங்ஙனம் உண்டாயிற்று என்ற கேள்வி எழுகின்றது. புத்தர் பிரான், பௌத்த துறவிகளின் குழுவைச் 'சங்கம்' என்ற பெயரால் நிறுவினர். பௌத்தர்கள் அக்கால முதல் இன்று வரை தங்கள் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாகப் 'புத்தர், தர்மம், சங்கம், என்ற மூன்றையுமே கொண்டுள்ளனர். சமண முனிவர்

களின் கூட்டத்திற்கும் 'சங்கம்' என்பதே பெயர். தமிழ் நாட்டில், பண்டைக் காலத்தில் முதலில் 'சமண சங்கம்' ஒரே கூட்டமாக இருந்தது. இதற்கு 'மூலசங்கம்' என்று பெயர். பிறகு மூல சங்கம் பெரிதாக வளர்ந்தபோது, நந்திகணம், சேனகணம், சிம்ம கணம், தேவகணம் என்ற நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவர் நந்தி கணத்தையும், சீவக சிந்தாமணி இயற்றிய திருத்தக்கதேவர் தேவகணத்தையும் சேர்ந்தவர்கள். திருநாவுக்கரசர் சமணராக இருந்தபோது, 'தருமசேனர்' என்ற பெயருடன் சேனகணத்தில் இருந்தார். வச்சிர நந்தி என்பவர் கி. பி. 470-இல், தமிழ் நாட்டில் 'திரமிடசங்கம்' என்பதை ஏற்படுத்தியதாகச் சமண நூல்கள் கூறுகின்றன. இச் சங்கமும், சமண முனிவர்கள் சங்கமாகும்.

வடமொழியாளரும், சமண முனிவரும், தமிழரோடு கலப்புண்டபோது பலவகை மாற்றங்களைச் செய்தனர். அவர்கள் மொழியியலில் மூன்று முறைகளைக் கையாண்டனர். அவைகளில் முதன்மையானஒன்று, தாம்எதிர்ப்படும் பெயர்களைத்தம்முடைய மொழியில் மொழி பெயர்த்துக் கொள்வது. "பாண்டி நாட்டு ஆலவாயிலைக் கபாடபுரமென வான்மீகியார் மொழி பெயர்த் துரைப்பதையும், பின்வந்தோர் அந்நெறியே பின் பற்றி நாடு நகரங்களின்பெயர்களையும், ஆறுமலைகளின் பெயர்களையும் மொழி பெயர்த்துக்கொண்டிருப்பதையும் தமிழுலகம் நன்கறிந்திருக் கிறது. தமிழகத்துமேலைமலைத்தொடரைச்சஹ்யாத்திரியென்பதும், தொண்டைநாட்டுப் பாலாற்றை க்ஷீர நதி யென்பதும், நடு நாட்டு முதுகுன்றத்தை விருத்தாசலமென்பதும், மதுரைத் திருவாலவாய் அங்கயற் கண்ணியை மீனாக்ஷி என்பதும் போதிய சான்றுகளாம். பண்டை நாளைத் தொல்காப்பியரும், மொழி நடைக்கேற்ற எழுத்தால்பிறமொழிச் சொற்களை ஏற்றல் வேண்டும்; எழுத்தை ஏற்பது நேர்மையன்று என்பதற்காகவே,

> "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தோடு புணர்ந்த சொல்லா குமமே"

என்று தமிழ் மக்கட்கு வழி வகுத்துரைத்தார். இந்தச்சீரிய முறையை வடவர்க்கு வடமொழியாசிரியர் வகுத்துரைக்கவில்லை போலும்! மேனாட்டு மொழியாளர்களும், கட்டுமரம்(Kattumaram), மிளகு தண்ணீர் (Milak Tanni) இஞ்சி (Ginger), அரிசி (Rice),

தோகை (Tugi), தேக்கு (Teak) முதலிய தமிழ்ப் பெயர்களைத் தங்கள் மொழிநடைக் கேற்பத் திரித்து மேற்கொண்டனர்!"

இம்முறையில்தான் 'கூடல்' என்னும் தூய தமிழ்ச் சொல்லைச் 'சங்கம்' என வடமொழியாளர் குறிக்கலாயினர் என்னும் உண்மையை ஈண்டு உணர்தல் வேண்டும். இனிச் "சங்கம் என்ற சொல்லே சங்க இலக்கியத்தில் இல்லையாதலின், சங்கம் தோன்றியதே மிகப்பிற்பட்ட காலம்" எனப் பிழைபடச் சிலர் பேசலாயினர். இந்நிலை இரங்கத்தக்கது!

இனிப் பிற்காலப் புலவரனைவரும், இச்'சங்கம்' என்னும் சொல்லை ஏற்றுக்கொண்டு, தத்தம்பாடல்களிற் குறிப்பாராயினர்.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி" எனத் திருநாவுக்கரசரும், "சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய அங்கண் மூதூர்.........செய்யுள்மிக்கேறு சங்கம்" எனச் சேக்கிழாரும், "அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம்" எனக் கம்பநாடரும் கூறிப் போந்தனர். அன்றியும். 'பட்டிமண்டபம்' என்பதற்குச் 'சங்கத்தார் வதிந்த இடம்' என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேனாட்டில், இலக்கியம், கலை ஆகியவற்றை வளர்ப்பதற்காக நிறுவும் சபைகளை 'அக்காடமி' (Academy) என்று அழைப்பது வழக்கம். பண்டைநாளில் கிரீசு நாட்டில் ஏதன்சு நகரின் அருகிலிருந்த 'அக்காடமி' என்னும் பெயருள்ள பூந்தோட்டத்தில் பிளேட்டோ என்னும் பேரறிஞர் தம் மாணவர்களுடன் வசித்து வந்தார். ஆதலால்தான், பிற்காலத்தில் கி.மு. மூன்றும் நூற்றாண்டு முதல் நிறுவப்பெற்ற இலக்கியக் கலைச் சபைகள், 'அக்காடமி' என்ற பெயரால் வழங்கி வருகின்றன. பிரான்சு நாட்டிலுள்ள "பிரெஞ்சு அக்காடமி" (The French Academy) உலகப் புகழ் வாய்ந்தது.

'அக்காடமி' போன்ற இலக்கியக் கழகத்தைத் தமிழகத்தில் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே 'கூடல்' என்ற பெயரால் தோற்றுவித்துத் தமிழை வளர்த்து, அதன் வாயிலாகத் தமிழ்க் கலையையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் நாகரிகத்தையும்

உலகறியச் செய்த தமிழர்தம் அறிவு நுட்பத்தை நம்மால் வியவாமலிருக்க முடியவில்லை.

இதனால், 'சங்கம்' என்ற சொல்லின் வரலாற்றைக் கூற வந்தேனேயன்றிச் 'சங்கம்' என்ற பெயரை விலக்கவோ, மாற்றவோ வேண்டும் எனயான்கூறவில்லை. பன்னூறாண்டுகளாக வழக்கில் இருந்துவரும் இச்'சங்கம்' என்ற சொல்லை மாற்ற வேண்டும் என்பது என் கருத்தன்று.

பண்டை நாளில், பாண்டிய மன்னர்கள் ஆதரவில், தலை, இடை, கடை என மூன்று சங்கங்கள் நடைபெற்றமை, இறையனார் அகப்பொருளுரை, சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை போன்ற உரை நூல்களால் அறிகின்றோம். தமிழை வளர்ப்பதற்கென்றே மூன்று சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன.

முச்சங்கங்கள் பற்றி, இறையனார் அகப்பொருள் உரை, பின் வருமாறு கூறுகிறது:—

"தலைச்சங்கம் இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்று எறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாக ராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத் தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பத்திற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவர்களிற் சங்கம் இரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன்ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது கடல்கொள்ளப்பட்டமதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

"இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியாரும், மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும்,

திரையன் மாறனும், துவரைக்கோனும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத் தெழுநூற்றுவர் பாடினரென்ப. அவர்களாற்பாடப் பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை யகவலு மென இத் தொடக்கத்தன என்ப. அவருக்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமு மென இவை என்ப. அவர், மூவாயிரத் தெழு நூற்றி யாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவரைச் சங்கம் இரீஇயினர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாற னிறுக ஐம்பத் தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினர் ஐவர்பாண்டிய ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.

'இனி கடைச் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தார் சிறு மேதாவியாரும், சேந்தம் பூதனரும், அறிவுடையரனாரும், பெருங் குன்றூர்க் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதன் இளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருமென இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப.அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடின ரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும் ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசை யும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல்கொள்ளப்பட்டுப்போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினர் மூவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரைஎன்ப,.

இவ்வுரைப் பகுதிகளினின்றும், இப்போது தமிழகத்தின் தெற்கு எல்லையாக விளங்கும் கன்னியாகுமரிக்கும் தெற்கே உள்ள இந்துமாக் கடல் பெரும் நிலப்பரப்பாயிருந்தது என்பதும். அக் காலத்தே, தென் மதுரையில் தலைச்சங்கமும் பின்னர்க் கபாட

புரத்தில் இடைச் சங்கமும் இருந்தன என்பதும், கடல்கோளால் இவை அழிந்துபட்டன என்பதும் நாம் அறிகின்றோம்.

இக்கடல்கோள் பற்றிய உண்மையை, 'மலிதிரை ஊர்ந்து தன் மண் கடல் வவ்வலின்' என்ற கலித்தொகையும், ''பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக், குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' என்ற சிலப்பதிகாரமும் நன்றெடுத்துக் காட்டுகின்றன.

முதற்கடற்கோளுக்குத் தப்பி நின்று திரும்பத் தமிழ் நாகரிகத்தை நிலை நாட்டிய நிலந்தரு திருவிற் பாண்டியனைத் 'திராவிட நாட்டரசனாகிய சத்திய விரதன்' என்றும், 'அரசமுனி' என்றும், மனு போன்ற வட நூல்கள் கூறுகின்றன. இராமாயணத்தில், இரண்டாம் ஊழியில், மணிகளாலும், முத்துக்களாலும் நிரம்பப் பெற்றுச் சிறப்புடன் விளங்கிய பாண்டியன் தலைநகரான கவாடபுரத்தைப் பற்றி விவரிக்கப் பட்டிருக்கிறது. அன்றியும் இக் கடல்கோள் பற்றிய உண்மையை மேலை நாட்டு நில நூல் வல்லாரும் உறுதிப்படுத்துகின்றனர்.

ஆன்றோர் உரையும், முன்னோர் மரபும் இங்ஙனம் தெளிவாகச் சங்கங்களின் வரலாற்றையும், குமரி நாட்டின் மெய்ம்மையையும் வலியுறுத்துகின்றன. ஆயினும் இக்காலத்தார் சிலர் இவற்றைச் சந்தேகிக்கின்றனர். இந்நூல்களில் சங்கங்கள் நடைபெற்றனவாகக் கூறும் கால எல்லை, ஆயிரக்கணக்காயிருப்பதும், அவைதரும் நூற்பட்டியலில் பெரும்பாலான இன்று காணப் பெறாமையுமே இச்சந்தேகத்திற்குக் காரணம்.

தமிழ் நாகரிகத்தின் தொன்மையைக் கணித்தறிவார்க்கு இச்சங்க வாழ்வின் எல்லை அத்துணை நம்பத் தகாதது அன்று.

தமிழ் நாட்டிலே முச்சங்கங்கள், வெவ்வேறு காலங்களில் தழைத்தோங்கின. தலைச் சங்கம் ஏறத்தாழக் கி. மு. 5000 ஆண்டுகட்கு முன் நிலவியது என்றும், அதன் பின்னர் இடைச்சங்கமும், கடைச் சங்கமும் தோன்றலாயின என்றும், இவற்றுள் கடைச் சங்கம் கி. மு. 12 அல்லது 15–ஆம் நூற்றாண்டில் தொடங்கியிருத்தல் வேண்டும் என்றும் இலக்கியவரலாற்றாசிரியர் உரைப்பர்.

மேலே கூறிய, இறையனார் அகப்பொருள் உரை, அடியார்க்கு நல்லார் உரை இவற்றில் சொல்லப்படும் முச்சங்கங்களைப் பற்றிய கருத்துக்களைச் சுருக்கமாகக் கீழே காண்போம்.

தலைச்சங்கம்:— இது, கடல்வாய்ப்பட்ட தமிழகத்திலிருந்த மதுரை நகரில் அமைந்திருந்தது. இச்சங்கத்தே அமர்ந்து தமிழ் ஆராய்ந்தோர் 549 பேர் ஆவர். இவர்களால் ஆராயப்பெற்ற பாடல்களைப் பாடியோர் 4,449 பேர் ஆவர். இச்சங்கத்தைத் தோற்றுவித்தவன், காய்சினவழுதி என்ற பாண்டியன் ஆவான். அவனைத் தொடர்ந்து 89 பாண்டிய அரசர்கள் இதனைப் பாதுகாத்து வந்தனர். பாண்டியன் கடுங்கோன் காலத்தில் இச்சங்கம்கடல்கோளால்அழியலாயிற்று. இச்சங்கத்தே தோன்றிய நூல்கள்,பெரும்பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலியனவாகும். இவற்றுள் முதுநாரையும், முதுகுருகும் இசை நூல்கள் ஆகும். இத்தலைச் சங்கக்காலத்தே தோன்றிய மற்றொரு நூல் 'அகத்தியம்' ஆகும். அது, இயல், இசை, நாடகம் என மூன்றுவகையாகப் பிரிந்திருந்தது என்பர். இந்நூலின் நூற்பாக்கள் சில, தொல்காப்பிய உரைகளிலும், யாப்பருங்கல உரைகளிலும் காணப்படுகின்றன. இவ் அகத்தியத்தின் ஆசிரியராம் அகத்தியர் 'தமிழ் இலக்கணத்தின் தந்தை' எனப் போற்றப்படுவர்.

இடைச்சங்கம்:—தென்மதுரையும், ஆங்கிருந்த தலைச் சங்கமும் கடலால் அழிந்து போகவே, வடக்கு நாக்கி வந்தபாண்டியர், இன்றைய குமரிக்கும், அழிந்துபோன தென்மதுரைக்கும் இடையே இருந்த 'கபாடபுரத்தை'த் தலைநகராகக்கொண்டு ஆளத் தொடங்கினர். இக்'கபாடபுரம்' வான்மீகி இராமாயணத்தில் குறிக்கப்படுகின்றது.

"ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம்
யுக்தம் கபாடம் பாண்டியானாம் கதாத்ருட்சத வானராஃ"

எனவரும் அடிகள், கபாடபுரத்தைக் குறிப்பிடுகின்றன. 'கபாடபுரம்' என்பது 'ஆலவாயில்' என்ற தமிழ்ச் சொல்லின் மொழி பெயர்ப்பு.* இக்கபாடபுரத்தில் (ஆலவாயிலில்) மீண்டும் சங்கம் நிறுவித் தமிழாராயத் தலைப்பட்டனர். இதுவே 'இடைச்சங்கம்'

* Kabadapuram is not a transiliteration, but a translation

என வழங்கப்படும் 'இரண்டாம் தமிழ்ச்சங்கம்' ஆகும். இங்கிருந்து தமிழ் ஆய்ந்த புலவர் 59 பேர் ஆவர். இச்சங்கத்தே, தாம் பாடிய பாடல்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புலவர்கள் 3,700 பேர் ஆவர். இதனை நிறுவியவன், வெண்டேர்ச்செழியன் ஆவான். பாண்டியன் முடத்திருமாறன் காலத்தே, இச்சங்கமும் கடலால் அழிந்தது. இச்சங்கத்தில் தோன்றிய நூல்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை முதலியன. இவ் விடைச் சங்க காலத்தில், 'தொல்காப்பியமும்' தோன்றி அகத்தியத்தோடு' இலக்கியப்பகுதிக்குத் தலைமை தாங்குவதாயிற்று, தொல்காப்பியர், அகத்தியர் மாணவர் பன்னிருவரில் ஒருவர் என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. இசை நுணுக்கம், மாபுராணம், பூதபுராணம் முதலியன இசை நூல்களுக்குத் தலைமை தாங்கின. இவ் இடைச்சங்க காலத்தே தோன்றிய பல்வேறு நூல்களில். 'தொல்காப்பியம்' ஒன்றே இன்றும் காட்சியளிக்கின்றது. இத்தொல்காப்பியத்தின் செல்வாக்கு வளர, வளர அகத்தியம் சிறப்பிழந்து மறைந்து விட்டது. இலக்கண உரைகளில் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாகக் காட்டப்படும் அகத்திய நூற்பாக்களும், பவானந்தம் பிள்ளையவர்கள் 'அகத்தியம்' என்ற பெயரால் வெளியிட்ட நூலும் இவ்வுண்மையை வலியுறுத்தப் போதிய சான்றுகளாம்.

முதல் இரு சங்கங்களின் செயல்வகைகளை அறிந்து கொள்வதற்குப் போதிய இலக்கிய ஆதாரங்கள் இதுகாறும் நமக்குக் கிடைக்கவில்லை. ஒருசிலவற்றின் பெயர்கள்தாம் காணப்படுகின்றன. அவற்றுள் சில இயல் நூல்கள், சில இசை நூல்கள், சில நாடக நூல்கள் என்று மட்டுமே அறிந்து கொள்ள முடிகிறதேயன்றி, அந்நூற்களின் அமைப்போ, அவை உரைத்த பொருளுரையோ, அவை அரசியலுக்கும் மக்கட் சமுதாயத்திற்கும் பணிபுரிந்த பான்மை பற்றியோ அறியக்கூடவில்லை. தமிழர் செய்த தவப்பயனாக இடைச் சங்க காலத்தில் தோன்றிய தொல்காப்பியம்மட்டுமே முழு வடிவில் நமக்குக் கிடைத்துள்ளது.

தொல்காப்பியம்: தற்காலம் தமிழில் தலை சிறந்து விளங்கும் நூல் இது. தொன்மையிலும், புலவர் பாராட்டும் பண்புகளிலும், தன்மையிலும் இறவாச் சிறப்புடைய இத் தமிழ்

நூல் தொல்காப்பியரால் இயற்றப்பட்டது. 'அவர் பெயரே அதற்கு ஆகுபெயராய் வழங்கும் சிறப்புடையது. தமிழில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிறந்து, இன்றும் இறவாது நின்று நிலவும் பனுவல், தொல்காப்பியர் நூல் ஒன்றேயாம். தென்பாண்டி நாட்டைக் கடல் கொள்ளுமுன், கபாடபுரத்தில் நிலம் தரு திருவிற் பாண்டியன் அவையில் வழங்கிய பொரு விலாப் பெருநூல் இது. குறையிலா நிறைவு, அறிவுசால் செறிவு, நிரம்பு வளம் வரம்பு இறவாமல் வரையறுத்து வடித்த முறை வனப்பு, மொழி வளர்ச்சிக்கு என்றும் தளர்ச்சி தராக் கட்டமைப்புக்களால் ஒப்புயர்வற்ற சிறப்பு வாய்ந்த இலக்கண நூலாக இலங்குவது இத்தொல்காப்பியர் நூல். ஆரிய பாணினிக்கும், யவன அரித்தாட்டிலுக்கும், காலத்தால் முந்திய தொன்மையுடையது. எபிரேயம், பழைய பாரசீகம், சீனம் போன்ற பழைய மொழி நூல்களில் காணொணாத் தருக்க வருக்கப் பெருக்கும், செய்யாவரன்முறை இயற்கை வளர்ச்சி வரலாற்றின் நெருக்கும் இருக்கப் பெற்றது தொல்காப்பியர் நூல்,

'உயிரினங்களில் மக்கள் வகுப்பு மட்டுமே கூட்டுறவுக்கு இன்றியமையாத பேசும் திறம் பெற்றுளது. பொருளைக் குறிப்பதே பேச்சின் நோக்கமாகும். பொருள் குறிக்கும் சொற்களே எல்லா மொழிக்கும் அடிப்படை. சொற்கள் ஒலி கட்குரிய எழுத்துக்களை உறுப்பாகக் கொண்டிருக்கின்றன. அதனால், கருதும் பொருளும், பொருள் குறிக்கும் சொல்லும், சொல்லின் உறுப்பாம் எழுத்துமே இலக்கண நூலின் இயற்கைப் பகுதிகளாகும். இவ்வியன் முறைப்படி தொல்காப்பியர் இலக்கண நூல், எழுத்து, சொல், பொருள் என முத்திறப்படவகுக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் இயன்மொழி வளர்ச்சி வரலாறுகளை வரன் முறைப் படுத்தி வகை, தொகை, வரிசைப்படுத்தி ஒழுங்குபடச் சுருக்கி விளக்குகிறது.'

கடைச்சங்கம்: கபாடபுரம் அழிந்து போகவே, இப்போதுள்ள வையையாற்றின் கரையில் உள்ள 'மதுரை'யைத் தலைநகராகக் கொண்டனர் பாண்டியர். இம்மதுரைக்குக் 'கூடல்' என்ற பெயர் எங்ஙனம் வந்தது என முன்னர்க் கண்டோம். இந் நகருக்கு 'ஆலவாயில்' என்று வேறு பெயரும் உண்டு. தலைச்சங்கம் இருந்த 'தென்மதுரை'யின் நினைவாக இந்நகருக்கு 'மதுரை'

என்ற பெயரும், இடைச்சங்கம் இருந்த 'ஆலவாயில்' (கபாடபுரம்: கபாடம்-வாயில்) என்பதன் நினைவாக 'ஆலவாயில்' என்ற பெயரும், சங்கம் இருந்த 'கூடலி'ன் நினைவாகக் 'கூடல்' என்ற பெயரும் இந்நகருக்கு வழங்கப்பெற்றன.

இவ்வாறு பெயர் வைப்பது, தமிழ்ப் பெருவேந்தர்க்குஉரிய மரபாகும். சேரவேந்தர்க்கு, மேலைக்கடற்கரையில் வஞ்சி, கருவூர், முசிறி என்ற மூன்று நகர்கள் உண்டு. அவர்கள் 'இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்பக்' கொங்கு நாட்டிற் புகுந்தபோது முதலில், இப்போது 'தாராபுரம் என வழங்கப்படும் நகரில் தங்கி, அதற்குக் 'கொங்கு வஞ்சி' எனப் பெயரிட்டனர். பின்னர்க் காவிரிக்கரையடைந்தபோது, அங்கிருந்த நகரைத் தங்கள் நாட்டுக் கருவூரின் நினைவாகக் 'கருவூர்' என்று பெயரிட்டனர். அதன்பின் அவர்கள் காவிரியின் வடகரையாகிய மழநாட்டைக் கைப்பற்றியபோது அதன் தலைநகரை 'முசிறி' என்று பெயரிட்டனர்.

இம்முறைப்படி, பாண்டியரும், மதுரைக்கு முப்பெயரிட்டு அழைத்ததில் வியப்பில்லை.

வையைக்கரையில் மதுரைக்கண், கடைச்சங்கம் என்ற மூன்றும் சங்கத்தை நிறுவிய பாண்டியன், கடல்கோள் காலத்திலிருந்த முடத்திருமாறன் ஆவான். இங்கே தமிழாராய்ந்த புலவர் எண்ணிக்கை 49 ஆகும், பாடிய புலவர்களின் எண்ணிக்கை 449 ஆகும். இச்சங்கத்தே தோன்றியன, கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலான இசை, நாடக நூல்களும், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு. புறநானூறு முதலான எட்டுத்தொகை நூல்களும், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம், பட்டினப் பாலை முதலிய பத்துப்பாட்டு நூல்களும்ஆகும். இவற்றுள்கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன அழிந்து போயின.

இக்கடைச் சங்கத்தால், தமிழர்களுக்குக் கிடைத்த அழியாக் கருவூலங்கள் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆம்.

இவ்விரண்டையும் 'பதினெண் மேற்கணக்கு' என்று பிற்காலப் புலவர் கூறுவர்.

பத்துப்பாட்டு: குறைந்தது 103 அடிகளும், மிகுந்தது 782 அடிகளும் கொண்ட பத்துப் பெரும் பாட்டுக்களைக் கொண்டது 'பத்துப் பாட்டு' எனப்படும். பெருவழக்கில் உள்ள பாட்டுக்கள் போலாது, நூற்றுக்கு மேற்பட்ட அடிகளை உடையவையாதலால், இவற்றைப் 'பாட்டு' என்றும் 'நெடும்பாட்டு' என்றும் வழங்குவர். இப் பத்துப் பாட்டினுள், ஐந்து 'ஆற்றுப் படை, வகையிலும், நான்கு அகப்பொருள் 'நெறியிலும்' எஞ்சியதாகிய மதுரைக் காஞ்சி, நிலையாமை உணர்த்தும் நீர்மையிலும் இருக்கின்றன. ஆற்றுப்படை நூல்களான திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, (மலைபடுகடாம்) என்பவை முறையே, முருகனது பெருமையையும், கரிகால்வளவன் தொண்டைமான் இளந்திரையன், ஓய்மான் நாட்டு நல்லியக் கோடன், நன்னன் சேய் என்ற செல்வத்தலைவர்களின் பெருமையையும் எடுத்துரைக்கின்றன. இடையிடையே அவருடைய நாட்டின் வளங்களையும், மக்களுடைய பண்பாடுகளையும், சுருங்கிய சொற்களில், பொருள் விரிந்து விளங்குமாறு தொடுக்கப்பட்டிருப்பது இவற்றின் தனிச் சிறப்பாகும். இவற்றிற் காணப்படுகின்ற புலமை நலம், அறிவியல் நெறியில் அணுவளவும் பிசகாமல் அமைந்துள்ளது என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் ஆராய்ந்து உரைக்கின்றனர்.

அகப்பொருள் நெறிபற்றிக் கூறும் பாட்டுக்களுள், தொல்காப்பியர் வகுத்த முறைப்படி, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை என்பன முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. முல்லைப் பாட்டில், தமிழகத்தின் மழைக் காலச் சிறப்பும், அக்காலத்தில் பிரிந்த காதலரின் வரவு நோக்கி வருந்துகின்ற காதலியின் மன நிலையும், அழகுறக் கூறப் பட்டுள்ளன. குறிஞ்சிப்பாட்டில் இளமை நலங்கனியும் ஒருவனும் ஒருத்தியும், காதலராகும் திறமும், அச்சூழ்நிலைக்கு இடம் தரும் மலைக் காட்டில் மலர்ந்திருக்கும் பல்வேறு பூக்களின் வகையும் காணப்படுகின்றன. இதனைக் கண்ட ஆராய்ச்சியாளர்கள், இப் பாட்டு, "பல்வேறு பூக்கள் நிறைந்த மலர்ச்சோலை" என்று போற்றுகின்றனர்.

இவ்வாறே ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு தனிச் சிறப்பைப் பெற்று விளங்குகிறது. பட்டினப்பாலை கடல்கொள்ளு தற்கு முன்னிருந்த காவிரிப்பூம்பட்டினத்தின் அமைப்பும், ஆங்கு நடைபெற்ற வாணிகத்தின் மாண்பும் எடுத்துரைக்கும் ஏற்ற முடையதாக இலங்குகிறது. நெடுநல் வாடையில், போர்க்குச் சென்ற பாண்டிய வேந்தன் ஒருவன், பாசறையில் இருந்து போர் மறவரைக் கண்காணிக்கும் திறமும், மேனாட்டு 'யவனர்கள், காவலராய்ப் பணி செய்கின்ற காட்சியும் காண்கின்றோம். எஞ்சி நின்ற மதுரைக் காஞ்சி, போர் செய்தற்கண் மக்கள் உயிரையும் பொருளாக மதியாது போர்ப் புகழ் பெற வேண்டுமென்று ஊக்கும் திறமும், போரால் ஈட்டப்படும் பொருளும் புகழும் நிலை பெறா என்று காட்டிப் போரில்லாத அமைதி வாழ்வில் அரசர் உள்ளம் செல்லுமாறு தூண்டும் அறிவுரையும் காணப்படு கின்றன. இதில் 'நிலையாமை' பொருளாகப் பேசப்படும் 'காஞ்சித் திணை' வாயிலாக அக்காலத் தமிழ் மக்களிடையே நிலவிய சமயக் கொள்கை புலனாகிறது.

எட்டுத் தொகை: பல்வேறு காலங்களில், பல்வேறு புல வர்கள், அகமும், புறமுமாகிய கருத்துக்களைப்பற்றிப்பாடிய ஆயிரக் கணக்கான பாடல்களின் தொகை நூலே 'எட்டுத்தொகை' எனப் படும். இவற்றுள் 'அகம்' பற்றி வருவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பன. 'புறம், பற்றி வருவன, பதிற்றுப்பத்து, புறநானூறு, என்பன. அகமும், புறமும் ஆகிய இரண்டும் விரவி வருவது பரிபாடல் ஆகும். இவற்றுள் நானூறு நானூறுபாடல்களாகத்தொகுக்கப்பட்டவை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, என்ற நான்குமாகும். ஐங்குறுநூறு என்பது ஐந்நூறு பாட்டுக்களைக் கொண்டது; கலித்தொகை நூற்றைம்பதும், பரிபாடல் எழுபதும், பதிற்றுப்பத்து நூறும் கொண்டவையாகும். ஒருவனும், ஒருத்தியுமாக வெவ்வேறு இடங்களில் பிறந்து வளரும் இருவர், தம்மில்தாம் தனித்துக் கண்டு காதலர் ஆவதும், பிறகு கடிமணம் செய்து கொண்டு கணவன் மனைவியராய் வாழ்க்கை நடத்து வதும் 'அகம்' எனப்படும். பிறகு, அன்னார் மனையின் அகத்து இருந்தும், புறத்தே சென்றும், அறத்தால் பொருள் ஈட்டிப் புகழ் நிறுவுவது 'புறம்' எனப்படும். இவைகள், தமிழுக்கே சிறப்பாக உரிய பொருள் இலக்கிய நயத்தால் மேம்பட்டு

நிற்கின்றன. அன்றியும், அப்புலவர்கள் வாழ்ந்த காலத்து, வீரத் தாலும், கொடையாலும், ஆட்சித் திறத்தாலும் புகழ்பெற்ற வேந்தர்கள், செல்வத் தலைவர்கள், அரச மகளிர் முதலானோரு டைய வரலாற்றுக் குறிப்புகளை நல்குவதிலும் மாண்புறுகின்றன. கடைச் சங்க காலத்துத் தமிழ் மக்களின் தொழில், வாணிபம், அரசு, சமயம், கல்வி, நாகரிகம், பண்பாடு, முதலாயினவற்றை அறிந்து கொள்வதற்கு இந்நூல்கள் பெருந்துணைபுரிகின்றன.

கடைச்சங்க அழிவு: சங்க காலத் தமிழ் வேந்தரை அடுத்து வந்த காலத்தில் களப்பிரர் என்ற நாடோடிகள், நம் தமிழ் நாட்டின் அரசுநிலை கெடுத்துத் தமிழரது தமிழ் வாழ்வைச் சீரழித்தனர். அவர் காலத்தே தமிழ் இலக்கியங்கள் பலவும், தமிழ் தந்த இசை கூத்து முதலியனவும் நிலைசரிந்து இறந்தன. எனவே மூன்றும் சங்கமும், சங்ககாலப் பாண்டியர் குடியோடு அழிய லாயிற்று.

திரமிட சங்கம்: களப்பிரர் காலத்தில் வடநாட்டினின்று புத்தமும் சைனமும் தமிழ்நிலத்திற் பரவின. புத்தரும் சைனரும் ஆங்காங்கே இருந்து, மடங்களும் பள்ளிகளும் அமைத்துத் தமக்குள் சங்கங்கள் நிறுவித் தங்கள் சமயக் கருத்துக்களை மக்களிடையே உரைப்பாராயினர். அங்ஙனம் தோன்றிய சங்கங் களுள், காலத்தால் முந்திய (அதாவது கி. பி. 5–ஆம் நூற்றாண்டு) 'திரமிட சங்கம்' சிறப்புப் பெற்றது எனலாம்.

இச்சங்கம் பாண்டிய நாட்டு மதுரையைச் சூழவுள்ள பகுதி களில் வச்சிரநந்தியின் தலைமையில், தமிழ்ப்பணி புரிந்தது எனச் சைன நூல்களால் தெரிய வருகின்றது. இச்சங்கம் 'சீவக சிந்தாமணி' எழுதிய திருத்தக்க தேவரது காலம் வரையில் (கி. பி. 10–ஆம் நூற்றாண்டுவரை) இருந்திருக்கிறது. இச்சங்கத் தார், பண்டு, கூடலின் ஆய்ந்த தமிழாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவற்றிற்கு முன்னும் பின்னுமாகிய நூல்களைத் தொகுத்து உதவினர். இத் தொகுப்பு நூல்களே 'பதினெண்கீழ்க் கணக்கு' என்று பெயர் பெற்றன. இதில் திருக்குறள், நாலடியார் முதலான பதினெட்டு நூல்கள் அடங்குகின்றன. இவற்றுள், தெய்வப்புலவரின் திருக்குறள், மூன்றும் சங்ககாலத்து நூலாக இருப்பினும், எட்டுத் தொகை பத்துப்பாட்டுப் போலத் தொகை நூல் ஆகாமையால், இதனைப்'பதினெண்கீழ்க்கணக்கி'ல்ஒன்றாகத்

தொகுத்து, அறநூல்களில் தலையாயதாகக் கொண்டனர். மேலும், இச்சங்கத்தை நடாத்தியவர்கள், சைனத் துறவிகளாயிருந்த படியால், அவர்கள் அறநூல்களைமட்டுமே இத் தொகுப்பு நூலில் தொகுத்தனர். கடைச்சங்கம், எவ்வாறு எட்டுத்தொகையும் பத்துப் பாட்டுமாகிய பதினெட்டு நூல்களைத் தொகுத்ததோ, அவ்வாறே இச்சைன முனிவர்களும் பதினெட்டு நூல்களைத் தொகுத்துத் தந்தனர்.

பதினெண் கீழ்க்கணக்கு: இத்'திரமிட சங்கத்தாரால், தொகுக்கப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கினுள், கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது ஆகியவை அகப்பொருளும், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, களவழி நாற்பது, கைந்நிலை, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகியவை புறப்பொருளும், திருக்குறள், நாலடியார் இரண்டும் அகமும் புறமுமாகிய இருவகைப் பொருளும் கூறுகின்றன. இவற்றுள் திருக்குறளும், அகப்பொருள் நுவலும் நூல்களும் கடைச்சங்க காலத்து நூல்கள். ஆயினும், தனித்தனி நூல்களாக இருந்தமையின், தொகை நூல்களைத்தொகுத்தோரால் விலக்கப்பட்டன போலும். இவற்றுள், 'பழமொழி நானூறு' என்பது, தமிழ் மக்களிடையே பன்னூறு ஆண்டுகளாகப் பழக்கவழக்கங்களில் நின்று நிலவிய அரசியல், சமயம், பொருள், தொழில் ஆகியவற்றைப் பற்றி எழுந்த பழமொழிகள் நானூறுகொண்டது. இவ்வெல்லாவற்றிற்கும் முடி மணியாக விளங்கும் திருக்குறள் காலத்தால் தொன்மையும் பொருட் சிறப்பால் தலைமையும் உடையது என்பது உலகம் அறிந்த செய்தி.

ஐம்பெருங்காப்பியங்கள்: திரமிட சங்கத்தின் இறுதிக் காலத்தில் இரண்டு காப்பியத் தொகுதிகள் உருவாக்கப்பட்டன என்பது, திருத்தக்க தேவர் வரலாற்றால் தெரிகின்றது. அவை ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் எனப்படும். திரமிட சங்கம் தோன்றுதற்கு முன் எழுந்தனவும், அதன் காலத்தனவுமாகவுள்ள காப்பியங்களின் தொகுதிகளே இவைகள். சிலப்பதிகாரமும், மணிமேகலையும், முன்னெழுந்தவை. ஏனைய சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, ஆகியன திரமிட சங்க

காலத்தவை. இவ்வைந்தும் 'ஐம்பெருங்காப்பியங்கள்' எனப்படும். சிலப்பதிகாரத்தால், சைனசமயம் தமிழகத்திற்குள்புகுந்த வரலாற்றைக் காணுகின்றோம். மணிமேகலையால் பௌத்த சமயம் தமிழகத்தில் பெற்றிருந்த செல்வாக்கை அறிகின்றோம். சீவகசிந்தாமணியால் சைன சமயத்தின் அருமை பெருமைகளை நம்மால் அறிய முடிகின்றது. ஏனைய வளையாபதியும், குண்டலகேசியும் இறந்து ஒழிந்தன.

இனி ஐஞ்சிறு காப்பியங்களாவன: சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயண குமார காவியம் ஆகும். இவற்றுள் நாககுமார காவியம் இறந்து ஒழிந்தது. இக்காவியம் ஐந்தும் சைன சமயக் கருத்துக்களையே நுவல்வன ஆதலால் இவற்றைக் 'காப்பியம்' என்பதைக் காட்டிலும் 'சைன சமய நூல்கள்' என்று கூறுவது சாலப் பொருந்தும். இத்திரமிட சங்கம், முதல் மூன்று சங்கங்களைப் போல் அல்லாமல், சைன சமய சங்கமாகவே விளங்கியதால், இது பழைய சங்கங்களின் வரிசையில் இடம்பெறவில்லை.

நான்காம் தமிழ்ச் சங்கம்: பல்லவர் காலத்தில், வடமொழியின் செல்வாக்கினாலும், சைன சமய ஆதிக்கத்தினாலும் இறந்த கடைச் சங்கத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் திறத்தைச் செந்தமிழ்ப் பாண்டிய நாடு இழந்தது. அக்காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர், பாண்டிய நாட்டிற்கு வந்தபோது,பண்டுசங்கம் இருந்து தமிழ் ஆய்ந்த செய்தியைத் தமது திருப்புத்தூர்த் திருத்தாண்டகத்தில் எடுத்துக்காட்டி அறிவுறுத்தியும், இடைக்காலப் பாண்டியர் காலத்தில் வாழ்ந்த மாணிக்கவாசகர், தமது திருக்கோவையாரில் சங்கத் தமிழ் ஆராய்ச்சியைச் சிறப்பித்துக் கூறியும் தமிழ் மக்கள் உள்ளத்தில் எழுச்சி பிறக்கவில்லை. பல்லவர் ஆட்சி வீழ்ந்தபின், பாண்டியர் சோழர்து ஆட்சி செல்வாக்கு எய்தியும்கூடத் தமிழரிடையே மொழியுணர்ச்சி வளம் பெறவில்லை. அவ்வப்போது தோன்றிய சேக்கிழார், கம்பர்,கச்சியப்பர் போன்ற புலவர் பெருமக்களும் தாம் தாம் செய்த இலக்கியப் பணியோடு நின்றுவிட்டனரே யன்றிச் சங்கத்தின் வாயிலாகத் தமிழை வளர்க்க வேண்டும் என்ற முயற்சியில் கருத்துச் செலுத்தினரல்லர். நாடாண்ட பாண்டிய மன்னர்களும், பண்டு சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தம்முன்னோர் பெருமைகளைச்

தமக்கேற்றிக் கல்லிலும் செம்பிலும் பொறித்துக் கொண்டார் களேயொழியச் சங்கத்தைப் பற்றி நினைத்தார்கள் இல்லை. அவர்கள் காலத்தும் வடமொழியாளர் செல்வாக்குமிக்கிருந் தமைக்கு அவர்களுடைய கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் சான்று பகர்கின்றன.

இதற்கிடையே நாட்டில் நிகழ்ந்த அரசியல் வேறுபாடு களாலும், சமய சமுதாய மாறுபாடுகளாலும், தமிழர் வாழ்வே ஒருமை குலைந்து, பெருமை இழந்து, பிறர்க்கு அடிமைப்பட்டு வாழும் கீழ்நிலை எய்தியது. அதனால் தமிழ் இலக்கியத்தையோ தமிழ்ச் சங்கத்தையோ நினையாது தாழ்வுற்றனர்.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டி மன்னர்கள் காலத்தில் மாறை நாட்டில், தஞ்சாக்கூரில் (இராமநாதபுரம் மாவட்டம்) இருந்து, ஆட்சிபுரிந்த குறுநிலத் தலைவன் வாணன் என்பவனைக் 'கோவை' பாடிச் சிறப்பித்த பொய்யாமொழிப் புலவர், மதுரையில் தமிழ்ச் சங்கத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அப்போதைய பாண்டிய அரசு ஆதரவு நல்காமையின் அம்முயற்சி தோல்வியுற்றது என்று 'தமிழ் நாவலர் சரிதை'யால் தெரிகிறது. பின்னர் வந்த நூற்றாண்டுகளில் தெலுங்கர், முகமதியர், ஐரோப்பியர் ஆகிய வேற்றுமொழியாளரது ஆட்சி பாண்டி நாட்டில் நிலவினமை யின், தமிழ் மக்கட்குத் தங்கள் தாய்மொழியாகிய தமிழை வளர்த்தற்கு வாய்ப்பில்லாதுபோயிற்று. ஆங்காங்குத்தோன்றிய புலவர்களும், தங்கள் வாழ்க்கைக்கு உரிய கருவியாகத் தமிழைப் பயன்படுத்தினரேயன்றித் தமிழுக்காகத் தங்கள் வாழ்க்கையைப் பயன்படுத்தவில்லை. இச்சூழ்நிலை 20-ஆம் நூற்றாண்டுத்தொடக்கம் வரை தமிழ் நாட்டில் நீடித்திருந்தது. தமிழ் செய்த தவப் பயனாகச் சேதுமன்னர் குடியைச் சேர்ந்தவரும், இராமநாதபுரத்துச் சீமையை மேற்பார்த்து ஆட்சி புரிந்தவரு மாகிய பொன்னுச்சாமித் தேவரின் அருந்தவப் புதல்வராய்ப் பாண்டித்துரைத் தேவர் தோன்றினர். அவர் பைந்தமிழை வளர்க்கும் பெருநோக்கம் கொண்டு 'நான்காம் தமிழ்ச் சங்கத்'தை மதுரைமாநகரில் நிறுவினர். அவர் நிறுவுவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

தமிழ் நாட்டில் தமிழறிஞர் பலர் இருந்தனராயினும், அவர் ஆங்காங்குக் குடத்திலேற்றிய விளக்கைப்போல ஒடுங்கிக்

இட்ந்தனர். தமிழ்ப் பற்றுள்ளவர் எவரெவர் என விரல்விட்டு எண்ணிவிடலாம்! தமிழ் பயிலும் மரபு குன்றிவிட்டமையால், நாட்டில் தமிழ் ஒளி மழுங்கியிருந்தது. அக்காலத்து ஆங்கிலம் கற்றவரிற் பெரும்பாலார் தமிழைப் புறக்கணித்து வந்தனர் ஆகவே தமிழ் நாட்டில் முறையாகத் தமிழ் படிப்பாருமில்லை; படிப்பிப்பாருமில்லை. பள்ளித் தமிழ்க் கல்வியும் போதிய அளவில் இல்லை. சுவையினும் கவித்திறத்திலும் பொருள் விளக்கும் ஆற்றலும் ஏனைய மொழிகளுக்குச் சற்றும்குறையாது, தொன்று தொட்டு வழங்கிவரும் நம் மொழிக்கு மக்களின் ஆதரவு இன்மையால் ஏற்பட்ட தள்ளாட்டத்தைப் போக்க, வழி வகுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் பாண்டித்துரைத் தேவர் தம் உள்ளத்தே ஊறிக் கிடந்தது.

தேவரவர்கள், 1899–இல் சென்னை சென்று திரும்பும் போது, திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்று, அருட்டிரு ஞானியா ரடிகளைக் கண்டு மகிழ்ந்தனர். தேவர் தலைமையில், அடிகளார், 'தற்கால நிலை' என்ற பொருள் பற்றிப் பேசினர். அப்பேச்சின் போது, "மதுரையில் செல்வர் பலர் சேர்ந்து தமிழ்ச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தித்தமிழ்வளர்ச்சிக்குஏற்பாடுசெய்யவேண்டும்" என அடிகளார் குறிப்பிட்டார். தேவரவர்களும் ஆவன செய்வ தாக வாக்களித்துத் தம்மூர் திரும்பினர்.

அடிகளாரின் கருத்துக்கு அரண் செய்வதுபோல் மற்று மொருநிகழ்ச்சி ஏற்பட்டது. ஒருமுறை பாண்டித்துரைத் தேவர், மதுரை வந்தபோது, சிலகுறிப்புக்கள் நினைவுகூர்தற்பொருட்டுத் திருக்குறளும், கம்பராமாயணமும் எவரிடமாது இருந்தால் வாங்கிக் கொண்டு வருமாறு ஆள் அனுப்பினர். ஆனால் எவரிட மும் இவ்விரு நூல்களும் இல்லை. சங்கம் வளர்த்த தமிழ் மதுரை யில் தமிழ் நூல்களாகிய குறளும், கம்பராமாயணமும் ஒருவரிடத் தும் இல்லாமைகண்டு மனம் கவன்ற பாண்டித்துரைத் தேவர், மதுரை நகரில் 'தமிழ்ச் சங்கம்' ஒன்றை எவ்வாற்றானும் தொடங்கவேண்டுமென உள்ளத்தே உறுதி பூண்டார். 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியர்' ஆதலின் அவரது, முயற்சியில் 1901–ஆம் ஆண்டு சேதுபதி உயர்பள்ளிமண்டபத்தில், சேதுமன்னர் திருமுன்னர், 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' தோற்று விக்கப்பெற்றது. இதற்குப் பேருதவி புரிந்த பெருந்தகையாளர் இராமநாதபுரத்து அரசர் ஆவார்.

14-9-1901-இல், இத்தமிழ்ச்சங்கத் தொடக்கவிழா, மூன்று நாள் விழாவாக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவிற்குத் தமிழகத்தினின்று புலவர் பலர் திரண்டு வந்திருந் தனர். கீழ்க் கண்ட நோக்கங்களைக்கொண்டு 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' செயலாற்றத் தொடங்கியது.

(1) மாணவர் தமிழ்கற்கும் வண்ணம் கலாசாலை ஒன்று அமைத்தல். அவர்கள் ஊக்கத்துடன் கற்கவேண்டும் உதவி செய்தல்.

(2) அச்சுநூல்களும், பழைய ஏட்டுச்சுவடிகளும்அடங்கிய ஒரு தமிழ்ப் புத்தகசாலை அமைத்தல்.

(3) ஒரு நல்ல தமிழ் அச்சுக் கூடம் அமைத்துச்சங்கத்தின் பெயரால், பெரும்பான்மை இலக்கண இலக்கியங்களும், மற்றும் தமிழ் வளர்ச்சிக்கான பொருள்களும் அடங்கிய ஒரு 'திங்கள் இதழை' வெளியிடுதல்; அச்சுக்கு வராத அரிய நூல்களை அச் சிட்டு வெளிப்படுத்தல்.

(4) அரிய தமிழ் நூல்களுக்கு உரை எழுதுவித்தல்; பிற மொழிகளின் பயனுள்ள நூல்களை மொழி பெயர்த்தல்; தற்காலச் சரித்திரத்தொடர்பாக உள்ள பல நூல்கள், நாட்டு வரலாறுகள், புலவர்வரலாறுகள், முதலியன இயற்றுவித்தல்; பழையசாசனங் களைத்தேடி வெளிப்படுத்தல் முதலியன.

(5) ஆண்டுதோறும் ஒரு தமிழ்ப் புலவர் அவையைக் கூட்டி, அதில், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வேண்டிய பொருள்களைப் பற்றிப் பேசுதல்; தமிழ் கற்றவர்கட்கு, அவர் தகுதிக்கேற்பச் சிறப்புப் பெயர் அளித்தல்; அரங்கேற்றும் நூல்கள், உரைகளை ஒப்புக்கோடல் முதலியன.

(6) தமிழ் நூல், உரை எழுதி வெளிப்படுத்துவோர்க்கு, முடியுமாயின் பொருள் உதவிபுரிதல்.

(7) தமிழ் நூல்களின் அருமை பெருமைகளைப் பலரும் அறியும் வண்ணம் அடுத்தடுத்துச் சொற்பொழிவுகள் செய்வித் தல்; அவற்றைத் தனி இதழ்கள் வாயிலாக அச்சிட்டுப் பரவச் செய்தல்.

(8) கலாசாலைகளில் தமிழ் வளர்ச்சியைக் கவனித்து வருமாறு அரசாங்கத்தாரையும், பல்கலைக் கழகத்தாரையும் வேண்டிக் கொள்ளல் முதலியன.

இச்சிறப்பு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இத்தமிழ்ச் சங்கம் செய்த செயல்கள் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கன பின்வருமாறு:

(1) தனித் தமிழ்த் தேர்வுகள் நடத்தி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழ்ப் புலவர்களை உருவாக்கிய பெருமை இத் தமிழ்ச் சங்கத்திற்கே உண்டு. தமிழில் மூவகையான தேர்வுகள் வைத்தும், 'பண்டிதர்' என்னும் பட்டம் அளித்தும், பரிசுகள் வழங்கியும், புலவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்துள்ளது இச்சங்கம். பண்டிதர் அ. கோபாலஐயர், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், அ. கந்தசாமிப்பிள்ளை, பு. சி. புன்னைவனநாத முதலியார், ஆ. கார்மேகக்கோனார், போன்ற பெருந் தமிழ்ப் புலவர்கள், இச்சங்க வாயிலாக வெளிப் போந்த தமிழ்ப் புலவர்கள் ஆவர். இன்று, சென்னைப் பல்கலைக் கழகத்தார், தமிழ்த் தேர்வுவைத்து 'வித்துவான்' முதலான பட்டங்கள் வழங்குவதற்கு வழிகாட்டியாக இருந்தது இம் மதுரைத் தமிழ்ச் சங்கமேயாகும் என்று கூறுவது மிகையாகாது.

(2) 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' ஒன்றை அமைத்துக் கற்றுவல்ல பெரும் புலவர்களைக் கொண்டு, மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டது. சங்கத்தில் தங்கிப் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டன. இவர்கட்கு இலவச உணவு, உடை, உறையுள் முதலியன அளிக்கப்பட்டன. சில மாணவர்களுக்கு உதவித் தொகையும் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கலாசாலையிற் படித்து வெளியேறிய பலர், நிறை புலமையாளராகத் தமிழகத்தில் இன்று விளங்கி வருகின்றனர்.

(3) 'பாண்டியன் புத்தகசாலை' என்ற பெயரில் பெரிய நூல்நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. தமிழகத்தில் வேறெங்கும் காணக்கிடைக்காத அரிய பல தமிழ் நூல்களும், ஆங்கிலம், வடமொழி முதலான பிறமொழி நூல்களும், இப்புத்தகசாலையில்

தொகுக்கப்பட்டுப் பொதுமக்களுக்கும், புலவர்கட்கும் மாணவர் கட்கும் படிப்பதற்கென வழங்கப்பட்டன.

(4) தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலும், ஆயிரக் கணக்கான ஏட்டுச் சுவடிகள் பேணுவாரற்றுக்கரையான்களுக்கு இரையாகி நின்றன. அதனால் அரிய பல இலக்கியங்கள் அழிந் தொழிந்தன. தமிழர் தம் கல்வியறிவின்மையால் ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் ஏடுகளை மிதக்கவிட்டனர்; நெருப்பிலிட்டுக் கொளுத்தினர். இவ்விழிநிலையை எண்ணிப் பார்த்து மனம் பொறாத பாண்டித்துரைத் தேவர், ஏடுகள் தொகுத்து வைக்கும் பெருமுயற்சியை மேற்கொண்டார். அவர், மு. ரா., கந்தசாமிக் கவிராயர் போன்ற பெரும் புலவர்களைத் தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்கு அனுப்பி, ஏட்டுச் சுவடி களைக் கொண்டு வரச் செய்து, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தொகுத்து வைத்தார். இன்னும் இவ் அரிய சுவடிகள் சில வற்றைச் சங்கத்தில் காணலாம். இச்சுவடிகளை வீணேதொகுத்து வைத்தால்மட்டும் உரிய பலன் கிடைத்துவிடாது என்று கருதிய தேவர், தக்க புலவர்களைக் கொண்டு அவற்றை ஆராயச்செய்தார். ஒருவர் சொல்ல மற்றவர் எழுதுவதனாலும், ஒன்றினின்று மற்றொன்றைப் பெயர்த்து எழுதுவதனாலும், எழுத்தாணி கொண்டு எழுதுவதனாலும், இடர்ப்பாடுகள் நேர்ந்தமையினாலும், கரையான் அரித்தமையினாலும், இவ்வேட்டுச்சுவடிகள், சிதைந் தும், உருமாறியும், பிழைபட்டும் காணப்பட்டன. மேலும் படிப் போர் பொருள் தோன்றாது மயங்கிய வழித் தத்தமக்குத் தோன் றும் பொருளுக்கேற்பத் திருத்திக்கொண்டனர். இன்னும் சிலர் உரையிடைப் பொருள் விளக்க வேண்டிச் சிற்சில இடங்களில் தங்கள் விருப்பம் போல் செருகலாகச் சில உரைகளைச் சேர்க்க லாயினர். இங்ஙனம், தமிழ் ஏடுகள் உருவழிந்துகிடந்தன. எனவே, இவற்றைத் தக்க முறையில், நல்ல தமிழ் இலக்கியங்களை அச் சேற்றுவதற்கு ஆவன செய்தார் பாண்டித்துரைத் தேவர். பெரும் புலவராய் விளங்கிய சே. ரா. அருணாசலக் கவிராயர் போன்றவர் களைக் கொண்டு, இவ்வேடுகள், பரிசோதிக்கப்பட்டு, வெளியாக் கப்பட்டன. இம்முறையில் இதுகாறும் அச்சில் ஏறாதனவாகவும், அரிதாகக் கிடைக்கக் கூடியனவாகவும் உள்ள சில ஏடுகள் நூல் வடிவிற் காட்சியளித்தன. அங்ஙனம் வந்த நூல்களில், ஆரியன் வாகட வெண்பா, உதரக்கிரியை, திருச்செந்தூர்ப் பரணி முதலியன குறிப்பிடத்தக்கன.

(5) சிறந்த இலக்கண, இலக்கிய, சோதிட, மருத்துவ அகராதி நூல்களைச் சங்கம் தனது அச்சுக் கூடத்தின் மூலம் அச்சேற்றி, எளிய விலைக்கு வழங்கி வந்துள்ளது. இதுவரை வெளிவந்த எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களில், தமிழ்ச் சொல்லகராதி (மூன்று பாகங்கள்) தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை, மாறனலங்காரம், பழமொழி மூலமும் பழைய உரையும் வைத்தியசாரசங்கிரகம், பன்னூற்றிரட்டு, ஞானாமிர்தம் முதலியனவும்குறிப்பிடத்தக்கன.

(6) சங்கத்தின் வாயிலாகத் திங்கள்தோறும் வெளிவரும் 'செந்தமிழ்' என்ற இதழில், அரிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கிய அறிஞர்கள் பலராவர். அரசஞ் சண்முகனார், சே. ரா, அருணாசலக் கவிராயர், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் ந.மு. வேங்கடசாமிநாட்டார், அ. கோபிநாதராவ், சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர், கி. இராமானுசஐயங்கார், P. S. சுப்பிரமணியக் கவிராயர், வை. சுந்தரேசவாண்டையார், J. M. நல்லசாமிபிள்ளை, பெ. நா. அப்புசாமி, அ. கோபாலஐயர், அப்துல்காதர் இராவுத்தர், ஆப்ரகாம்பண்டிதர், மாகறல் கார்த்திகேய முதலியார், யாழ்ப்பாணம் சி. கணேசஐயர், மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை, சர்க்கரை இராமசாமிப் புலவர், ச. கந்தையாபிள்ளை, அ. குமாரசாமிப்பிள்ளை, வெ. பெ. சுப்பிர மணியமுதலியார், திரு நாராயணஐயங்கார், மு.இராகவஐயங்கார், டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், கனகசபைப்பிள்ளை, ரா. இராகவ ஐயங்கார் ஆகியோரும், இன்னும் பல புலவர்களும் 'செந்தமிழ்' எழுதியுள்ளகட்டுரைகள் அறிவுக்கு நல்விருந்தாய் அமைவன.

இத்தகு ஆராய்ச்சிக் கட்டுரைகள், உ. வே. சாமிநாதஐயர் அனந்தராம ஐயர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், மு. இராகவஐயங்கார், ரா. இராகவஐயங்கார், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, பி. டி. சீனிவாச ஐயங்கார், கே. ஜி. சேஷஐயர், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் ஆகியோர் எழுதிய ஆராய்ச்சி நூல்களுக்குப் பெருந்துணை புரிந்தன.

இச்செந்தமிழில் அரிய பல தமிழ்ஆராய்ச்சிக் கட்டுரைகள் மட்டுமன்றி, ஆங்கிலம், வடமொழி நூல்களினின்று மொழி பெயர்க்கப்பட்ட கவிதை, கட்டுரைகள், பௌதிகம், இரசாயனம்

பற்றிய அறிவியற் கட்டுரைகள், கல்வெட்டு,சாசனம்,மருத்துவம், சோதிடம்முதலானவை பற்றிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவற்றைப் படித்துப் பார்ப்பவர் எவரும் அக்காலச்செந்தமிழின் தொண்டை வியவாமலிரார். செந்தமிழில் வெளிவந்த தொடர் கட்டுரைகளிற்சில, தனித்தனி நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

(7) சங்க ஆண்டு விழாக்களை வெளியூர்களில் நடத்தி ஆங்குள்ள மக்களிடையே தமிழ் உணர்ச்சியைப் பெருக்கும் அரிய தொண்டையும் இச் சங்கம் மேற்கொண்டுள்ளது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலும் இன்று தமிழ்ச் சங்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது, இம்மதுரைத் தமிழ்ச் சங்கமேயாகும். இங்ஙனம் தோன்றிய சங்கங்களுள் இன்றும் அரிய தமிழ்ப் பணிபுரிந்து கொண்டிருக்கும் 'கரந்தைத் தமிழ்ச் சங்கத்'தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இவ்வாறு, வரலாறுகாணாத காலத்தில் தோன்றித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டு செய்த தமிழ்ச் சங்கங்களின்வழித்தோன்றலாய் 'நான்காம்தமிழ்ச் சங்கம்' எனத் திகழும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்சார்பாளனாய் வந்து, உங்கள் முன்னிலையில் பேசுதற்குரிய வாய்ப்பை நினைக்கும்போது எனக்கே ஒரு வகையில் மகிழ்ச்சியும் ஒருவகையில் திகைப்பும் உண்டாகின்றன.

மதுரை நகரில் நான் சிறுவனாக விளையாடிக்கொண்டிருந்த போது, என் வீட்டிற்கு அடுத்த இடத்திலேயே, இச்சங்கம் தோன்றி வளர்ந்துகொண்டிருந்த காட்சிகளைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தவன். இளமையிலேயே மேல்நாடு சென்று, அங்கேயே பல்லாண்டுகள் இருந்து கல்வி பயின்றமையால் என் இனிய தமிழ் மொழியாகிய தாய் மொழியினிடத்துப் போதிய அளவு தொடர்பில்லாமற் போயிற்று. நான் திரும்பிவந்த போதும், அரசியல் சுழலில் புகுந்துவிட்டமையால் தமிழ்த் தொடர்பு சிறிதுவிலகியே இருந்தது. தமிழ்ச் சங்கத்து வளர்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தேனாயினும், யானே, பிற்காலத்தில் இச்சங்கத்தின் பெரும் பொறுப்பை ஏற்கவேண்டிவரும் என்று எதிர்பார்க்கவில்லை. இருந்தும் இதனைக் கண்ணும் கருத்துமாகக் கட்டிக் காத்து வந்த என் அரிய நண்பர் டி. சி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் இறுதி நாளில், இச்சங்கத்தின் பொறுப்பை என் மீது சுமத்தினர். என்

உள்ளத்தே என்னையறியாது, ஊறிக்கிடந்த தமிழன்பு, அப் பெரும் பொறுப்பை ஏற்கச் செய்தது. நான் பொறுப்பேற்ற சில நாட்களில் சங்கத்தின் பொன்விழாவினைக் கொண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இப்பொன்விழா 1956-ஆம் ஆண்டு, மதுரை நகரில் ஒரு வாரம் கொண்டாடப்பட்டது. அவ்விழாவுக்கு, யாரும் எதிர் பாராத வகையில் தமிழ் நாடு முழுவதும் ஒருங்கு திரண்டு வந்து, தாங்க முடியாத அளவிலே கலந்து சிறப்பித்தது. இவ்விழா, எல்லோரும் மகிழ்ச்சி கொள்ளும் வகையில் வெற்றியுடன் நடைபெற்றமைக்கு எனது சிறிய தொண்டும் துணை செய்தது என்பதை எண்ணும் போது என் மனம் மகிழ்கிறது. அது காரணமாகச் சங்கத்தோடு உண்டாகிய தொடர்பே,இன்று இங்கு, உலகத் தமிழ்ப் பேரறிஞர் கூடிய இப்பேரவையிற் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. இப் பொன்விழாவின் நினைவுக் குறியாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த 'தமிழ்க் 'கல்லூரி' ஒன்றை நிறுவிச், சங்கம் தமிழ்ப்பணி செய்து கொண்டு வருகிறது.

மேலும், இவ்அனைத்துலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இம்மலேயா நாட்டிற்கு வருவதில் எனக்குத் தனி மகிழ்ச்சியும் ஆர்வமும் உண்டு. தமிழ் மக்கள், பல நாடுகட்கும் சென்று, தங்கள்உழைப்பால்அந்நாடுகளின் இயற்கைவளங்களை மிகுதிப்படுத்தியுள்ளனர். ஆயினும்அந்நாடுகள் அவர்களைத்தங்கள் நாட்டினின்று வெளியேற்றிக்கொண்டிருக்க, இம்மலேயா நாடு ஒன்றுதான் அவர்களை மக்களாகக் கருதி, அவர்கட்கு அன்பு காட்டி, ஆதரவு தந்துகொண்டிருக்கிறது. அன்றியும் இப்போது, உலகநாடுகள் பல, அமைதியின்றி அவதிப்பட்டுக்கொண்டிருக்க, இம்மலாய் நாடு மட்டும் அறம் குன்றாமல், அமைதி இழக்காமல் அன்பும், இன்பமும் பெற்றுவிளங்குகிறது. இத்தகைய நாட்டினை இப்பொழுது காண்பதே என்னைப் போன்றவர்க்கும்பெரும்பேறு.

இங்கு நடைபெறுகின்ற 'இவ் உலகத் தமிழ்ப் பெரு மாநாட்டிற்கு மேன்மை தங்கிய வருகை தந்து, இவ்விழாவைத் தொடங்கிவைத்துத் தமிழையும், தமிழ் மக்களையும் பெருமைப் படுத்தும், மலாய் நாட்டு நல்லரசின் பெருமை தங்கிய தலைமை யமைச்சர் துங்கு அப்துல் ரகுமான் அவர்களைப் பாராட்டி,

அவர்கட்குப் பொதுவாகத் தமிழர் சார்பிலும், சிறப்பாகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும் எனது மனம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரும்பாடுபட்டு, உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று, ஆங்காங்குள்ள தமிழ் அன்பர்களைக்கொண்டு, அமைதிநிலவும் இம்மலாய் நாட்டிலேயே இம் மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று எண்ணி, அதில் வெற்றி கண்ட பேராசிரியர் தவத்திரு தனிநாயகம் அடிகளுக்கும், அவருடைய துணைவர்களுக்கும், அவர்களுக்கு முழு ஆதரவு அளித்த இம்மலாய் நாட்டு நல்லமைச்சர்களுக்கும், இந்நாட்டுப் பெருமக்களுக்கும் எனது பணிவுகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். *

வாழ்க மலாய் நாட்டு அரசு!
வாழ்க துங்கு அப்துல் ரகுமான்!
வாழ்க தமிழ்!

---

* 1966 எப்ரல் 17 முதல் 23 வரை கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ்ர் மாநாட்டில் தமிழவேள் பி. டி. இராசன் ஆற்றிய உரை.

மானிடவியல் [Anthropology]

அந்தமான் தீவு ஓங்கே மக்களின் வாழ்க்கை

சு. சக்திவேல் எம். ஏ.,
(மானிடவியல் ஆராய்ச்சித்துறை, கல்கத்தா)

முன்னுரை:

பல ஆயிரம் ஆண்டுகட்குமுன் தோன்றிய மனிதவினத்தின் சின்னங்களாக விளங்கும் நீக்ரிட்டோ இனத்தைச் சார்ந்த ஓங்கே பழங்குடி மக்கள், இன்றைக்கும் தங்களது பழமையான வாழ்வைக் கைவிடாமல் சின்ன அந்தமான் தீவில் வசித்து வருகிறார்கள். தொடக்கத்தில் நடத்திய வாழ்வு போன்று தான் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்து வருகிறார்கள். சின்ன அந்தமான், பெரிய அந்தமான் தீவிற்குத் தெற்கே இரட்லண்டு தீவிலிருந்து முப்பது மைலுக்கப்பால் உள்ளது. இவர்களைத் தவிர இத்தீவில் ஜராவா, சென்டினலீல் என்ற வேறு பழங்குடிகளும் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இப் பழங்குடிகள் பயங்கரமான தன்மையுடையவர்களாதலால், இவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள முடியவில்லை. ஓங்கே மக்கள் காடுகளில் அலைந்து உணவு தேடும் நாடோடிப் பழங்குடிகளாவர்.

ஓங்கே மக்களுக்கு விவசாயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. உலகிலுள்ள பழங்குடி மக்களில் இவர்களுக்கு மட்டும்தான் நெருப்பு எப்படி உண்டாக்குவது என்பதுகூடத் தெரியாது. இம்மக்களுக்கு மூன்றுக்கு மேல் எண்ணவும் தெரியாது. வேட்டையாடுதல், மீன்பிடித்தல், ஆகியவைகளே முக்கிய தொழில்களாகும். இவர்கள் கிழங்குவகைகள், கனிவகைகள், தேன்முதலியவற்றைச் சேகரிக்கிறார்கள். ஓங்கே மக்கள் தங்களை 'என்இரேகலே' என்று அழைத்துக்கொள்கிறார்கள். என்இரேகலே என்றால் உண்மையான மனிதர்கள் என்று பொருளாகும். இன்றும் ஓங்கே மக்கள் நிர்வாணமாகத்

தான் திரிகிறார்கள். பெண்கள் கூடத் தங்களது மறைவிடத்தை ஓரளவுதான் மறைத்துக் கொள்கிறார்கள். அவர்களிடையே எவ் விதப் பூசல்களையும் காணமுடியாது.

தங்குமிடம்:

ஓங்கே மக்கள் நாடோடி வாழ்க்கையினர். எந்த இடத்திலும் சேர்ந்தாற்போல் வாழ்வதில்லை. ஓங்கே மக்களின் பெருங்குடிசைகளைப் பற்றி ஆராய்வதே அவர்களைப் பற்றி அறிவது போன்றதாகும். பெரிய பொதுக் குடிசைகளில்தான் பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்கின்றன. அக்குடிசைகளில்தான் திருமணமும், இறந்தவர்களைப் புதைத்தலும் மழைக் காலங்களில் தங்கியிருத்தலும் நடைபெறுகின்றன. மாதத்திற்கொரு முறைஒரு குடிசையிலிருந்து வேறொரு குடிசைக்கு மாறிக்கொண்டே யிருப்பர். காட்டுப் பொருட்களைச் சேகரிக்கக் காட்டினிடையே தங்கியிருக்கும் பொழுது தற்காலிகக் குடிசைகளை அமைத்துக் கொள்வர். வேட்டைக்குச் செல்லுமிடத்திலும், குடிசையமைத் துக் கொள்வார்கள். அதற்குக் கோரலே என்று பெயர். பொதுக் குடிசையானது வட்டவடிவமாக அமைந்திருக்கும். குடிசை யினுள்ளே எவ்விதத்தடுப்பும்கிடையாது.படுக்கைஅறைக்குக்கூட தடுப்புக் கிடையாது. எனவேதான் கூரையானது தரைவரை வேயப்பட்டிருக்கும். உச்சியில் புகைபோகச் சிறு இடைவெளியும் உண்டு. நெருப்பானது ஒவ்வொரு கட்டிலுக்கடியிலும் இரவு பகலாக எரிந்துகொண்டேயிருக்கும்.

பிரிவுகள்:

அந்தமான் தீவினரைப் பண்பாடு, மொழி முதலிய வற்றின் அடிப்படையில் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். (I) பெரிய அந்தமான் பிரிவு:- அக-சாரி, அக-கோரா, அக-போ, அக-ஜெரு, முதலிய பிரிவை வடக்குக் குழுவாகவும், அக-கேதே, அக-கோல், ஒகோ-ஜவாய், ஆ-புசிக்குவர், அகர்-பாலே, அக-பியா முதலிய பிரிவைத் தெற்குக் குழுவாகவும் பிரிக்கலாம். (II) சின்ன அந்தமான் பிரிவு:- சின்ன அந்தமானிலுள்ள ஓங்கேக்கள், தென் அந்தமானிலுள்ள ஜராவா, வடக்கு சென்டினலீல் தீவில் வசிப்பவர்கள் எனமூவகையாகப்பிரிக்கலாம் இவற்றில் சின்ன அந்தமானில் வாழும் ஓங்கே மக்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

உணவு:

அவர்களுடைய நிரந்தர உணவு இறைச்சியாகும். அவர்கட்குக் கடலாமையும் சிறந்த உணவாகும். பன்றிகளை வேட்டையாடி அதனுடைய இறைச்சியைப் பல நாட்களுக்கு வைத்து உண்கின்றனர். மீனையும் சிறப்பாக உண்கின்றனர். ஒன்றுமே கிடைக்காத காலத்தில் நண்டு வகைகளை உண்கின்றனர். இவைகளைத் தவிரக் காட்டில்கிடைக்கும்கிழங்குவகைகளையும்சேகரித்து உண்கிறார்கள். பலாவும் அவர்கட்குக் கிடைக்கின்றன. உப்பைத் தங்களது உணவிலும் சேர்த்துக்கொள்ளவே மாட்டார்கள். ஒங்கேமக்கள் காட்டிலுள்ள கிழங்குகளெல்லாம் ஆவிகளுக்குச் சொந்தமானவை என்றும் அவற்றைத் தோண்டிச் சென்றால் அவை சினமுறும் என்றும் நம்புகிறார்கள். அதற்காக இலையும் தழையுமுடையமேற்பகுதியைவிட்டுவிட்டுஅப்பகுதியைஎடுத்துச் செல்கிறார்கள்.

வேட்டையாடலும் மீன் பிடித்தலும்:

ஒங்கேக்கள் வேட்டையாடுவதற்கும் மீன் பிடிப்பதற்கும் வில்லையும் அம்பையும்தான் பயன்படுத்துகிறார்கள். ஒங்கேக்கள் அம்புஎய்தே மீன் பிடிப்பதில் வல்லவர்கள். தற்பொழுதுதான் தூண்டிலையும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். பன்றிகளை வில், அம்பாலே வேட்டையாடுகின்றனர். ஆனால், இன்று நாய்களின் துணை கொண்டு பன்றிகளை வேட்டையாடுகின்றனர். சுமார் 40 ஆண்டுகட்கு முன்பு பர்மா கள்ளக்கடத்தல்காரர்கள் அந்தமான் தீவிற்கு நாய்களைக் கொண்டுவந்தனர். ஆனால் இன்று நாய் இல்லா ஒங்கே மக்களைக் காணமுடியாது. ஒங்கே மக்கள் பன்றிகளை உயிருடன் கொல்லும் தன்மை கொடூரமானதாகும்.நாய்கள்மூலமாகப் பெறக்கூடிய பன்றி இறைச்சியில்லா ஒங்கே குடியிருப்பைக் காணவேமுடியாது.

தேன் சேகரிப்பு:

தேன்சேகரிப்பதில்இவர்கள்வல்லவர்கள்.மரத்திலேறுபவர் தேனீக்களுக்குப் பிடிக்காத இலைகளின் சாற்றை உடலிலே பூசிக்கொள்வர். வாயிலிலும் சில இலைகளைப் போட்டுக்கொண்டு மரத்திலேறித் தேன் கூட்டில் ஊதுவர். அம்மணத்தை ஏற்றுக்கொள்ளாமல்தேனீக்கள் ஓடிவிடும் பின்புதேனைச்சேகரிப்பார்கள்.

தேன் இவர்கட்கு முக்கிய உணவாகும். தேன் கூட்டைக் கலைக்கவும் நத்தை இனப் பிராணியைக் கொல்லவும் வாய்ச்சி என்ற கருவியைப் பயன்படுத்துகிறார்கள்.

கலன்களும் கருவிகளும்:

இவர்களுடையமுக்கியகருவிகள்வில்லும் அம்புமாகும். கிழங்குகளைத் தோண்ட தோண்டுகழியைப் பயன்படுத்துகிறார்கள். 18-ஆம் நூற்றாண்டிற்குப் பின்புதான் இரும்பைப் பயன்படுத்தத் தொடங்கினர். மண் பாண்டங்களில் சமைக்கிறார்கள். மூங்கிலால் செய்யப்பட்ட கூடைகளில் தண்ணீர் சேமித்து வைத்துக்கொள்கிறார்கள். துடுப்புகளையுடைய நீண்ட படகுகளை வைத்துக்கொள்கின்றனர்.

சமூக வாழ்க்கை:

ஓங்கே பழங்குடிகள் புறமணப்பகுப்பைச் சார்ந்தவர்கள். கணவனும் மனைவியும் வாழ்க்கைத் துறையில் பங்கு பெறுவது போலவே, பொருளாதாரத்துறையிலும்பங்குபெறுகிறார்கள். குடிநீர் கொண்டுவருவதும் சமைப்பதும் விறகு கொணர்வதும் மனைவியின் வேலைகளாகக் கருதப்படுகின்றன. நெருங்கிய உறவில் திருமணம் செய்துகொள்வது தடுக்கப்படுகின்றது. ஆணும் பெண்ணும் தங்களது தோற்றம், வண்ணம் பெறவும் உடல் திண்மையடையவும் உடம்பிலுள்ள தோலைச் செதுக்கிக் (Scarification) கொள்கிறார்கள். சின்ன அந்தமான் தீவில் ஆண் பெயருக்கும் பெண் பெயருக்கும் அவ்வளவு வேறுபாடு இல்லை. இளம் வயதினர் தலையைச் சுற்றி வட்டவடிவமாகச் சிரைத்துக் கொள்கிறார்கள். முடி திருத்தும் வேலையைப் பெண்கள் உடைந்த கண்ணாடியாலும் படிகக்கல்லாலும் செய்கின்றனர். பெண்கள் கூடை, வலை முதலியவற்றைப் பின்னுவதுமுண்டு. ஒரே கால் வழியைச் சார்ந்த அனைவரும் பொதுக் குடிசை ஒன்றினுள் வாழ்கிறார்கள்.

பெரிய அந்தமான் தீவு மொழிகட்கும் சின்ன அந்தமான் தீவு மொழிகட்கும் சிறிதளவே உறவு உள்ளது. இம்மொழிகள் வகைப்படுத்தப்படாத பிரிவின் கீழ்ச் சேர்க்கப்படுகின்றன.

பருவச் சடங்குகள்:

ஆண்களின் பருவச் சடங்குகள்:

ஆண்களின் பருவச் சடங்கு பெரும்பாலும் மழைக் காலமாகிய மே-அக்டோபர் மாதங்களில் நடத்தப்படுகின்றது. ஒங்கேபையனுக்குப் பதினான்கு அல்லது பதினைந்து வயது வந்தவுடன் அவனது உறவினர்கள் குறிப்பிட்டநாளில்பன்றிவேட்டையாடச் செல்வார்கள். அவற்றைக் கொல்லாமலேயேஅப்பையன் இருக்குமிடத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அதே நாள் மாலை அப்பன்றியின் இரத்தத்தை எடுத்து இலையில்வைப்பார்கள். பின்பு அப்பையனை அப்பன்றியின் வயிற்றில் உட்காரச் செய்வர். அவ்வாறு உட்கார்ந்த பின்பு, அப்பையனுடைய மூத்த சகோதரி அல்லது தந்தையானவர் பன்றியின் இரத்தத்தை எடுத்து,அவன் வாயில்வைத்து உண்ணச்செய்வர். அவன் உண்ணும் பொழுது சில மந்திரங்கள் ஓதப்படும். பின்பு அப்பையனைக் கட்டிலுக்கு அழைத்துச் சென்று உடம்பை வெம்மைப்படுத்துவார்கள். இச்சடங்கு நடத்தப்படாவிட்டால் அப்பையன் வயிற்றுவலியால் துன்பப்படுவான் என அவர்கள் நம்புகிறார்கள்.

அப்பையன் மூன்று நாட்களுக்குக் குடிசையிலேயே தங்கியிருக்க வேண்டும். பகலிலும் இரவிலும் கூடத் தனது வயிற்றை இரு கைகளாலும் மூடிக் கொள்ள வேண்டும். இந்நாட்களில் வெளியே வரவோ, இறைச்சி உண்ணவோ கூடாது. அவனுக்கு இரத்தம் கொடுப்பவரும் மூன்று நாட்களுக்குப் பன்றி, ஆமை முதலியவற்றை வேட்டையாடவோ அல்லது அவற்றை உண்ணவோ கூடாது.

மூன்று நாட்களுக்குப் பின், அப்பையன் கடலுக்கோ அல்லது அருகிலுள்ள நீர்நிலைக்கோ சென்று குளிக்க வேண்டும். பின்பு அவனதுஉடலில் வெள்ளைக்களிமண்ணால்வண்ணம்தீட்டப்படுகின்றது.இரத்தம்கொடுத்தவனுக்குஅவனதுமனைவியானவள் அவனது தலையில் மஞ்சட் காவி மண்ணால் வண்ணம்தீட்டுகிறாள். இச்சடங்கு முடிவதைக் குறிக்கும் பொருட்டு அன்றிரவு எல்லா ஒங்கே மக்களும் ஒன்று கூடிப் பாட்டுப்பாடிக்கொண்டு நடனமாடுவார்கள். இச்சடங்கு ஒங்கே மொழியில் தன்கிரு என்றழைக்கப்படுகின்றது. இச்சடங்கு முடிந்தவுடன் அப்

பையன் வழக்கம் போல் இறைச்சி உண்ணலாம்; வேலையும் செய்யலாம்.

பெண்களின் பருவச் சடங்குகள்:

பெண்கள் பூப்படைந்தவுடன் பெண்களின் பருவச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. இந்நாட்களில் அப்பெண் படுக்கையில் படுத்துக்கொள்ளலாம். ஆனால், அவளது கைகள் வயிற்றின் மேல் இருக்க வேண்டும். இச்சமயத்தில் எவ்வேலையும் செய்யவிடுவதில்லை. அவள், பன்றி, ஆமைகளின் இறைச்சியை உண்ணக்கூடாது. ஆனால், கனி, கிழங்குவகைகளை உண்ணலாம். அவளுடைய முகத்தில் அடிக்கடி சாம்பல் பூசுகின்றனர். முதல் மாதவிடாய் முடிந்தவுடன் கடலுக்குச் சென்று குளிக்கிறாள். அவளது நெருங்கிய உறவு முறைப் பெண்கள் அவளது உடலில் வெள்ளை, சிவப்புக்களிமண்ணால்வண்ணம்தீட்டுகிறார்கள். செந்நிற மஞ்சட் காவிமண்ணைப் பன்றியின் கொழுப்பில் கலந்து அவளது தலையில் சித்திரம் தீட்டுவதுமுண்டு. அவர்களும் தங்களுடைய உடம்பில் வர்ணம் பூசிக் கொள்கிறார்கள். பின்பு அப்பெண்ணுடன் சேர்ந்து கொண்டு அனைவரும் நடனமாடுகிறார்கள். பருவமடைந்த பிறகு அப்பெண்ப் போரங்கபெகி என்றழைக்கப் படுகின்றாள். இச்சடங்கு 'தமலே-அங்கபே' என்றழைக்கப் படுகின்றது.

திருமணம்:

ஓங்கே மக்களிடையே இருவகைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. முதலாவது சடங்குத் திருமணமும் பின்பு உண்மைத் திருமணமும் நடைபெறுகின்றன. இத்தகைய பழக்கத்தை வேறு பழங்குடிகளிடையே காணமுடியாது. ஓங்கே மக்களிடையே ஒருதாரமணம் தான் (Monogany) சமுதாயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட வழக்கமாகும், பன் மனைவிகளை மணக்கும் பழக்கம் வழக்கத்திலில்லை. நெருங்கிய உறவில் திருமணம் செய்வதும் தடுக்கப்படுகின்றது. விதவைகளும் மனைவியை இழந்தவர்களும் மறுமணம் செய்துகொள்ளலாம். பெரும்பாலும் பையன்கள் பதினாறு வயதிலிருந்து பதினெட்டு வயதிற்குள் திருமணம் செய்து கொள்கிறார்கள். வாலிபன், வயதான விதவையைத் திருமணம் செய்துகொள்வதும் உண்டு. அதைப் போலப்

பருவமங்கை தன்னைக்காட்டிலும் வயது அதிகமுள்ள மனைவியை இழந்தவரை மணப்பதும் உண்டு.

சடங்குத் திருமணம்:

ஒரு பையனுக்குஉண்மையானதிருமணம் (True Marriage) நடைபெறுவதற்கு முன், அவன் வேறொரு ஆணையோ அல்லது பெண்ணையோ சடங்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். பையனின் பெற்றோர்கள் திருமணமான ஆணையோ அல்லது இளம் பெண்ணையோ மனைவியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். அன்றைய தினம் உறவினர்களனைவரும் பொதுக் குடிசையில் கூடுகிறார்கள். குடிசையினுள்ளே தீப்பந்தங்கள் கொளுத்தப் படுகின்றன. பையன் தன்னுடைய கட்டிலில் அமர்கிறான். பையனின் துணைவி (ஆணாகவும் இருக்கலாம் அல்லது பெண்ணாவும் இருக்கலாம்) வேறொரு கட்டிலில் அமர்ந்திருப்பாள். வயது முதிர்ந்த ஒருவர் அப்பையனை நோக்கி. அத்துணையைஅழைத்துக் கொண்டு அவனது கட்டிலுக்கு வரச் சொல்லுவார். பின்பு அப் பையன் உட்கார்ந்தவுடன் அவனது மடியில் 'மணப் பெண்ணானவள்' அமர்வாள். பின்பு இருவரும் கட்டியணைத்துக் கொள்வார்கள். அதன்பின் துணைவி தனது கட்டிலுக்குச் சென்றுவிடுவாள்.அப்பையனும் துணையும்வழக்கம்போல்தனியாக தூங்குவார்கள். மறுநாள் அவர்களது உறவினர்களிடம் சென்று அவர்களது மடிகளில் அமர்ந்து, கட்டியணைத்துக் கொள்வர். பையன் தன்னுடைய துணையை 'மங்கசேபே' என்றும், துணைவி தன் கணவனை 'மகிசேபா' என்றும் அழைக்கிறார்கள்.

இது முழுக்க முழுக்கப் பாலின உடலுறவில் ஈடுபடாத சடங்குத் திருமணமாகும்.

உண்மைத் திருமணம்:

உண்மைத் திருமணத்தில் மாப்பிள்ளையானவர்பெண்ணைத் தேடிக் கொண்டு, பல பொதுக்குடிசைகளுக்குச்செல்வார். தனக்கு விருப்பமான பெண்ணின் பெற்றோர்களையோ அல்லது உறவினர்களையோஅணுகி, அவர்களுடைய சம்மதத்தைக்கோருகிறார். அப் பெண்ணானவள்அவரைத் திருமணம்செய்யச்சம்மதித்துவிட்டால், திருமணம் நடைபெறுவதில்எவ்விதத் தடையுமில்லை. பெண்ணின் சம்மதமே மிகவும் முக்கியமாகும். ஒரு பெண்ணிற்

குப் பிடிக்காத ஆணை நிச்சயம் செய்தால், அவள் காட்டினுள் சென்று மறைந்துவிடுவாள்.

திருமணங்கள் பெரும்பாலும் பெண்ணின் பொதுக் குடிசையிலேயே நடைபெறுகின்றன. உண்மைத் திருமணத்தின் சடங்குகள் மிகவும் எளிமையானவையாகும். உண்மைத் திருமணத்தில் மணமக்கள் இருவரும் ஒரே படுக்கையில் படுத்து அன்றே முதலிரவும் தொடங்குகிறார்கள். மறுநாள் மணமக்கள் தங்களது உறவினர்களது மடிகளில் அமர்ந்து, கட்டியணைத்துக் கொள்கிறார்கள். அன்றுமாலைமனைவியானவள். தனது கணவனின் உடம்பில் வெள்ளை, சிவப்புக் களிமண்ணால் சித்திரம் தீட்டுவாள். வண்ணம் தீட்டுவதில் ஓங்கே பெண்கள் கைதேர்ந்தவர்கள். உறவுப்பெண்கள் அவளது உடலில் வண்ணம் தீட்டுகிறார்கள். மணப்பெண் அலங்கரிக்கப்பட்ட கச்சை அணிகிறாள். மணமகன் அலங்கரிக்கப்பட்டகயிற்றைக் கழுத்தில் அணிகிறான். உறவினர்களும் உடம்பில் வர்ணம் தீட்டிக்கொள்கிறார்கள். பின்பு அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பாடிக்கொண்டு நடனமாடுகிறார்கள். மறுநாள் மணமகன் தன்மனைவியுடன் தந்தையின் குடிசைக்குச்செல்கிறான்.

ஈமச் சடங்கு:

ஓங்கே இறந்தால்அவன்உடம்புவழக்கமாகபொதுக்குடிசையில் அவனதுபடுக்கைக்கு(கட்டிலுக்கு)கீழேயே புதைக்கப்படுகின்றது. வெளியே இறப்பின் கோரலேவில் புதைக்கப்படுகின்றது. ஒருவர் இறந்தவுடன் அச்செய்தி உறவினரனைவர்க்கும் சொல்லியனுப்பப் படும். உறவினர்கள் பங்குகொண்டு மணிக்கணக்காக அழு வார்கள். இறந்தவரைப் புதைக்கும்வேலை கல்லங்கரேயால் செய் யப்படும். நெருங்கிய உறவினர் இல்லாவிடில், இறந்தவருடைய இளைய சகோதரியின் கணவர் அப்பிணத்தைப் புதைப்பார். இறந்தவர் உடம்புஉட்காரும்நிலையில்வைத்துப் புதைக்கப்படுகின் றது. குழியின்மேல் எதுவும் படைக்கப்படுவதில்லை.

இறந்தவருடையபெயரைக்கூடச்சிலநாட்களுக்கு உச்சரிக்க மாட்டார்கள். நெருங்கிய உறவினர்கள் உடம்பில் வர்ணம் தீட்டிக் கொள்ளமாட்டார்கள். துக்கம் அனுட்டிக்கப்படுகின்றநாட்களில் பாடுவதோ நடனமாடுவதோகிடையாது. சில மாதங்களுக்குப்

பின்பு அப்பிணத்தைப் புதைத்தவரே புதைகுழியிலிருந்து இறந்தவருடையதாடைஎலும்பு இவற்றைவெளியே எடுப்பார். அப்போது நெருங்கிய உறவினர்கள் சிறிது நேரம் அழுவார்கள். அவரது உடலில் வெள்ளைக் களிமண்ணால் வர்ணம் தீட்டப்படும். பின்புஅத்தாடையைகழுத்தில்தொங்கவிட்டுக்கொள்வார். துக்கம் அனுட்டிப்பதற்காக அந்தமான் வாசிகள் கழுத்தில் இறந்தவருடைய மண்டையோட்டைத் தொங்கவிட்டுக்கொள்வர். சின்ன அந்தமானில் உறவினர்களனைவரும் சிறிது காலத்திற்கு அத்தாடையைக்கழுத்தில் கட்டிதொங்கவிட்டுக்கொள்வர். சிறிது காலத்திற்குப்பின்பு, அவற்றை அதே குழியிலோ அல்லது வேறொரு இடத்திலோ புதைத்துவிடுவார்கள்.

குழியிலிருந்து தாடையை எடுத்த மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பின், உறவினர்களனைவரும் உடம்பில் வர்ணம் தீட்டிக்கொள்வர். ஆண்கள் கட்டிலில் அமர்ந்திருக்க, பெண்கள் குடிசையின் மத்தியில் நடனமாடுவார்கள். பாட்டும் நடனமும் முடிந்தவுடன் தங்களுடையகணவன்மார்களைக் கட்டியணைத்துச் சிறிது நேரம் விம்மியழுவார்கள். மறுபடியும் பெண்கள் ஆடத்தொடங்கி, களைப்படையும்வரை இவ்வாறு செய்வார்கள். பின்பு பெண்கள் கட்டிலில் அமர்ந்திருக்க, ஆண்கள் நடனமாடுவார்கள். பெண்களைப் போன்றே இவர்களும் தங்களுடைய மனைவிமார்களைக் கட்டியணைத்து விம்மி யழுவார்கள். இவர்கள் சோர்வடையும்வரை இது தொடர்ந்து நடத்தப்படுகின்றது. இச்சடங்கானது இறந்தவர்களுக்கு துக்கம்அனுட்டித்தல் முடிவடைதலைக் குறிக்கிறது.

மனிதவினத்தின் சின்னமாக விளங்கும் ஓங்கே மக்களுடைய பழங்கால வாழ்வைப் பாதுகாக்கவேண்டியது நமது கடமையாகும்.

சிறுபாணாற்றுப்படையில் இலக்கியச் சுவை.

மு. வை. அரவிந்தன், எம்.ஓ.எல்.,
(அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

இலக்கியம் தரும் இன்பம் ஈடு இணையற்றது. அதனைக் கம்பர், 'செஞ்சொற் கவி இன்பம்' என்று குறிப்பிடுகின்றார். அது நவில்தொறும் பெருகும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் (குறள்:783). அந்த இன்பத்தை நுகர்வோரைச் 'சொற்கொண்ட பாவின் சுவை அறிவார்' என்று ஒரு புலவர் பாராட்டுகின்றார். அதனை அறியாதவரைச் 'செவியிற் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள்' என்று திருவள்ளுவர் கடிந்து உரைக்கின்றார் (குறள்: 413).

இலக்கியச் சுவை இப்படிப் பட்டது என்று கூற இயலாது. அதனை நுகர்ந்தே அறியவேண்டும். இருப்பினும் புலவர்கள் அச் சுவையின் தன்மையை உணர்த்த முயன்றுள்ளனர். சிறந்த பாட்டைத் 'தொட்டாலும் கைமணக்கும், சொன்னாலும் வாய் மணக்கும்' என்றும்; 'பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, உவட்டாமல் இனிக்கும், என்றும் பாராட்டியுள்ளனர். தீஞ் சுவைக் காவியம்,

'கள்ளையும் தீயையும் சேர்த்து – நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துச்'

செய்திருப்பதாய்த் தோன்றுகிறது என்று பாரதியார் பாடுகின்றார். 'தமிழே, நீ ஓர் பூக்காடு; நான் ஓர் தும்பி' – என்று பாடி, இலக்கியச் சுவையின் தன்மையை வெளிப்படுத்துகின்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

இலக்கியத்தைச் சுவைத்தோர் பாட்டில் உள்ள சொற்களில் தோய்ந்து மகிழ்ந்தனர்; பாட்டில் அமைந்து கிடக்கும் ஓசை தரும் இன்பத்தில் திளைத்தனர்: கற்பனை வளத்தில் மூழ்கினர்; உவமை நயத்தில் ஈடுபட்டனர்; பாட்டு இயற்றிய புலவர் கண்ட காட்சியைக் கண்டுகளித்தனர்.

இலக்கியத்தை இவ்வாறெல்லாம் சுவைத்தவர்களைப் பின் பற்றிச், சிறுபாணாற்றுப்படையின் சுவையை நாமும் நுகர்வோம்.

சொல் விருந்து

புலவர்கள் சொற்களைக் கையாளுவதில் வல்லவர்கள். அவர்கள் எண்ணும் கருத்தைச் சுமந்து நின்று ஏவல் செய்யச் சொற்கள் காத்துக் கிடக்கின்றன. அவர்கள் வாக்கிலிருந்து வெளிப்படும்போது எளிய சொற்களும் அரிய பொருளை விளக்கும் ஆற்றலைப் பெறுகின்றன; பழகிய சொற்களும் புதுமையாய்த் தோன்றுகின்றன. இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதிகளைப் போலப், புலவர்கள் எளியசொற்களையும் உயர்ந்தவையாய் மாற்றி விடுகின்றனர்.

இவற்றை எல்லாம் உணர்ந்த பெரியோர், புலவர்களை 'அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்' (புறம் : 235) என்றும், சொல் லேர் உழவர்(குறள் :872) என்றும், 'சீரிய கூரிய தீஞ்சொல்வவ்விய கவிஞர்' (கம்ப) என்றும் கூறியுள்ளனர். கவிமணி,

மந்திரச் சொல்லாலே – உள்ளம்
மயங்கச் செய்திடுவான்

என்று கவிஞனைப் புகழ்கின்றார்.

நத்தத்தனார் பாட்டில், வளமான செஞ்சொற்கள் உண்டு; கற்போர் நெஞ்சத்தை இனிக்கச் செய்யும் தீஞ்சொற்கள் உண்டு. அன்பு மொழியை, ஈரநன்மொழி (93) என்றும், சிவபெருமானை, ஆலமர் செல்வன் (97) என்றும், தாமரையைத் தெய்வத் தாமரை (73) என்றும் நத்தத்தனார் கூறிச் சொல்விருந்து அளிக்கின்றார். மலரில் உள்ள தேனைக் கள் என்று கூறி, மேலும் அதனை, இளங்கள் என்றும், விளையா இளங்கள் (45) என்றும் அவர் சிறப்பித்து மகிழ்கின்றார்.

ஒவ்வொரு புலவரும் சில சொற்களைத் திரும்பத் திரும்ப எடுத்தாள்வர். அச் சொற்கள் எவ்வாறோ அவர் நெஞ்சத்தில் ஆழப்பதிந்து, அவர் பேச்சிலும் எழுத்திலும் அடிக்கடி வந்து தலை காட்டும். நத்தத்தனார் வாக்கில் சில சொற்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. ஆயினும் அவை கற்போர் சுவையைக் கெடுக்காத வகையில் அளவோடு இடம் பெறுகின்றன.

நன்மொழி (93, 99), தடக்கை (105, 124), நெடுவேல் (94, 102) நெடுவழி (11, 168), மால்வரை (21, 205), நாகுமுதிர் (51, 108), எழு உறழ்திணி தோள் (49, 112), தாங்கரு மரபின் (66, 127) – ஆகிய தொடர் மொழிகள் ஒவ்வொன்றும் இருமுறை இடம், பெறுகின்றன.

ஓசை தரும் இன்பம்

கவிஞன் உள்ளத்திலிருந்து வெளிவரும் சொற்கள், இசை அருவியாய்ப் பாடிக்கொண்டே வெளிவருகின்றன. அத்தகைய சொற்களைத் தொல்காப்பியர், இழுமென் மொழிகள் என்று குறிப்பிடுகின்றார். (தொல்-செய்-230). கவிஞனின் உள்ளத்தில் சுரக்கும் உணர்ச்சியின் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப, ஓசை பல வேறு வடிவம் பெறுகின்றது. கவிஞன் படைப்பில், ஓசையும் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. பாட்டைக் கற்போர், அதில் அமைந்துள்ள ஓசையை அறிந்து பாடும்போதுதான் பாடல் இனிக்கின்றது: கவிஞனின் உணர்ச்சியைப் பெற முடிகின்றது. பாட்டு, செவியால் நுகர வேண்டிய கலை. கம்பர், 'செவி நுகர் கனிகள்' என்று பாடல்களைக் குறிப்பிடுகின்றார். செவிநுகர் கனிகள் பலவற்றை நுகர்ந்து மகிழ்ந்த பாரதியார்,

> ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
> ஓசைதரும் இன்பம் உவமைஇலா இன்பமன்றோ?

என்று உலகத்தை வினவுகின்றார்.

தொல்காப்பியர், செய்யுளியலில் பாட்டின் பல்வேறு உறுப்புக்களை ஆராயும்போது, ஓசை பற்றிய உறுப்புக்களாகிய தூக்கு, வண்ணம் – ஆகியவற்றை ஆராய்ந்துள்ளார். தூக்கு என்பது பாட்டிற்குஉரிய ஓசை, 'வண்ணம் என்பது, ஒரு பாவின் கண்ணே நிகழும் ஓசை விகற்பம்' என்றும், 'சந்த வேறுபாடு' என்றும் பேராசிரியர் விளக்குகின்றார்.

பாட்டிற்குரிய அசையும் சீரும் தளையும் ஓசையின் இயைபு கருதியே பாட்டில் அமைக்கப்படுகின்றன (செய். 10). மோனை, எதுகை, முரண் – போன்ற தொடைகளும் பாட்டின் ஓசை நலம் கருதியே ஆளப்படுகின்றன.

சிறுபாணாற்றுப்படை, அகவற்பாவால் அமைந்துள்ளது. அகவல் ஓசை மிகச் சிறப்பாக அதில் இடம் பெற்றுள்ளது.

அகவல் ஓசையே, இடத்திற்கு இடம் பல்வேறு வண்ணங்களைப் பெறுகின்றது.

சிறுபாணாற்றுப்படையில், அடி எதுகையும், பொழிப்பு மோனையும்மிகுதியாக இடம்பெற்றுள்ளன. விறலியரின் தோற்றப் பொலிவைப் புனையும் பகுதி (13-30), அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. முரண் தொடை, பின்வரும் அடிகளில் இடம் பெற்று இன்ப மூட்டுகின்றன.

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கி (89).
கரும்புகைச் செந்தீ (156).
பொன்வாய் மணிச்சிரல் (181).
நீலச் செங்கண் சேவல் (184).
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி (142).
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்.
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்.
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும் — (231-34)

பொழிப்பு எதுகையும், ஒரூஉ எதுகையும் சில அடிகளில் அமைந்துள்ளன. இவ்வாறு அமைவதைத் தொல்காப்பியர், 'தா வண்ணம்' - என்று குறிப்பிடுகின்றார். இடையிட்டுத் தாவுதலைப் போல, முதற்சீர் மூன்றாம்சீருடனே, நான்காம் சீருடனே இயைந்து வருவதைப் பின்வரும் அடிகளில் காணலாம்.

குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி, கடையடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள் — (137-140).

ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஏந்தல் வண்ணம் அமைவதை,

காரிக் குதிரை காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரி (110-1).

என்ற அடிகளில் கேட்கலாம்.

ஒழுகிய ஓசை அல்லது ஒழுகுவண்ணம்,

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்

செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழில் (1–4).

என்ற அடிகளில் உள்ளது. இவ் வண்ணத்திற்கு மாறுபட்டு, இடை இடையே அற்று அற்று ஒலிப்பது அகைப்பு வண்ண மாகும்.

செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்,
இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும் (197–8)

என்ற அடிகள் இடை இடையே அற்று வந்து, அகைப்பு வண்ணத்தைப் பெற்றுள்ளன.

பாணர் தம் வறுமைத் துன்பத்தைக் கூறும் பகுதி, தாழ்ந்த குரலில் – நெகிழ்ந்த ஓசையில் கேட்போர் நெஞ்சத்தை இளகச் செய்யும் வகையில் உள்ளது :

காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூ பூமித்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுன் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை (134–137)

என்ற பகுதியில் பாணரின் துன்பக் குரல் கேட்கின்றது. நல்லியக் கோடனைக் கண்டு பரிசில் பெற்றபின் பாணரின் வறுமை நீங்கிச் செல்வம் சேர்கின்றது; துன்பம் போய் இன்பம் வருகின்றது. செல்வக் களிப்போடு பாணர் பேசும் பேச்சு இது :

தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம் அவணின்றும் வருதும் (141–3).

என்ற அடிகளில் மகிழ்ச்சியின் ஆரவாரம் கேட்கின்றது.

இவ்வாறு, நத்தத்தனார் உள்ளத்தில் சுரக்கும் உணர்ச்சியின் வன்மை மென்மை; ஏற்றத் தாழ்வு – ஆகியவற்றிற்கு ஏற்ப, அகவல் ஓசையில் பல்வேறு சந்தங்கள் அமைந்துள்ளன.

பாட்டைத் திறப்பது பண்ணாலே!

— பாரதியார்.

சொல்லோவியம்

பலவகை வண்ணக் குழம்புகளைக் கொண்டு, ஓவியம் தீட்டும் ஓவியர்களைப் போலப் புலவர்கள் பலவகைச் சொற்களைக் கொண்டு வண்ண ஓவியம் தீட்டுகின்றனர். புலவர்கள் எழுத்தாலும் சொற்களே பலவகை வண்ணங்களாகப் பயன்பட்டுச் சொல் லோவியங்கள் பிறக்கின்றன. அவர்கள் தாம் காணும் காட்சியைப் பாட்டின் மூலமாகக் கற்போர் நெஞ்சத்தில் ஓவியமாய் எழுதி விடுகின்றனர்.

நத்தத்தனர் தீட்டியுள்ள சொல்லோவியங்கள் நம் நெஞ்சத்தைக் கவர்கின்றன. ஞாயிற்றையும், திங்களையும், இளங்கதிர் ஞாயிறு (243), உருவ வான் மதி (251) – என்ற இரு சொற்றொடர்களால், ஓவியம் தீட்டுகின்றார். மலை, நீர்நிலை ஆகிய வற்றின் அழகும் இயல்பும் நன்கு வெளிப்படுமாறு சொற்களை அமைக்கின்றார் அவர். கடவுள் மால்வரை (205), மணிமலை (1), வியன்மலை (170), பனிவரை (240), வான்பொரு நெடுவரை (128), துயல்கழை நெடுங்கோடு (265) – என்ற தொடர்களில் மலையின் தோற்றத்தை அமைத்துக் காட்டுகின்றார். நறுநீர்ப் பொய்கை (68) என்றும், மணிநீர் வைப்பு (152) என்றும் நீர்நிலைகளைப் புனைகின்றார். ஆற்றில் படிந்துள்ள கருமணலையும் கடற்கரையில் உள்ள வெண்மணலையும் முறையே காழக நுணங்கறல் (6) என் றும், கானல் வெண்மணல் (150) என்றும் கூறி அவற்றின் நிறத்தை விளக்குகின்றார்.

பயிர்வகைகள்: கடல் அலைமோதும் இடத்தில் உள்ள தாழையை அலைநீர்த்தாழை (143) என்றும், குப்பை மேட்டில் முளைத்துள்ள வேளைக் கீரையைக் குப்பை வேளை (137) என்றும், நத்தத்தனர் கூறி, அவை நிற்கும் இடத்தையும் ஓவியம் தீட்டு கின்றார். மரங்களைப் புனையும்போது, அவற்றின் உயரமும், கிளை களின் தன்மையும் வெளிப்படுமாறு, நெடுங்காற் புன்னை (149), குறுங்காற் காஞ்சி (159), களிச்சினை வேங்கை (23) என்று கூறு கின்றார், நீரில் மூழ்கிக் கிடக்கும் தாமரைத் தண்டில், முட்கள் நிறைந்திருப்பதை முள்ளரைத் தாமரை (183) என்றும், காளான் களின் உட்புறத்தில் துளை இருப்பதைப் புழற் காளாம்பி (134) என்றும் குறிப்பிடுகின்றார். இலை, பூ, கொட்டை ஆகிய சிறு

உறுப்புக்களையும் நுண்மையாகக் கண்டு, அவற்றின் அழகில் நத்தத்தனார் ஈடுபட்டுப் பாடுகின்றார். மஞ்சள் மெல்லிலை (44), சிறுவீ முல்லை (89), செம்பொற் கொட்டை (75) என்று அவர் விளக்குகின்றார். மஞ்சள் இலையின் மென்மை, முல்லை அரும்பின் சிறுமை, தாமரைக் கொட்டையின் வண்ணம் - ஆகியவற்றை அவர் உற்று நோக்கி ஓவியம் தீட்டுகின்றார்.

உயிரினங்கள்: உயிரினங்களின் உறுப்பு, தோற்றம், இயல்பு - ஆகியவற்றை உற்று நோக்கிய நத்தத்தனார், அவற்றைத் தம் சொல்லோவியத்தில் அமைக்கின்றார். யானை, குதிரை, ஒட்டகம், எருது - ஆகிய விலங்குகளை அவர் ஓவியம் தீட்டும் திறன் பல இடங்களில் நன்கு வெளிப்படுகின்றது.

பெருகிரப் பணைத்தாள் அண்ணல் யானை (200)
கறங்குமணி வால்உளைப் புரவி (92)
ஓங்குவிலை ஒட்டகம் (154)
வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகடு (189,90)
மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்
வாண்முகப் பாண்டில் (259,60)

- என்று நத்தத்தனார், சொல்லோவியங்கள் புனைந்து விலங்குகளைக் காட்டுகின்றார்.

மீன்கொத்திப் பறவையைப் பொன்வாய்மணிச் சிரல் (187) என்றும், தேன் உண்ணும் கருவண்டை நீலச் செங்கண் சேவல் (184) என்றும் நிறங்களை முரண்பட அமைத்து அவ் உயிர்களின் தோற்றப்பொலிவைக் காட்டுகின்றார். நண்டைக்கவைத்தாள் அலவன் (195) என்று சிறப்பிக்கின்றார்.

கலந்த காட்சி: பொருள்களின் எழிலைத் தனித் தனியே சொல்லோவியம் தீட்டிக் காட்டும் நத்தத்தனார், பல வேறு பொருள்கள் கலந்துள்ள காட்சியையும் வண்ண ஓவியம் தீட்டி விளக்குகின்றார்.

கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்

மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறம் தைவர
விளையா இளங்கள் நாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும் (41-46)

என்ற பகுதி, உள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து மகிழ வேண்டிய வண்ண ஓவியமாகும். கொழுமீன், வள்ளிதழ்க் கழுநீர், கயவாய் எருமை, பைங்கறி நிவந்தபலா, மஞ்சள் மெல்லிலை ஆகியவை எல்லாம் அழகாக ஓவியம் தீட்டப்படுகின்றன. இப்பகுதியைப் படிக்கும்போது, செங்கழுநீர்ப் பூக்களைத் தின்றுவிட்டுப் பெரிய வாயை உடைய எருமை, தேன் மணக்க அசை போட்டுக்கொண்டு, மிளகுக்கொடி படர்ந்த பலாமரத்தின் நிழலில், தன் முதுகை மஞ்சள் மெல்லிலை தடவிக்கொடுக்க, காட்டு மல்லிகைக் கொடிமீது உறங்கும் காட்சி நம் கண் முன் தோன்றுகின்றது.

மக்கள்: நத்தத்தனார், மக்களின் தோற்றத்தையும் மிக அழகாகப் புனைகின்றார். விறல்வேல் மன்னர் (246), கழல்தொடித் தடக்கைக் காரி (95), சாந்துபுலர் திணிதோள் ஆய் (98) - என்று ஆடவரையும்; தொடிக்கை மகடூஉ (192), துளங்கியல் மாளிர் (262) - என்று பெண்டிரையும்: கிளர்பூண் புதல்வர் (61) என்று சிறுவர்களையும் சொல்லோவியம் தீட்டுகின்றார்.

மக்கள் குழுமியுள்ள காட்சியையும் அவர் நன்றாக ஓவியம் எழுதிக் காட்டுகின்றார். பாலை நிலத்தில் நடந்து களைத்த விறலியர் மரா மரத்தின் வரி நிழலில் தங்கி இருக்கின்றனர். அவர்களுடைய மெல்லிய சிறிய அடியைச் சிறுவர்கள் மெல்லப் பிடித்து விடுகின்றனர். இக்காட்சியை,

சுரன்முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ...
மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந்து அசைஇ நன்மென் சீறடி
கல்லா இளையர் மெல்லத் தைவர
(12, 14-16).

என்று நத்தத்தனார் சொல்லோவியம் தீட்டுகின்றார்.

ஓவியத்தால்முடியாதவை: ஓவியம் விளக்கமுடியாத காட்சியையும் புனைந்து காட்டும் ஆற்றல் பாட்டுக்கு உண்டு. மேலும்

பொருளின் சுவை, மணம், வன்மை, மென்மை ஆகியவற்றையும் பாட்டுப் புலப்படுத்தும். இத்தகைய ஆற்றல் ஓவியக் கலைக்கு இல்லை என்னலாம்.

நத்தத்தனார், ஓவியன் உணர்த்த முடியாத பல நுட்பங்களைத் தம் சொல்லோவியத்தில் தெளிவாக உணர்த்துகின்றார். கேட்டும் சுவைத்தும், மோந்தும், தொட்டும் உணர வேண்டிய பொருள் களின் தன்மையை – ஓவியனால் எழுதிக் காட்ட முடியாத இயல்பு களை நத்தத்தனார் சில சொற்களைக் கொண்டே வெளிப்படுத்து கின்றார். இன்குரற் சீறியாழ் (35), பழம்படு தேறல் (159), புலவுக் கயல் (181), நன்மென் சீறடி (32) – ஆகிய பொருள்களை அவற்றின் இயல்புகளோடு காட்டுகின்றார். ஓவியன் சீறியாழை ஓவியம் தீட்டலாம்; ஆனால், இன்னிசையை எங்ஙனம் எழுதிக் காட்ட முடியும்? இவ்வாறே தேறலையும், கயலையும், சீறடியையும் ஓவியம் வரையலாம்: ஆனால் தேறலின் சுவை, கயலின் நாற்றம், சீறடியின் மென்மை ஆகியவற்றைஎங்ஙனம் ஓவியன் எழுதிக்காட்டமுடியும்?

கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை. கலைகளுக்கு எல்லாம் தலையாய கலையும் அதுவேயாகும்.

—o—

கவிதையில் ஓசை நயம்

க. ப. அருணாசலம், பி. ஓ. எல்.
தமிழ் ஆராய்ச்சித்துறை, திருவனந்தபுரம்.

இசையரங்கில் பாடப்பெறும் 'சங்கீதம்' வேறு; தமிழ்ப் பாட்டில் கூட்டப்படும் ஓசை நயம் வேறு. முன்னது பாடுவோனின் மெல்லிய இனிய குரலைப் பொறுத்துக் கேட்போரைக் கவருகிறது. பின்னது கவிஞனுடைய சொல் பின்னும் கலையைப் பொறுத்துப் படிப்போரைக் கவருகிறது. மெல்லிய குரல் இல்லாதவன் இசையரங்கில் ஏற முடியாது; மெல்லிய குரல் இல்லாவிட்டாலும் சொல் பின்னும் ஆற்றல் உடையவன் கவியரங்கில் ஏற முடியும். இன்பந்தரும் ஓசைகளைத் தன் பாடலில் வெளிப்படுத்த முடியும். கவிதைக்குரிய இவ்வொலியின் தனித்துவத்தைக் கருதியே பண்டை இலக்கண வாணர்கள் பாவிசை என்று கூறுதுபாவோசை (செப்பலோசை,அகவலோசை,துள்ளலோசை, தூங்கலோசை)என வகைப்படுத்தினர்போலும். ஓசைநயம்வேறு; இன்னிசைநயம் வேறுஎன்பதை அவ்வகுப்பு நமக்குப்புலப்படுத்தி நிற்கிறது. கவிதையின் ஓசை நயத்தோடு இன்னிசை நயம் கூடிவாராது என்பது கருத்தன்று. கூடி வந்தால் ஓவியம் உயிர் பெற்றதுபோல! அருணகிரியின் திருப்புகழ் இரண்டும் கலந்து அமைந்ததுதான்.

கவிதை, பின்னப்படும் சொற்களால் மட்டும் சிறந்து விடுவதில்லை; அல்லது சொல்லப்படும் பொருளால் மட்டும்சிறந்து விடுவதில்லை; பொருளும் சொல்லும் இணைந்து செயல்படுவது தான் கவிதையின் உயர்ந்த உத்தி. பொருட்சிறப்பு இல்லாது சொல்லாரவாரம் மட்டும் இருக்குமானால் அது அவ்வளவாகப் போற்றப்படுதலில்லை. பிற்கால யமகந்திரிபு அணிகள் சொல்லாரவாரத்தில் பிறந்ததனால்தான் கருவிலேயே உயிர் நீத்துவிட்டன. கவிதையில் சொல் நயம் இல்லாமல் நுண்ணிய பொருள் நயம் இருக்குமானால் அது போற்றப்படுவதுண்டு. சங்க இலக்கியங்களுள் ஏறத்தாழப் பெரும்பாலான சொல்லாரவாரத்தில் கட்டுப்படாதவையே. என்றாலும் நுண்ணிய பொருள் நயத்தால் அவை இன்பந் தருகின்றன. இன்றும் போற்றப்படுகின்றன.

ஆண்டாண்டுக் காலமாகஇசையுலகம், குறிப்பிட்ட கட்டுக்கோப்பிலேயே உலவி வருவதோடு நிற்பதில்லை. அடிப்படை

இசைகளில் இருந்து மேலும் பல கிளைக்கின்றன. பல புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. புதிய இராகங்கள் உண்டாக்கப்படுகின்றன. அதுபோன்றுதான் கவிதா சந்நிதியில், கவிஞன் பழையதையே பாடிக்கொண்டிருப்பதில்லை. புதிய சொல்லமைதி கொண்ட பல புதிய பாவண்ணங்களைப் படைக்கிறான்; தன் சொல் பின்னும் கலைச் சிறப்பால் புதிய யாப்புக்களை உலவ விடுகிறான். தமிழ் யாப்பு. நால்வகைப்பா என்ற கட்டுக்கோப்பினின்று இவ்வாறுதான் விடுபட்டிருக்க வேண்டும். பாவினம் என்றும், ஒழிவு என்றும், புறநடை என்றும் வளர்ந்ததில் பிழை ஒன்றும் இல்லை அத்தகு மாற்றங்கள் மொழியில் இயற்கை அதுவும் எதற்கும் கட்டுப்படாத கவிஞர் உலகில் அது தவிர்க்கமுடியாதது. இந்தத் தான்தோன்றி வளர்ச்சியை நாம் தடுக்க முனைந்தால் கம்பனின் விருத்தத்தையும், செயங்கொண்டாரின் தாழிசையும், தாயுமானவரின் கண்ணியையும் வெறுத்தவர்கள் ஆவோம்.

கவிதை-எடைபோடப்படுவது பொருளாலா? பொருள் சொல்லப்படும் முறையாலா? கையாளப்படும் சொல் அழகாலா? இலக்கிய உலகில் இது இன்றளவும் தீர்க்கப்படாதது. 'பெண்கள் இரவு முழுதும் தம் கணவரை எதிர்நோக்கினர்' என்பது கவிஞனின் பொருள். இப்படி 'மொட்டையாகச் சொல்வதில் என்ன இன்பம் இருக்கிறது? ஏதோ 'வானொலிச் செய்தி அறிக்கை' போல உள்ளது அவ்வளவுதான். கதவு நாதாங்கித்தேயும்படியாகப் பெண்கள் கதவைத் திறந்தும் மூடியும் கணவரை எதிர்நோக்கினர் என்று சொல்லும்போது, 'கதவின் நாதாங்கித் தேய்கிறது, என்று பொருள் சொல்லப்படு முறையில் (The way of expression) சற்று வேறுபடுத்தி இன்பம் ஊட்டப்படுகிறது. பொருளையும் சொல்லி, சொல்வதையும் சுவையாகச் சொல்லி அதனையும் இன்னும் ஓசை நயம்படச் சொல்லும்போது கவிதை நம்மை அள்ளிக் கொள்கிறது.

வருவார் கொழுநர் எனத்திறந்தும்
    வாரார் கொழுநர் எனஅடைத்தும்
திருகுங் குடுமி விடியளவும்
    தேயும் கபாடம் திறமினோ —க. பரணி;

கவிஞன் ஒவ்வோர் அடிதோறும் மேலடியில் எழுப்பிய ஓசையே எழப்பித் தான் நினைத்த பொருளையும் சொல்லிவிட்டான்; தான் நினைத்த முறையிலும் சொல்லி விட்டான்; தான் நினைத்த வடிவிலும் சொல்லி விட்டான்; பொருள், முறை, வடிவம் ஆகிய மூன்றும் பிரிக்க முடியாத பிணைப்புப் பொருள்களாக வரும்போது கவிதை வெற்றிபெறுகிறது. மண்ணில் கலந்துள்ள தாதுவை எடுத்து, அதனைப் பிரித்தும் ஒளியுமிழும் பொன்னாக்கி அப்பொன்னையும் அழகிய அணியாகச் செய்து போட்டால் எப்படி இருக்கும்? அப்படித்தான் கவிஞன் உலகியலில் சொல்லெடுத்து,

அதனை முறையாக ஒழுங்குபடுத்தி, ஓசைநயம்படக் கூறும்போது, நகைக்கடைக்காரனாகி நமக்கு இன்பந்தருகிறான்.

இலக்கியக் கல்வி, பொருள் அறியும் அளவில் நின்று விடுகிறது; இது முழுமையானதாகாது; பொருளுக்கும் அப்பால், கவிஞன் பொருளுணர் முறையை நாம் உணர்ந்தாக வேண்டும்; அதுவே சுவைஞனின் வேலை; ஓவியக் கண்காட்சியில் ஓவியம் மட்டும் பார்ப்பது வேறு; அத்துடன் அந்தஓவியங்கள் மூலமாகக் கலைஞன் உணர்த்துவதை அறிய முயல்வதுவேறு. இரண்டாவது நெறியே இக்காலத்தில் திறனாய்வு எனப் போற்றப்படுகிறது. அக்கலையின் ஒரு பகுதியை ஆய்வதே ஈண்டு நிகழ்ந்துள்ளது.

இக் கட்டுரையில் கவிதையூடே கலந்தியலும் ஓசைகளை வகைப்படுத்திக் காட்ட முயன்றிருக்கிறேன். சிறந்த பொருளோசை இலக்கியமாகிய கலிங்கத்துப் பரணியை மையமாக வைத்துக் கொண்டு-கட்டுரை பின்னப்பட்டிருக்கிறது.

I சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லி ஓசை ஊட்டல்:

கவிதையில்-மனங்கவரும் வகைகளை வரையறுத்துக் காட்டிய தமிழ்இலக்கணவாணர்கள் கவிதைபற்றிப்பல்வேறுகோணங்களில் சிந்தனை செய்துள்ளார்கள். கவிதைக்கு ஊட்டப்படவேண்டிய ஓசை நயத்தை அவர்கள் எண்ணாமல் விட்டுவிடவில்லை. அவர்கள் எண்ணியதன்விளைவுகள் தாம்எதுகை, மோனை, இயைபு, முரண், அளபெடைத் தொடைகள் என்பன. எவ்வெவ்வழிகளில் கவிதைக்கு ஓசையூட்டலாம் என்பதை முப்பத்தைந்து தொடை நயப் பகுப்புக்கள் நமக்குணர்த்துகின்றன. அவற்றுள் இயைபு என்பது ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் வந்து சுவை ஊட்டுவதாகும். 'இறுதி இயைபாம்' என்பது காரிகை. செயங்கொண்டார் 'ஆலோ' என்ற ஒரு சொல்லை மீண்டும் மீண்டுங் கூறிப் பாடலுக்கு நயம் ஊட்டுகிறார்.

அடிக்கழுத்தின் உடன்சிரத்தை அரிவர் ஆலோ
அரிந்தசிரம் அணங்கின்கை கொடுப்பர் ஆலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவும் ஆலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்கும் ஆலோ

படிப்போர் மனத்திடையே ஒரு விரைவுணர்ச்சியையும், நேரே காண்பது போன்ற நாடக உணர்வையும் 'ஆலோ' என்ற சொல் ஊட்டி நிற்கிறது. இதுபோன்றே இந்திரசாலத்தில் 'பார்' என்ற சொல்லும், கடைதிறப்பில் 'திறமின்' என்ற சொல்லும், இயைபாக நின்று சுவை தருகின்றன.

ii அடுக்குத் தொடர்களால் ஓசைநயம் ஊட்டல் :

'பாம்பு' என்று சொல்வதற்கும் 'பாம்பு பாம்பு' என்றுசொல்வதற்கும் வேறுபாடுண்டு. ஒருமுறை சொல்வதைக் காட்டிலும் இரட்டித்துச் சொல்லும்போது ஒரு விரைவும் பொருளில் ஒரு வலிவும், பொலிவும் தென்படுகின்றன. இதனைக் கவிஞன் தன் கவிவளத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் போது அச்சொற்கள் புதுத் தெம்புடனும் பொலிவுடனும் நிற்கின்றன.

வெடித்த கழை விசைத்தெறிந்த முத்தம் மண்மேல்
 வீழ்ந்தன, அத்தரை புழுங்கி அழுன்று மெய்ம்மேல்
பொடித்த வியர்ப்புள்ளிகளே போலும்! போலும்!
 போலாவேல் கொப்புளங்கள் போலும்போலும்.
—3—19

iii இரட்டைக் கிளவியால் ஓசைநயம் ஊட்டல் :

உணர்த்தும் கருத்துக்களுக்கேற்ப வல்வொலிகளும் மெல்வொலிகளும் கவிதையில் இரட்டுற வந்து காட்சிகளை அப்படியே கொண்டுவந்து நிறுத்துகின்றன. குழந்தை பூனைக்குட்டியை 'மியாவ் மியாவ்' என்று நமக்குச் சொல்நயம்பட உணர்த்தும்போது பூனையின்—இயற்கைத் தன்மையை உணர்கிறோம். பூனை என்பதைக் காட்டிலும் 'மியாவ் மியாவ்' என்பது உயிர்த் துடிப்புள்ள தொடராகவும் நமக்குப்படுகிறது. இது போன்று மனித மனங்களின், உணர்வு நரம்புகளில்—கவிஞன் இன்ப நாதம் பாடும் இடங்கள் பல உண்டு.

அன்னை காளிதேவியின் முன்னிலையில் — களபலிகள், பூசனைகள், ஆராதனைகள் நடக்கின்றன. அப்போது தோற் கருவிகள்—அடித்து முழக்கப்படுகின்றன. எப்படி?

'மொடு மொடு' என்று ஒலிமிகும் தமருகங்கள் 4-18 ஒன்று கவிஞன் அக்காட்சியை நம் காதுகளுக்கு ஊட்டுகிறான். 'சடசட' (12—109) என்பன போன்றவை சொல்லளவில் பொருள் இல்லை என்றாலும் ஒலியளவில் பொருள் தருகின்றன.

iv எதிரொலிச் சொற்களால் (Echoing Words) ஒலிநயம் ஊட்டல் :

சொற்களின் எதிரொலிகள் வேறு சொற்களாக அமைந்து இனமான பொருளை உணர்த்தல்—தமிழ் மொழிக்குரிய அமைப்பு. இது பெரும்பாலும் வழக்கில் நிகழ்வது. சோறு கீறு, தண்ணி கிண்ணி என்றும் இவைபோல்வன பலவும் வழங்குகின்றன. இம் மாதிரி நெருங்கிய அமைப்புடைய சொற்களைக் கவிஞன் உரிமை யோடு எடுத்துக்கொள்கிறான்.

இந்த ஊர்க்கண் இவ்வரிசி எல்லாம் பெய்து, கொல்யானைத்
தந்த உலக்கைதனை ஓச்சி சலுக்குமொலுக்கு எனக்குற்றிரே
—13—24

இப்பாடலில் வரும் 'சலுக்குமொலுக்கு' என்ற சொற்றொடர் ஒரு குறிப்பிட்ட ஒலிக்கூட்டத்தை நம்மனத்துக்குள் இழை யோட்டுகிறது. இதுபோன்று திமிலகுமிலம் (12—136), அலதிகுலதி (12—139) போன்ற சொற்களும் பொருள் எதி ரொலி செய்கின்றன.

v சிறுவாக்கிய முடிவுகளால் ஓசை நயம் ஊட்டல்

இடைவெளி இல்லாது நீளமாகச் செய்யப்பட்ட ஒரு பொன் சங்கிலி தரும் அழகுக்கும் மணிமணியாகப் பொன்மணிகள் கோக்கப்பட்டது போன்ற சங்கிலி தரும் அழகுக்கும் வேறுபா டுண்டு. முன்னதைக் காட்டிலும் பின்னது எடுப்பாக இருக்கும். அதுபோன்றுதான் நீண்ட சொற்றொடர்கள், சுவைஞனின் மனத்தினை அலுப்படையச் செய்வதோடு மயக்கத்தையும் உண் டாக்கி விடுவதுண்டு. சிறு தொடர்கள் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகளைப் பெருந்தொடர்களால் அந்த அளவுக்கு உண் டாக்க முடிவதில்லை. அதனாற்றான் படைக்கட்டளை வார்த்தைகளை (Army Commanding words) சுருக்கமாக உள்ளன. உணர்ச்சி யைக் கிளறச் செய்யும் வலிமை பெருந்தொடர்களை விடச் சிறு தொடர்களுக்குச் சற்று மிகுதி. பிள்ளைத் தமிழ் இலக்கிய வீழ்ச் சிக்கு நீண்ட தொடர் அமைப்பும் ஒரு காரணமாகக் கொள்ள லாம்.

கலிங்கத்துப் பரணியில் சிறு வாக்கிய முடிபுகளே—பரந்து

காணப்படுகின்றன. வாக்கியம் சிறிதாக இருந்தாலும் பொருள் புலப்பாடு சிறிதாக இருப்பதில்லை. கூட்டு வாக்கியத்தைக் காட்டிலும் (Compound Sentence), சிறுவாக்கியங்கள் (Simple Sentences) வரவேற்கப்படுவதன் காரணம் பொருள் புலப்பாடே.

பரிசில் சுமந்தன கவிகள்;
பகடு சுமந்தன திறைகள்;
அரசு சுமந்தன கழல்கள்;
அவனி சுமந்தன புயமும். —10—41

vi சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஓசைநயம் உண்டாக்கும் சொல்லாட்சி

முருகின் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகும் குழல்மடவீர்!
செம்பொன் கபாடம் திறமினோ —2—30

என்றுவரும் கடைதிறப்புப் பகுதியைப் படிக்கும்போது நம் உள்ளத்தில் உந்தப்படுவது ஓர் இன்ப உணர்ச்சியே. ஓர் ஆரவார உணர்ச்சியோ, அல்லது அச்ச உணர்ச்சியோ உண்டாகவில்லை. பாட்டு ஆற்றொழுக்காக ஓடுகிறது இங்கே. இங்கே பேசப்படும் பொருள்வேறு; சுவைவேறு; ஆதலால் பேசப்படும் முறையும் வேறாக இருக்கிறது. இதே அமைதி உணர்வைக் கீழ்வரும் கவிதையைப் படிக்கும்போது உண்டாகிறதா? இல்லை: ஏன்? வரும் பாடலின் பொருள் வேறு; சுவைவேறு.

பண்ணுக! வயக்களிறு
— பண்ணுக வயப்புரவி!
பண்ணுக! கணிப்பில் பலதேர்;
நண்ணுக! படைச்செருநர்!
—நண்ணுக செருக்களம்!
நமக்கிகல் கிடைத்த தெனவே —11—83

இப்பாடலில் பண்ணுக, நண்ணுக, என்ற சொற்கள் தனி வாக்கிய முடிவுகளாக நின்று நம்மைத் தட்டி எழுப்புகின்றன. தளபதியின் முன்னே கிளர்ந்தெழும் வீரர்களின் போருணர்ச்சி நம் உள்ளத்தில் உண்டாகிறது.

கடை திறப்பில் (2) தென்றலின் அமைதியையும், கூளி கூற்றில் (11) புயலின் ஆர்ப்பரிப்பையும் காணுகிறோம்.

vii சொல்லும் முறை :

'விளக்கின் சுடர் காற்றில் அசைகிறது' என்று சொல்வதைக் காட்டிலும், 'விளக்கின் சுடர் காற்றில் துடிதுடிக்கிறது' என்று சொல்வதில் ஓர் இன்பம் இருக்கிறது. காரணம்: துடிதுடித்தல் மனிதவினை. மனிதவினை—அஃறிணைப் பொருளாகிய விளக்கிற்கு ஏற்றிச் சொல்லும்போது சுவையுண்டாகிறது. இதனை அறிஞர் இலக்கணை என்பர்.

கோயில் (4), தேவி (5), பேய் (6)—இவை மூன்றும் இம் முறையில்தான் வருணிக்கப்படுகின்றன; கூழ்அடுதல் முழுதும்—மனிதவினைகளின் பிரதிபலனம். உலகியலில் ஒரு வீடு கட்டுவதற்குரிய மண், கல், சேறு, நீர், உத்தரம், ஓடு இவற்றை நினைவுட் கொண்டு கோயில் கவிஞனின் சொல் வண்ணத்தால் கட்டப்படுகிறது. அது போன்றே உலகியற் பெண்ணின் தோற்றம் அணிகலன் இவற்றை மனத்துட் கொண்டே தேவி படைக்கப்படுகிறாள். மனிதனின் தோற்றம், குணம், செயல்கள் பேய்கள் மீது ஏற்றப்பட்டுவருணிக்கப்படுகின்றன. இவையெல்லாம் நமக்குக் கவிஞனின் கற்பனை உலகம் என்பதை மறக்கடித்து—ஓர் உண்மை உலகம் என்றே தோன்றச் செய்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் நம் தோற்றம், குணம், செயல்கள், அவற்றின்மீது ஏற்றிக் கூறப்பட்டமையே.

கவிஞன், வினைமுற்றுக்களைத் தொடர்ச்சியாகக் கூறியும் எச்சங்களை அடுக்கிக் கொண்டே போய் முடிவில் முற்றவைப்பதும் பெயர்களை அடுக்கிக் கொண்டே போய் ஒரு வினையால் முடித்து வைப்பதும் கவிதைகளின் சுவை நயத்தை மிகுவிக்கின்றன.

பேய்களைப் பாடும்போது மெலிவன, போல்வன, வாயின, வயிற்றின, தாளின, உடம்பின, குரைப்பன, கொடிற்றின, விழிப்பன, ஒப்பன, உந்திய, மூக்கின, செவியன, தாலிய தலையின, உதட்டின, குழவிய, கொள்வன என வினைமுற்றுக்களை (அல்லது

முற்றெச்சங்களை)த் தொடர்ச்சியாக அடுக்கிக் கொண்டு செல்வது ஓர் ஒத்த ஓசை நயத்தை உண்டாக்குகின்றது. இராசபாரம்பரியத்தில், அழிந்ததும், கொண்டதும், விளைத்ததும், பரந்ததும், கவர்ந்ததும, வைத்ததும், பொழித்ததும், கவித்ததும் என எச்சங்களை அடுக்கி ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியைப் புலப்படுத்துகிருன்.

> உதிர்ந்த வன்னி ஒருங்கு நெல்லி உணங்கு தும்பை
> உலர்ந்தவேல்
> பிதிர்ந்த சுள்ளி சிதைந்த வெள்ளில் பிளந்த கள்ளி பரந்தவே
> .3—3

இப்பாட்டில் எச்சங்களையும், பெயர்களையும், அடுக்கிக்கொண்டே போய்ப் "பரந்த" என்ற ஒருவினையால்முடிக்கிருன்; கேள்விக் குறிகளைப் போட்டுக்கொண்டேபோய் இறுதியில் 'பரந்த' என விடை கூறி முடித்தல் போல உள்ளது.

இம்முறைகளன்றியும், 'கிடைத்தபோல்—கிடைக்க' என்றும் 'மலைத்தபோல்—மலைக்க' என்றும், 'முனைத்தபோல் முனைக்க' என்றும், 'சிலைத்தபோல்—சிலைக்க' என்றும், அடர்ப்பபோல்-அடர்க்க (12–95,6,7) என்றும்—இனிய எளிய புதிய அமைப்புக்களால் கவிதையின்நடையோட்டத்தை-அதிகப்படுத்துகிருன்.'அப்பொழுது —இப்பொழுது' என்றும் 'அப்படி-இப்படி' (8–33, 12–105,154) என்றும் கட்டுக்களை எதிர்மறை நயத்தால் கவிஞன் விளையாடும் இடங்கள் பலப்பல.

viii திரும்பித் திரும்பி வரல் [Repetition]

பரணியின் ஓசை நய வெற்றிக்கு அடிப்படைக் காரணம் ஓர் ஒழுங்கான கட்டுப்பாடான திரும்பிவரல் (Repetition) அமைப்பே. ஒரு தாழிசை என்ருல் ஓர் அடியிலேயே முற்றும், எச்சமும் போட்டுக் குழம்பும் அமைப்பு-இவர் தாழிசைகளில் காண்பது அரிது. முற்ருகத் தொடங்கினுல் முற்ருகவே அடுக்கிக் கொண்டு போய்க் கடைசியில் முடிப்பார்; எச்சமாக எடுத்தாலும் அப்படியே; பெயராக எடுத்தாலும் அப்படியே.

மற்ெருரு முறை: ஒரே சொல்லைத் திருப்பி அப்படியே சொல்வதன்றி முதலடியில் கையாளப்பட்ட வாய்பாடுகள் பெரிதும்

பிறழாமல் அடுத்த அடியிலும் வருகின்றன. இதனால் ஓசையில் இடையீடு ஏதும் ஏற்பட வாய்ப்பிருக்கவில்லை.

செக்கச் சிவந்த கழுநீரும் செகத்தில் இளைஞர் ஆருயிரும்
ஒக்கச் செருகும் குழல்மடவீர்! உம்பொன் கபாடம் திறமினோ!
-2-54

தேமா புளிமா புளிமாங்காய் புளிமா புளிமா கூவிளங்காய்
தேமா புளிமா கருவிளங்காய் புளிமா புளிமா கருவிளங்(காய்)

ஏறக்குறைய ஓர் ஒத்த வாய்பாடே பிறழாமல் அமைந்து தாழிசையின் ஓசை நயத்தைக் கெடுக்காமல் காப்பாற்றுகின்றன.

ix. எதுகைக்காகவோ, மோனைக்காகவோ வாய்பாடு கட்டுக்கோப்புக்காகவோ கவிஞன் சொற்களைத் தேடி அலையவில்லை. அல்லது எதுகைக்காகச் சொற்களைச் சிதைத்தும் வழங்கவில்லை. பாட்டின் புற அழகுகளுக்காகப் பொருளை மறைத்துவிட்டு ஓடவும் இல்லை. ஏறக்குறைய ஒரு குலத்தின் வரலாற்றை எடுத்துக்கொண்டு நமக்கு ஒரு வரலாற்று இலக்கியம் படிக்கிறோம் என்ற எண்ணமே ஏற்படாமல்—கவிஞன் ஒரு காவியத்தை முடித்திருக்கிறான் என்றால் அது எளிய சாதனை அன்று; யாரும் எளிதில் செய்து முடிக்கக் கூடியதும் அன்று. உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் அறிவும், சொற்பெருக்கும், இயற்கையாகத் தாண்டிவிடும் கவிதைத் திறனும் உடையவன்தான் இத்தகு காவியத்தின் கருத்தாவாக இலங்க முடியும்.

இதிகாறும் கவிதையில் ஓசை நயம் ஊட்டும் நெறிகள் சுட்டிக் காட்டப்பட்டன. இலக்கியங்கண்டுதான் இலக்கணம் உருவாகிறது; மக்கள் வாழ்க்கைமுறைகள்தாம் சட்டங்களாகின்றன; அவைபோன்றே இலக்கியக் கல்வியின் (Literary Study) அடித்தளத்திலேயே இலக்கியக் கொள்கைகள் (Theories of literature) உருவாதல் வேண்டும். அவையே நின்று வாழும், மற்றவை தோன்றி ஒழியும். தம் மொழி இலக்கிய அறிவின்றி உருவாகும் கொள்கைகளும், பிற மொழி அறிவால் உண்டாகின்ற பெயர்ப் பிடத்துக் கொள்கைகளும்-நீரில் படா இலையாக ஒதுங்கியே வாழ முடியும். ஆதலின்-நம் மொழி இலக்கியங்களுக்குரிய கொள்கைகள் நம்மொழி இலக்கிய நுகர்ச்சி வழியாகவே அமைதல் வேண்டும்.

சமநிலைச் சமுதாயம்

சு. பாலச்சந்திரன் எம். ஏ., எம். லிட்.
தமிழ் விரிவுரையாளர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

உலகம் போற்றும் ஒப்பரிய பெரு நூல் திருக்குறள். எந்நாட்டாரும் எச்சமயத்தாரும் அதனைப் போற்றுதற்குக் காரணம் அதிற் பொதிந்துகிடக்கும் வாழ்க்கை உண்மைகளே. தனி மகன் வாழவேண்டிய நெறிகளையும் சமுதாயம் சிறத்தற்குரிய வழி வகைகளையும் காதலர் தூய அன்பின் வழிநின்று களித்தற்குரிய நுண்முறைகளையும் திருக்குறள் நமக்கு உணர்த்துகின்றது. குறட்பாக்களை நாம் பயிலும்போது, சொல்லும் பொருளும் இணைந்த கவியின்பத்தைவிட மிக விரிந்துபரந்த நெஞ்சமொன்று பேசும்பேச்சையே கேட்கின்றோம். திருக்குறளை முதலிலிருந்து இறுதிவரை படித்து முடித்தால், உலக வாழ்வை முழுமையாக உணர்ந்தது போன்ற ஓர் உணர்வு தோன்றும். அறிவால் ஆராய்ந்து உழைத்த உழைப்பின் வெற்றி என்பதினும், வாழ்க்கை அனுபவத்தால், பரந்துபட்ட உணர்வால், நீரன்ன சாயல்பொருந்திய நெஞ்சத்தால் விளைந்த இனிய அரியபடைப்பே திருக்குறள் என்று நினைந்து போற்றலாம். அறம்பற்றி ஆசிரியர் உரைக்கும்போது நம்உள்ளம் அறவழி நடந்து புகழ்பெறத் துடிக்கின்றது. பொருட்பாலைச் சொல்கின்றபோது சமுதாயத்தில் நமக்குள்ள பொறுப்பை உணர்ந்து நன்மக்களாக நம்மைப் பண்படுத்திக்கொள்ள விரும்புகின்றோம்; ஆள்வினைக்குரிய தகுதிகளைப் பெறமுனைகின்றோம். வள்ளுவர் காதலைப் பாடுகின்றபோது தலைமகனும் தலைமகளும் காதல்கொண்டு கலத்தலும் புலத்தலும் புரிந்து வாழ்கின்ற பேரின்பக் காட்சிகளைக் கண்டு பெரிதும் உவக்கின்றோம். இவ்வுணர்வின் அடிப்படையில் திருக்குறளை அணுகுகின்ற எவரும் சொல்லும் பொருளும் கடந்து நிற்கும் வள்ளுவர்தம் உள்ளுணர்வை நன்குணர்ந்து போற்றமுடியும்.

சுருங்கச் சொன்னால், நாமே வள்ளுவராக மாறி நின்று

அவர்தம் விழுமிய உணர்வுகளை உணர்தல்வேண்டும். "புலவர் ஒருவரை நன்கு புரிந்துகொள்வது, ஏறக்குறைய அவர்தம் பாடல்களை மீண்டும் நாம் யாப்பது போன்ற முயற்சியே" என எம்ப்சன் (W. Empson) என்னும் அறிஞர் கூறுகின்றார். *(The process of getting to understand a poet is precisely that of constructing his poems in one's own mind) தெய்வப் புலவரின் அருமறையைக் கற்பது எளிது; உணர்வது அரிது. அதிற் பொருள்நயம் காண்பது எளிது. நயத்தினினும்மேலானபுலவர்தம் உள்ளப் பாங்கினை உணர்வது அரிது. இதனாற்றான் 'ஓதற்கு எளிதாய் உணர்தற்கரிதாகி' என மாங்குடி மருதனார் அதன் பெருமையை உணர்த்துகின்றார். விழுமிய உணர்வுக் கருவூலமாய் இது விளங்கும் பெற்றியினை 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தின் வாயிலாகக் காண்போம்.

'ஒப்புரவறிதல்'—அதிகார நோக்கம்

மனிதன் தனித்து வாழ இயலாதவன். மற்றவரோடு சேர்ந்து வாழ்ந்தால்தான் அவனுக்குரிய தேவைகள் வாய்க்கப் பெற்று முன்னேற இயலும். அதனாற்றான் அரிஸ்டாடில் என்னும் அறிஞர், 'Man is an animal impelled by his nature to live in a polis: ✢ என்றார்.

கூட்டாக வாழும் மக்கள் கூட்டமே 'சமுதாயம்' என அழைக்கப்படுகின்றது. சமுதாயம் உடல் போன்றது. அதில் வாழும் மக்கள் உடலின் உறுப்புக்கள் அனையர். உடலின் ஏதேனும் ஓர் உறுப்பு ஒழுங்காக இயங்க வில்லையேல் ஏனைய உறுப்புக்களும் அதனாற் பாதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, உணவு கொள்ளும் வயிறு அவ்வுணவினை நன்கு செரிக்காவிடில் ஏனைய உடல் உறுப்புக்கள் சுறு சுறுப்பாக இயங்குவதில்லை; சோர்வுற்று இயக்கமற்றன போல் மந்த நிலை அடைகின்றன. நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பால் கால்கள் ஓய்ந்து போனால், ஏனைய

* Guoted by Gurrey in his 'The Appreciation of Poetry, — p. 17.

✢ The politics of Aristotle translated by Ernest Barke:. p. 128.

உறுப்புக்களும் செயலற்றுத் தளருகின்றன. பல்வேறு உறுப்புக்களும் ஒத்தியங்கும் உடலமைப்பிற் காணும் இவ்வுண்மை சமுதாய வாழ்விற்கும் பொருந்தும். சமுதாயம், அமைதியும் ஒழுங்கும் பெற்று முன்னேற வேண்டுமாயின் ஒவ்வொருவரும் உணவும் உடையும் உறையுளும் பொருளும் பெற்று மனநிறைவோடு வாழ வேண்டும். பலர் நிறைந்த பொருளும் வாய்ப்பும் பெற்று வாழச் சிலர் அவையற்று வாழநேரின், பொதுவாழ்வில் போரும் குழப்பமும் நேரிட வழியுண்டு. அப்போது அச்சமுதாயம் அமைதியற்றுக் குழப்பமுற்று முன்னேற வழியின்றித் தடைப்பட்டு நிற்கும். இங்ஙனம் நோக்கின், எல்லோரும் இன்புற்று வாழவல்ல பொருள் வாழ்வே, பொதுவாழ்வு செம்மையாக அமைவதற்கு அடிப்படை எனலாம். அவ்வாறெனில் சமுதாயம் முழுமைக்கும் பொதுவாக உரிய பொருள், யாதோ ஒருகாரணத்தால், ஒருவனிடத்தேயே சேர்ந்து மண்டிவிடக்கூடாது, பலர்க்கும் உரியவண்ணம் பயன் படுதல் வேண்டும்.

இன்றைய இந்திய நாட்டு அரசியலார் வகுத்திருக்கும் சமநிலைச்சமுதாயம் (The Socialistic Pattern of Society) என்பது சமுதாயத்தின் முழுமையானதும் அமைதியானதும் ஒழுங்குபட்டதுமான நல்வாழ்வை நோக்கியே வகுத்துள்ளனர். இத்தகைய சமுதாயப் பெருவாழ்வு நன்கு இயங்குதற்குரிய வண்ணம் தனிமகனின் உடைமைகள் பல்வேறு வகையாலும் சமுதாயத்திற்குப் பயன்படும் நெறியினையே வள்ளுவர் 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகார வாயிலாக விளக்குகின்றார்.

ஒப்புரவின் பொதுவிளக்கம்:

மனித வாழ்வின் நோக்கம் யாது எனக்கேட்டால் 'அன்பு செய்தலே' என வள்ளுவர் விடையிறுக்கின்றார். அன்பு செழித்தோங்குமாயின் அருள் பிறக்கும்; ஈகை மலரும். ஒப்புரவு ஓங்கி நிற்கும். ஈகையின் மிகவிரிந்து பரந்து பட்ட நிலையே ஒப்புரவுப் பண்பு. 'வறியார்க்கு ஒன்று ஈவதே யீகை' என ஈகையை விளக்கும் வள்ளுவர் அதன் பல் வேறு நிலைகளையும் ஒப்புரவறிதலில் விரித்துரைக்கின்றார். 'ஈகை' என்னும் அதிகாரத்தில் ஈதலின்பெருமையைப்பாடிய வள்ளுவர், ஒப்புரவறிதலில், மனிதன் எவ்வாறெல்

லாம் தன் உடைமைகளை மற்றவர்க்களித்துப் பெரிதும் பயன்பட வாழமுடியும் என்பதனை விளக்குகின்றார். காலத்திற்கு ஏற்ற வண்ணம் புதுப்புதுக் கருத்துக்களையும் உணர்வுகளையும் உண்மைகளையும் வழங்கும் வற்றாத பேரூற்று திருக்குறள். அவ்வாறாயின் தன்னை நாடியவர்க்கு உதவுதல், சமூகத்தொண்டாற்றல், சர்வோதய இயக்கத்தினர் ஆதல், ஆலைகள் வைத்தல், பள்ளி, கல்லூரி, மருத்துவநிலையம் முதலியன நிறுவுதல், நாட்டு நலனுக்காகப் போர் வீரர் தம் ஆருயிரையே பலியிடல், நாட்டுப் பாதுகாப்புப் பணிக்கு மக்கள் தம் உடைமைகளை வழங்குதல், போன்ற பல்வேறு பொதுப்பணிகளும் 'ஒப்புரவு' என்பதனுள் அடங்கும் என்ப.

தலையாய ஒப்புரவு:

தம்மை மறந்து. தமக்கென ஒரு பயனும் கருதாது உலகப்பணி செய்வோர் மிகவும் அரியர். அப்பெருமக்கள் சிலரேயாயினும் அளவில்லாப் பெருமையுடையோர். எப்பயனும் எதிர் பாராது உலகிற்கு மழை வழங்கும் பெருமுகில் போன்று அச்சான்றோர் பயன் தூக்காது உலகத்தொண்டு புரிகின்றனர். முகில் மக்களிடமிருந்து எப்பயனும் எதிர் நோக்குவதும் இல்லை; ஒருவேளை நோக்கினும் உலகத்தவர் ஆற்றுதல் அரிது. தம் அரச வாழ்வையும் மணி முடியையும் துறந்து உலகத்தவர்க்கு உண்மையுரைத்த புத்தர் பெருமானுக்கு உலகினர் என்ன கைம்மாறு செய்ய முடியும்? அரக்கர் சிலர் தம்மைச் சிலுவையில் அறைந்து கொடுமைகள் பலபுரிந்த காலத்தும் பொறுத்துப் புகழ் கொண்ட ஏசு நாதரின் அருள் நெறிக்கு உலகத்தவர் ஆற்றவல்ல கைம்மாறு உண்டோ? செல்வக் குடியிற் பிறந்தும் வசதியோடு வாழநினையாது இந்திய நாட்டை உய்விக்க அல்லும் பகலும் பாடுபட்டு, இறுதியில் பொல்லா அரக்கன் ஒருவன் தன்னைத் துப்பாக்கியாற் சுட்ட காலத்தும் இறைவன் திருநாமத்தைப் பாடிக்கொண்டே உயிர்நீத்த அண்ணல் காந்தியடிகட்கு மக்கள் செய்யவல்ல கைம்மாறு உண்டோ? பற்றிப்படரக்கொழு கொம்பின்றி வாடிய முல்லைக்கொடிக்குத் தேரீந்த பாரி வள்ளலின் அருள் சேர்ந்த நெஞ்சுக்கு ஈடாக ஆற்ற வல்ல கைம்மாறும் உண்டோ? இல்லை. உலகம் வாழத்தாம் வாழ்ந்த உயர்ந்தோர் தங்கட்கென ஒன்றை

வைத்துக்கொள்வதும் இல்லை; தங்கட்கென ஒன்றை எதிர்பார்ப்பதும் இல்லை. எனவே உலகத்தொண்டு சிறத்தற்குரிய அடிப்படைப்பண்பாகிய 'தன்னலமின்மையை' நினைந்து போற்றும் வள்ளுவர்.

'கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு'

என்கிறார். ஒப்புரவறிதலின் முதற்குறளில் உலகத்தொண்டு செய்வோரின் நெஞ்சப்பாங்கினை வியத்தகுமுறையில் வள்ளுவர் காட்டுகின்றார். ஒப்புரவாளர் செய்யும் தொண்டு ஒருவருக்குமட்டுமன்று; உலகத்தவர் அனைவருக்கும் பொதுவாகும். நாடு கடந்து இனம் கடந்து சாதி கடந்து செய்யும் அறத்தொண்டுகள் அனைத்தும் ஒப்புரவேயாகும். 'உலக நடையினை அறிந்து செய்தல்' என்னும் பரிமேலழகர் விளக்கம் ஈண்டு நோக்கத்தக்கது. வேளாண்மை, ஒத்தது அறிதல், கடன், 'செயும் நீர' எனப் பல்வேறு சொற்றொடர்களாலும் வள்ளுவர் ஒப்புரவினைக் குறிக்கும் முறை மேற்கூறிய விளக்கத்தை மேலும் வலியுறுத்துகின்றது.

ஒப்புரவின் ஒருநிலை பொருட்கொடை:

பழங்காலம் நம்போல் மக்கள் தொகை மிகுதியாக இல்லாத காலம். பணத்தை அல்லது பொருளை ஓரிடத்தே முடக்கி வைக்கவும் இயலாது. தான் ஈட்டிய பொருளை மற்றவர்க்குக் கொடுத்து மற்றவர் பொருளைத் தாம்பெற்று வாழ்வதையே பெரும்பாலும் அக்காலத் தமிழர் அறிந்திருந்தனர். 'பண்டமாற்று முறையே' பழங்காலப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக விளங்கியது என்பதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. நெய்தல் நில உப்பைக் கொடுத்து மருதநில நெல்லைப் பெற்றும் குறிஞ்சித் தேனைக் கொடுத்து அதற்குப் பதிலாக முல்லைநில நெய்யும் வெண்ணெயும் பாலும் பெற்றும் மகிழ்ந்த காலம் பழங்காலம். தன் தேவைக்கு மீறியதை ஒருவன் சேர்த்து வைத்தாலும் அது பயன் படுவதில்லை. எனவே சேர்த்து வைப்பதினும் மற்றவர்க்குக் கொடுத்து மகிழ்வதே நற்பேறுகக் கொண்டான் பழந்தமிழன். இவ்வியல்புடைய மக்கட்கு ஒப்புரவும் எளிதாக அமையுமன்றோ? "செல்வத்துப் பயனே

ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே'' என்னும் புறநானூற்றுக் கருத்தும் (பாட்டு 189) ஈண்டு நோக்கத்தக்கது. பழந்தமிழர் தம் இவ்வுயரிய பண்பாட்டினை நன்குணர்ந்த வள்ளுவர், ஒப்புரவின் தொடக்கத்தே பொருட் கொடையை வலியுறுத்துகின்றார்.

''தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு''

''புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற''.

''ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்''.

''முயன்று ஈட்டிய பொருள் உடையோர், இல்லாதவர்க்கு அன்புடன் ஈதல் வேண்டும். அதுவே உலக நடை. அந்நடையினை உணர்ந்து வாழ்வோனே மனிதப் பண்புடையவன். மற்றையோர் நடைப் பிணங்களாகவே எண்ணப்படுவர். இவ்வுலகத்தும் தேவர் உலகத்தும் ஒப்புரவு போன்ற நற்பண்பு வேறெதுவும் இல்லை''. எனவரும் குறட் கருத்துக்கள், அறஞ்செழித்த தமிழ்ச் சமுதாய நிலையினைக் காட்டுகின்றன.

பொதுப் பணியும் ஒப்புரவே

இல்லாதவனுக்கு ஈவது மட்டும் ஒப்புரவிற் குறிக்கப் படவில்லை. பொதுத் தொண்டுக்குரிய பல்வேறு நிலைகளும் அதிற் குறிப்பாக உணர்த்தப்படுகின்றன. இன்று, உலகில் எங்கோ ஒரு மூலையில் நிலச்சரிவாலோ பூகம்பத்தாலோ மக்கள் பாதிக்கப் பட்டால், ஏனைய நாட்டு மக்கள் அவர்கட்கு உதவி செய்கின்றனர். புயலாலும் வெள்ளத்தாலும் விடிமுந்து குடியிழந்த ஏழையர்க்கு ஏனையோர் இரங்கி உதவும் பண்பையும் இன்று காணலாம். தங்கள் நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காக்கும் பாரதப் போர் வீரர்க்கு மக்கள் தங்கள் பொன்னையும் பொருளையும் தரும் இன்பக் காட்சியும் பாரதநாடு அறிந்த ஒன்று. காலமாற்றத்திற்கு ஏற்பப் புறநிகழ்ச்சிகளும் வேறுபடுகின்றன; தொண்டுக்குரிய சூழலும் வாய்ப்பும் புதுவடிவம் பெறுகின்றன. இவ்வாறு நிகழும் தொண்டுக்குரிய சூழலும் வாய்ப்பும் அறிந்து பொதுப்பணி செய்

வதை வள்ளுவர் குறிப்பாக உணர்த்துகின்றார். மனிதனின் இதயம் அவ்வக் காலத்திற்கு ஏற்ற வண்ணம் விரிந்து பரந்து, மற்ற வர்க்குத் தொண்டு செய்யவேண்டும் என்பதனையே நாயனார், 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்' என்பதனால் குறிப்பிடு கின்றார் எனலாம்.

ஒப்புரவின் மூன்று படிகள்

மனிதனுக்கு மனிதன் உதவி செய்ய வேண்டும் என்பது வாழ்க்கையறம். ஆயின், வறுமையால் வாடுவோனுக்கு உதவுவதே தலையாய அறத் தொண்டு. உணவு உடை முதலிய இன்றியமை யாத தேவைகள் எல்லோருக்கும் உரியன. எனினும் சிலர்க்கு அவை வாய்ப்பாக அமையும்; வேறு சிலர்க்கு அவை எட்டாத கனி களாகவே இருக்கலாம். உண்ணுதற்கும் உடுப்பதற்கும் கையிற் பொருள் வேண்டும். அப்பொருள் இல்லையேல் இவ்வுலகமே அவனுக்கு இருண்டதாகத் தெரியும். வறுமையின் கொடுமைகட்கு வள்ளுவரே அஞ்சுகின்றார், 'இடுக்கண் வருங்கால் நகுக'' என்றவர் ஏழையர் நிலையில் நின்று பாடும் போது, ''நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள் யாதொன்றும் கண்பாட ரிது'' (நல்குரவு--9) என உள்ளந் துடித்துப் பேசுகின்றார். எனவே, ஏழையின் கொடிய வறுமையைப் பொருளீந்து மாற்றவல்ல ஒப்புரவாளனின் பெருமை மூன்று குறட்பாக்களில் விளக்கு கின்றார்.

> ''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு''.

> ''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
> நயனுடை யான்கட் படின்''.

> ''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கட் படின்.''

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே, தமிழன் உள்ளத்தால் மிகப் பெரிதும் பண்பட்டு, நுண்ணிய உணர்வுகளால் தனிசிறந்து விளங்கினான் என்பதற்கு இம்மூன்று குறட்பாக்களே சான்றாம்.

அறிவுடையானின் ஒப்புரவு, நயனுடையானின் ஒப்புரவு

பெருந்தகையானின் ஒப்புரவு என ஒப்புரவினை நாயனார் மூன்றாக வகுக்கின்றார். இக்குறட்பாக்களைப் பயில்கின்ற போதே, படிப்படியாகச் சிறிது உயர்ந்து விளங்குகின்ற மூன்று நிலைகள் நமக்குப் புலனாகும். முதல் நிலை ஒப்புரவினும் இரண்டாம் நிலை சிறந்தது; இரண்டாம் நிலையினும் மூன்றாம் நிலை மிகச்சிறந்தது. அதனினும் உயர்ந்ததொரு ஒப்புரவு இல்லையென்றே உணரலாம், முதலாவதாக, உலக நடையினை விழையும் பேரறிவாளனது செல்வம், ஊரார் அனைவரும் நீருண்ணும் குளம். நீரால் நிறைந்தது போலாகும் என்கிறார். கிணறோ, குளமோ. நீர் இறைக்க இறைக்க ஊறுந்தன்மையது; நீர் இறைக்காமலேயிருந்துவிட்டால் தூர்ந்து போகும். இவ்வுவமையால், செல்வன் ஒருவன் முறையறிந்து தன் செல்வம் பலர்க்கும் பயன்பட வாழ்ந்தால், அச்செல்வம் மேன் மேலும் பெருகிக் கொண்டே போகும் என்பதனை வள்ளுவர் உணர்த்துகின்றார். இன்றும் ஒருவனிடத்தே யிருக்கும் பணமோ, பொருளோ அவனிடத்தேயே தேங்கிக் கிடக்குமாயின், அதனாற் பெரும் பயன் இல்லை. ஆலை நிறுவியோ, கல்வி நிலையம் கட்டியோ, வங்கியை வைத்தோ, தொழிற்சாலை கட்டுவித்தோ, தன் பொருளை முதலிடு செய்தால் அதுவே பன்மடங்கு வளர்ந்தோங்குவதைக் காண்கிறோம். ஈண்டு ஒப்புரவு என்பது பயனோடு ஒட்டியமை இன்றது. தலையாய ஒப்புரவிற்குரிய தன்னலமற்ற பண்பினை விளக்கிய தெய்வப்புலவர் உலகில் பெரும்பாலாக நிலவிவரும் நிலையினையும் உடன் விளக்கத் தவறவில்லை. தன்னை மறந்து தொண்டாற்றும் நெறி தனி பெரிதும் உயர்ந்தது. ஆயின், தன்னையும் நினைந்து தொண்டாற்றுவதனை அதற்கடுத்த நிலையெனக் கொள்ளலாம். இவ்விருநிலையும் பழந்தமிழகத்தே விளங்கிவந்தன. எனவே, தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழவைக்கும் ஒப்புரவினையும் திருவள்ளுவர் விளக்குகின்றார். அவ்வொப்புரவு, அறிவோடு இணைந்தது; காரண காரியம் நோக்குவது; மறுமையை எண்ணிச் செய்வது; பெறுவோர் தம் முயற்சியினால் ஈடேறுவது.

அறிவே மிக்குச் செய்யும் ஒப்புரவினை விளக்கியவள்ளுவர், அன்பே அடிப்படையாகச் செய்யும் ஒப்புரவினை அடுத்துக் கூறுகின்றார். ஒப்புரவாகிய நயன் உடையானிடத்தே செல்வம் சேருமாயின், அது பயன்மிக்க நன்மரம் ஊருக்கு நடுவே பழுத்தது போலாகும் என அவர் விளக்குகின்றார். இவ்வொப்புரவு, தூய

தன்னலமற்ற அன்புணர்வே துணையாகச் செய்யப்படுவது; காரணகாரியம் நோக்காதது; எளிதாக ஏனையோர்க்குப் பயன் படுவது. அறிவுடையார், அறிவற்றவர், வலிமையுள்ளவர்,வலிமை யற்றவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர், உழைப்பவர் உழைக்காதவர், வேண்டியவர் வேண்டாதவர், உற்றார் அயலார், நண்பர் பகைவர் முதலிய வேறுபாடு ஒன்றுமே எண்ணாது செய்யப்படுகின்ற ஒப்புரவே இப்போது பேசப்படுகின்றது. அறிவு, உணர்வு இரண்டும் எல்லார்க்கும் பொதுவாக உரியன. ஆயின் ஈகைப் பண்பே வடிவாக உள்ளோர் அறிவுக்கோ ஆய்வுக்கோ சிறிதேனும் இடங்கொடார்; வறுமையை, துன்பத்தை, வாடிய வயிற்றைக் கண்டவுடன் துடிக்கின்ற உள்ளமுடையோர் அச்சான்றோர். வாயினால் வேண்டவல்ல மனிதர்க்கு மட்டுமன்றிப் பேசஇயலாத மரஞ்செடி கொடிகட்கும் ஏனைய உயிர்கட்கும் அச்சான்றோர் பெரிதும் இரங்கிப் பொருளால், தம்மெய்யினால் தொண்டாற்றுவர். பாரிவும் பேகனும் ஆய் அண்டிரனும் இன்னோரன்ன உலகச் சான்றோரும் இந்நில ஒப்புரவிற்குச் சான்றாக விளங்குகின்றனர் எனலாம்.

(1) "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே" (புறம் 134)

எனவேள் ஆயைஉறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியதும்

(2) "பாரியும் பரிசிலர் இரப்பின்
வாரேன் என்னான் அவர்வரை யன்னே" (புறம் 108)

எனப் பாரியைக் கபிலர் புகழ்ந்ததும்,

(3) "மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக...... (புறம் 145

எனப் பேகனைப் பரணர் பாடியதும்,

(4) "பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்

கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி" (புறம் 200)

எனப் பாரியைக் கபிலர் ஏத்தியதும்

(5) "நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்க மாயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னு வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே" (புறம் 106)

என வேள் பாரியைக் கபிலர் பாராட்டியதும், முறையே பயன் தூக்காது செய்வதும், எளிதிற் செய்வதும், அருள் உணர்வால் செய்வதும், ஒத்துணர்வுடையாராய்ச் செய்வதுமாகிய ஒப்புரவுகளை விளக்கி நிற்கின்றன. மறுமைப்பயன் அல்லது வேறுபயன் நோக்கிச் செய்யும் ஒப்புரவினும் அன்பு நெறியே காரணமாகச் செய்யும் ஒப்புரவு சிறந்தது என்பதே வள்ளுவர் கொள்கை. "கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு" என்னும் வள்ளுவர் வாக்கும் 'அறத்தினை அறம் நோக்கியே' செய்யவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. பற்றின்றிக் கடமையோ தொண்டோ செய்வது எளிதன்று. அங்ஙனம் ஒருசமுதாயம் அமையுமாயின் அதிற் போட்டியில்லை; பொறாமையில்லை; பூசல்இல்லை; போரும்இல்லை; பெரியோரை வியத்தலும் இல்லை; சிறியோரை இகழ்தலும் இல்லை.

திரு, செல்வம் என்னும் சொற்கள், ஈண்டு ஒருவனது உடைமையைக் குறிப்பன. அவ்வுடைமை அறிவாகவோ, பொருளாகவோ, நற்பண்பாகவோ அமையலாம். 'கேடில்விழுச் செல்வம் கல்வி' (கல்வி-10) என்பதும் 'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்' (அருளுடைமை-1) என்பதும் ஈண்டு நோக்குக.

தன்னலமற்ற தொண்டர்க்குரிய இயல்பினை விளக்கிய வள்ளுவர், எல்லாவற்றினும் உயர்ந்து விளங்கும் ஒப்புரவினை அடுத்துக் கூறுகின்றார். தன்னை மறந்து தொண்டாற்றுவது அரிது; இன்றியமையாமை நேருமாயின், தன்னையே கெடுத்துச் செய்து பிறர்க்கு உதவுவது அதனினும் அரிது. பயன்மரத்தையும்

ஒப்புரவாளனையும் ஒப்பிட்டுப் பாடியவர், பின்னர் 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' எனத் தொடங்குகின்றார். ஒப்புரவென்னும் பெருந்தகைமை பொருந்தியவனிடத்தே செல்வம் சேரின், அது மருந்தும் ஆகித்தப்பாது பயன் விளைக்கும் மரம் அனையது என விளக்குகின்றார். தன் கனியால் மட்டுமன்றி இலையாலும் பூவாலும் காயாலும் பட்டையாலும் வேராலும் ஏனையோர்க்கு மருந்தாகிப் பயன்படுகின்ற மரம்போல, ஒப்புரவாளன் தன் ஆற்றலாலும் பொருளாலும் அன்றித்தன் உடலாலும் உயிராலும் ஏனையோர்க்குப் பயன்படத் தயங்க மாட்டான் என்பதே குறளால்உணர்த்தப் படும் உயரிய கருத்து. இன்று நாட்டுக்காகத் தம் உயிரை ஈடாக வைக்கும் பாரதப் போர் வீரர் தம் நாட்டுத் தொண்டு இவ்வகை ஒப்புரவே. பொது வாழ்வில் ஒப்புரவின் நிலை இது. தனி வாழ்விலும் அப்பெருந்தகைமை சிறந்து விளங்கும் நிலையினைப் பழந் தமிழ் வரலாற்றால் அறியலாம். இளையோனின் வஞ்சகத்தால் கானகம் புகுந்த குமணனிடத்தே பெருந்தலைச் சாத்தனார் பொருள் வேண்டியபோது, அப்பெருவள்ளல் தன் தலையினையேசய வாளையே தந்தான் எனக்குமணனைப் புலவர் பாடுகின்றார்.

> "பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
> நாடு இழந் ததனினும் நனியின் னாதென
> வாள்தந் தனனே தலையெனக் கீயத்
> தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்"
>
> (புறம் 165)

ஒப்புரவின் மிக விழுமிய நிலையாகிய தியாகப் பண்பினையே வள்ளுவர் 'பெருந்தகைமை' எனக்குறிக்கின்றார்எனலாம். மக்கள் புரியும் தியாகப் பெருஞ் செயல்கள் அனைத்தும ஈண்டு அடங்குகின்றன. உலகப் புகழ்பெற்ற பிளாரன்சு நைட்டிங்கேல் (Florence Nightingale), ஆல்பர்ட் சுவைட்சர் (Albert Schwietzer) போன்றோர்தம் ஒப்புரவினை ஈண்டு நாம் நாம் எண்ணிப் போற்றல் வேண்டும். அறிவிலே தொடங்கி மறுமைப் பயனை நோக்குகின்ற ஒப்புரவு அன்பிலே மலர்ந்து அருளிலே கனிந்து தியாகப் பண்பாகப் பயன் படும் நிலையினை வள்ளுவர் படிப்படியாக விளக்குகின்றார்.

ஒப்புப்வாளர்தம் உயர்வு

அடுத்து வரும் மூன்று குறள்களில், நத்தம் போற்

வேட்டையிட்டுகின்ற வித்தகர் தம் உயரிய மன நிலைகளைப்பாடு கின்றார். கடப்பாடாகிய ஒப்புரவினைக் கடைப்பிடிப்போர் தம் மிடத்தே செல்வமற்ற காலத்தும் ஒப்புரவினில் தளரார் என்றும் அதனை ஆற்ற இயலாது உள்ளந் துடிப்பதே அக்கனிந்த நெஞ்ச முடையார்க்கு வறுமை என்றும் அவர்தம் நெஞ்சப் பாங்கினை எடுத்தியம்புகின்றார்.

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்"

"நயனுடையான் நல்கூர்ந்தா னுதல் செயும்நீர
செய்யா தமைகலா வாறு

இவற்றுக்கும் இவ்வதிகாரத்தின் இறுதிக் குறளுக்கும் குமண வள்ளலின் கொடைப் பண்பே தக்க சான்று.

நற்செயல்புரிந்து நற்றொண்டு ஆற்றி நல்லவனாகவாழ்ந்து நற்புகழை ஈட்டுவதே மனிதவாழ்வின் நோக்கம். இதுவே வள்ளு வரின் முடிந்த முடிபு.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்" என்னும் உண்மைக் கிணங்க ஒப்புரவறிதலையும் வள்ளுவர் புகழோடு இணைத்து முடித்துப் பாடுகின்றார். தொண்டு செய்வதால் மனிதன் அழிவ தில்லை. ஒருகால் அழிவு நேரினும் அது பூதஉடலுக்கே அன்றி அவன் ஆருயிருக்கோ அல்லது உள்ளுணர்வுக்கோ அன்று. அவன் உடலால் அழியினும் அவனது நெறியும் கொள்கையும் தியாகப் பண்பும் என்றும் நிலைத்து நின்றுவழிவழியாகவரும் மக்களிடத்தே "ஊக்கமும் உளவலியும் உண்மையிற் பற்றும் எழச் செய்யும் பேராற்றலாக விளங்கும், எனவே உலகம் உள்ளளவும் அவ்வுத் தமரும் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் நிறைந்து நிற்பர். எனவே நின்று நிலைக்கும் புகழ் கொடுக்கும் ஒப்புரவினைச் செய்க என முடிக்கின்றார்.

"ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து"

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழித்துக் குறளை நாம்

பயிலும் போதும், அது நமக்குச் சிறந்த உணர்வுகளை ஊட்டு கின்றது. காரணம், அந்நூல் மாறி மாறி வரும் இயற்கை நிகழ்ச்சி கட்கும் புறத் தோற்றங்கட்கும் அப்பாலாய், மனித உள்ளத்தே நிலைத்து நிற்கும் அரிய பண்பினை, காலம் மாறினும் தாம்மாறு நல்லுணர்வுகளை உயிரெனக் கொண்டு இயங்குவதேயாம். "உயரிய நெறிகளைக்கற்பனையின் துணைகொண்டுஉணர்வதே கவிதை"*என் னும் ரஸ்கின் கூற்றையும் ஈண்டு நோக்கிக் குறள் வாழ்வை உணர்ந்து வாழ்வோமாக.

---

* Ruskin defines it (Poetry) as "the suggestion by the imaginotion, of noble grounds for the nobleemotions" (W. H. Hndson). in introduclion to the study of Li terature 1960 edition P. 65.

மதிப்புரை:

மயிலணி அந்தாதி

[ஆசிரியர்: சுன்னாகம் கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை.
வெளியீடு: புலவரகம், மயிலணி, சுன்னாகம், இலங்கை.
பக்கம்: 24. விலை: 50 சதம்.]

மயிலணி என்னும் ஊர், யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தின் வடபால் உள்ள வளமார் திருத்தலமாகும். மடங்களுக்கும், ஆலயங்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் உறைவிடமாக விளங்கிய பழமையான இடம் இது. இவ்வூரிற் கோயில் கொண்டுள்ள திருமுருகன் மீது அந்தாதித் தொடையமையக் கட்டளைக் கலித்துறையால் பாடப் பெற்ற இனிய செய்யுட்களைக் கொண்ட நூலாக விளங்குகிறது. நூல் சிறிதே எனினும், பக்திச்சுவை மிகுந்தது; இனிய சந்த ஓசை உடையது; முருகனின் பெருமைகளை உரைப்பது. மயிலணி என்னும் ஊர், 'குயிலினங் கூவுதண் சோலை'களும், 'வாவியும் காவியும் மாண்புசெய் சுன்னையும்' 'தென்னை மரமுயர் தீம்பொழிலும்' தன்னகத்தே உடையதெனப் பாடுகின்றார். 'முதுமறை வாழ்த்தும் முதல்வனும்' 'வரு மா முகில் தவழ்வான் தோய் மலையும்' 'முயலகன் என்றிடும் பூதனை' என்பன போன்ற பாக்களில் தெய்விகக் கதைகள் சுட்டப்பட்டுள்ளன.

"வேலா! சரணம்; விசாகா! சரணம்; விமலனருள்
பாலா! சரணம்; பரனே! சரணம்; பவனிவரு
சீலா! சரணம்; சிலம்பா! சரணம்; சிகண்டியுயர்
காலா! சரணம்; கடம்பா! சரணம்; கவின்தலத்தே!"

முதலியன முருகனிடத்து நம் உள்ளத்தைச் செலுத்தும் உயரிய பாடல்களாக அமைந்துள்ளன.

'உன்போ லிணையறு தெய்வமும் உண்டுகொல்' என முருகனை ஏத்தும் கவிஞர், அவனை ஏத்துவதனால் உண்டாகும் நன்மைகளையும் கூறுகின்றார். 'மண்டு மலத்தெழு வாதனை நீக்குவன்' 'மரணம் நணுகுமுன் மாணடி சேர்குவர் மண்ணிலே;' 'மீளாத வல்வினை வேதனை விட்டியம் மேலுலகில் மாளாத வல்லபத் தோடின்பம் எய்துவர் மன்தலத்தே' என்கிறார் இங்ஙனம் அரிய கருத்துக்களைக் கூறும் இந்நூல், நாள்தோறும் முருகனை வணங்கும் மெய்யடியார்கள் பாராயணஞ் செய்தற்கு ஏற்றதாகும்!

—ச. சாம்பசிவன்.

சங்கச் செய்திகள்

செந்தமிழ்

சென்ற 61 ஆண்டுகளாகச் 'செந்தமிழ்' திங்கள் இதழாக வெளிவந்துகொண்டிருந்தது. திங்கள்தவறாமல் இதழைஅச்சிட்டு வெளியிடுவதிலும், தகுந்தவர்களிடம் சிறந்த கட்டுரைகளைப் பெறுவதிலும் சில இடர்ப்பாடுகள் இருந்தன. இதனால், குறித்த காலத்தில் செந்தமிழை வெளியிடமுடியவில்லை. எனவே, இந்த இதழ்முதல் மூன்று திங்களுக்கு ஒருமுறையாக ஆண்டொன்றுக்கு நான்கு இதழ்கள் வெளியிட முடிவுசெய்துள்ளோம். 'செந்தமிழ்' மிகுதியான பக்கங்களுடன் சிறந்த கட்டுரைகளைத்தாங்கி வெளிவரும். இதன் ஆண்டுக் கட்டணமும் மூன்று ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்ப்பெருமக்களும், பள்ளி, கல்லூரி, நூல்நிலையம் முதலியவற்றின் நிறுவனத்தாரும் ஆதரவு அளித்து இச்'செந்தமிழ்'ப் பணி சிறக்க உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைமைப் புரவலர்

இவ்வாண்டுத் தொடக்கத்தில், நம் சங்கத் துணைத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களும், சங்கச் செயலர் திரு கி. பழனியப்பன் அவர்களும், டில்லிமாநகர் சென்றிருந்தனர். அப்போது, அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர், மேன்மைதங்கிய டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களை, அன்னாரது மாளிகையிற் கண்டு பேசினர். "முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரபிரசாத் அவர்கள் சங்கத்தின் தலைமைப்புரவலராக (Patron-in-Chief) இருந்தமைபோன்றுதாங்களும் இருந்துவரவேண்டும்" என்று குடியரசுத்தலைவர் அவர்களிடம் வேண்டிக்கொண்டனர். அதற்கு அவர்கள் மனமுவந்து இசைவு அளித்ததுடன், மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு முழு ஆதரவும் நல்குவதாக வாக்களித்தனர். அவர்கள் அனுப்பிய

தலைமைப் புரவலருக்குரிய பட்டயம், இவ்விதழின் மற்றொரு பக்கத்தில் வெளியிடப்பெற்றுள்ளது.

உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு

இவ்வாண்டு ஏப்ரல் 17 முதல் 23 வரை, கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டிற்கு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாகத் துணைத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களும், செயலர் திரு. வி. பழனியப்பன் அவர்களும் மாநாட்டினரின் அழைப்பிற் கிணங்கச் சென்றிருந்தனர். மாநாட்டில் தமிழவேள் அவர்கள், 'தமிழ்மொழிக்குச் சங்கம் செய்த தொண்டுகள்' என்ற பொருள் பற்றியும், செயலாளர் அவர்கள் 'பண்பாட்டைக்காட்டும் தமிழ்ச் சொற்கள்' என்ற பொருள் பற்றியும் கட்டுரைகள் வழங்கிச் சொற் பொழிவாற்றினர். நம் சங்கச் சார்பில், மலேயாத் தலைமை அமைச்சர் உயர்திரு. துங்கு அப்துல் ரகுமான் அவர்கட்கும், அமைச்சர்களான திருவாளர்கள் சம்பந்தம், மாணிக்கவாசகம் ஆகிய இருவர்க்கும், மாநாட்டினை வெற்றியுடன் நடத்திய பொறுப்பாளர்கட்கும், நிறுவனங்கட்கும், பிற தொண்டர்கட்கும், அவரவர்க்குத் தகுந்தவாறு, சங்கத்து நினைவாக மீனாட்சி, நடராசர் முதலிய திருவுருவ வார்ப்புச் சிலைகளும், பதக்கங்களும், தமிழவேள் அவர்களால் வழங்கப் பெற்றன.

மாநாட்டினையொட்டி, கோலாலம்பூர் பல்கலைக் கழகத்து நூல்நிலையத்தில், பொருட்காட்சி ஒன்று நடைபெற்றது, அக் காட்சியில் வைப்பதற்கென்றே நம் சங்கச் சார்பில் தயாரிக்கப் பெற்ற சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் தமிழ் வளர்த்த பெருமக்களின் படங்கள், அழகாக வரையப் பெற்று, ஆங்குக் கொண்டு செல்லப்பட்டன. அவற்றை நம் தமிழக முதலமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், திறந்து வைத்துப் பாராட்டிப் பேசினர். இப் படங்கள், கண் காட்சியைக் காணவந்தோர்க்கு நல் விருந்தாய் அமைந்தது.

பினாங்கு, ஈப்போ, கோலாலம்பூர், சிங்கப்பூர் முதலான பல இடங்களிலுமுள்ள தமிழ்ப்பெருமக்கள் நம் சங்கத்தினரையும், ஏனைய தமிழ்அறிஞரையும் சிறந்தமுறையில் வரவேற்று விருந்தளித்தனர். அவர்களிற் பலர், மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் தேர்வு

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புரவலர்
இந்தியக் குடியரசுத் தலைவர் மாட்சிமைமிக்க
டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள்
சங்கத்திற்கு வழங்கிய பட்டயம்

Dr S Radhakrishnan
President of the Republic of India
is pleased to be the
Patron-in-Chief
of the
Tamil Sangam Madurai

By Command of the President of the Republic of India

Military Secretary's Office
The 22nd January 1966

Major General
Military Secretary to the President

களிற் கலந்துகொள்ளும் விருப்பமுடையவராய் இருப்பதாகத் தெரிவித்தனர். அதற்ிணங்கச் சங்கத் தேர்வுகளை அந்நாடுகளில் நடத்துவதற்காகச் சிங்கப்பூரில், நம் தமிழ்ச் சங்கத்தின் கிளை ஒன்று அமைக்கப்பெற்றது. மேலும் சங்கச் சார்பில், பினங்கிலும், கோலாம்பூரிலும் தேர்வுக்குழுக்களும் (Examination Boards) அமைக்கப் பெற்றன.

சிறப்புச் சொற்பொழிவு

நம் சங்கச் சார்பில், 11—9—66 ஞாயிறன்று முற்பகல் 10-30 மணிக்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து ஓய்வு பெற்ற, வித்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளை 'தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துரைகள்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அப்போது, அவர், தொல்காப்பியத்தில் வரும் 'வடவேங்கடம் தென்குமரி' என்ற பாயிரத்தை வைத்துக்கொண்டு, பொதுவாகத் தொல்காப்பியரது காலத்தை விளக்கினார். சிறப்பாக, "அப்பாயிரத்தைப் பாடிய பனம்பாரனார் என்பவர் தொல்காப்பியனாரது காலத்தவராக இருக்க முடியாது; தொல்காப்பியர் தோன்றிக் குறைந்தது ஒரு நூற்றாண்டு பிற்பட்ட காலத்தவராக இருக்கலாம்; இதற்கு இப்பாயிரக் கருத்துக்களே சான்றாக நிற்கின்றன" என்று கூறினார். கூட்டத்திற்குச் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. ரா. வே. நாராயணன், எம். ஏ., தலைமை தாங்கினார்.

செந்தமிழ்க் கல்லூரி

நம் சங்கச் சார்பில் நடைபெற்றுவரும் செந்தமிழ்க் கல்லூரியில் இவ்வாண்டு ஆடவர் 50 பேரும், பெண்டிர் 80 பேருமாக 130 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

கல்லூரி முதல்வர் திரு. ரா. வே. நாராயணன், எம். ஏ., மதுரைப் பல்கலைக் கழகத்தின் 'செனட்' உறுப்பினராகவும் 'கல்விக்குழு' (Academic Council), 'பாடத் திட்டக் குழு' (Board of Studies) முதலியவற்றின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

1966 மார்ச்சில் நடைபெற்ற
தனித் தமிழ் தேர்வு முடிவுகள்

தேர்வெண்	பெயர்	வகுப்பு
	நுழைவு (பிரவேசம்)	
13	கோமதி எஸ்.	முதல்
15	மேழ்ஸி அ.	,,
16	பனியம்மா டி..	,,
48	சாரதாபாய்அம்மா	,,
3	சாந்தகுமாரிஅம்மா	இரண்டாம்
8	செல்வமணி	,,
9	ஸ்ரீ குமார்	,,
11	சத்தியானந்தன்	,,
12	டெயிஸ் லெற்று அ.	,,
22	சத்தியநிசன் ஜே.	,,
33	மரியதங்கம் ஜி.	,,
34	கமலம்மா அ.	,,
35	தாசம்மா அ.	,,
38	ஆனந்தாபாய் ஜி.	,,
42	குமாரபிள்ளை	,,
43	வல்சலா டி.	,,
66-அ	இராமகிருஷ்ணன் டி.	,,
66-சி	ருக்மணி வி.	,,
5	குமாரசுவாமி வி.	மூன்றும்
8	பிதாம்பரம்தம்பி எஸ்.	,,
17	இராசம்மா ஜி.	,,
23	விசுவம்பரன் ஆசாரி பி.	,,

தேர்வெண்	பெயர்	வகுப்பு
24	அப்புக்குட்டான் கி.	மூன்றும்
25	முகம்மது ஹஸனலெப்பை	,,
28	தங்கப்பன் வி.	,,
32	சாந்தம் வி.	,,
36	பேபி அம்மா றி.	,,
44	வசந்தகுமாரி கே.	,,
46	இசிலி ஜெ.	,,
47	இந்திராதேவி பி.	,,
49	சுபத்திர அம்மா எல்.	,,
50	ஸபி கே.	,,
51	மேரி என்.	,,
52	தோமஸ் எம்.	,,
55	மேரிசரோசா பி.	,,
63	பத்மகுமாரி பி.	,,
73	பரசுராமன் ஏ.	,,
74	இராசேந்திரன் கா.	,,
75	வெங்கடேசன் ஜெ.	,,
77	சேஷன் என்.	,,
66-டி	ஜகதம்மா பி.	,,

இளம்புலவர் (பாலபண்டிதம்)

103	ராஜேஸ்வரி ஜே. ஆர்.	முதல்
90	பெரியசாமி ஆ.	இரண்டாம்
93	பாமா வி.	,,
96	செயலெக்குமி அ.	,,
97	கிருஷ்ணம்பாள் இரா.	,,
98	லலிதா எஸ்.	,,
99	வாசியாள் ரோசரி வி.	,,
100	மணிமேகலை ப.	,,
102	ராசலெட்சுமி ஆ.	,,
106	சித்ரா சு.	,,
107	சந்திராமேரி வ.	,,
108	கல்யாணி சோ.	,,

தேர்வெண்	பெயர்	வகுப்பு
2	சுந்தரம் எஸ்.	மூன்றும்
6	பால்தங்கம் பி.	,,
8	ஜறி சுந்தரபாய் டி.	,,
9	சொர்ணம் டி.	,,
14	இரத்தினம் பி.	,,
15	கிரேஸ் டி..	,,
16	சரோஜினிபாய் பி.	,,
20	செல்வமணி என்.	,,
22	தர்மசீலன் க.	,,
26	சாந்தகுமாரி டி.	,,
27	ஜோசபின் இ.	,,
30	புஷ்பராஜிரிபோரா எ1.	,,
31	புருஷோத்தமன் ஜி.	,,
33	ஞேஸிலி கே.	,,
37	செல்லத்துரை எம்.	,,
38	இராஜலட்சுமி கே.	,,
39	சரோஜம் டி.	,,
40	நாகம்மாள் டி.	,
41	லீலா சி.	,,
42	தெரசம்மாள் என்.	,,
43	செந்திவேல் கா.	,,
45	ஆக்னஸ் எம்.	,,
47	பத்மாவதி அம்மா சு.	,,
50	தங்கப்பன் நீ.	,,
53	தங்கரேத்தனபாய் த.	,,
55	மைக்கேல்செல்வன் பி.	,,
59	பாயி கே.	,,
62	நேசம்மா எஸ்.	,,
62–அ	செல்லக்கன் பி.	,,
62–சி	ஆலிசன் அ.	,,
70	பக்கிரிசாமி அ. இரா.	,,
71	கோவிந்தசாமி எம்.	,,

தேர்வெண்	பெயர்	வகுப்பு
73	பெரியசாமி ஆ.	மூன்றும்
75	கோதண்டபாணி கோ.	,,
76	சவரிராஜ்	,,
80	பாலேயாடேவிட் சு.	,,
82	சுப்ரமணியன் எஸ்.	,,
85	சையத் இப்ருகிம்பாட்சா	,,
91	சிங்காரம் த.	,,
92	நூர்முகம்மது கா. மு.	,,
94	பிளாரன்ஸ் லீலா. இரா	,,
95	கோகிலா	,,
101	மேரிவில்லிமார்பாய் ஐ.	,,
105	மாலதி எஸ்.	,,
109	கமலம் இரா.	,,
110	கொண்டம்மாள் சு.	,,

புலவர் (பண்டிதம்)

54	இராமனுசம் சு.	முதல்
60	நீலமேகம் சுப.	,,
66	மரகதம்	,,
34	சாந்தம் செ.	இரண்டாம்
36	சானகி பி.	,,
41	சந்திரசேகரன் கோ.	,,
52-அ	பழனியம்மாள்	,,
53-அ	பிச்சை	,,
63	ஜோதிகமலாமணி	,,
64	கிருஷ்ணவேணி	,,
68	சகுந்தலா சி.	,,
70	செண்பகாதேவி	,,
1	சேவிங்கிருஸ்	மூன்றும்
2	செல்வராஜ் பி.	,,
5	தேவகிரேஸ்லி பொ.	,,
6	புஷ்பம் டி.	,,

தேர்வெண்	பெயர்	வகுப்பு
7	லில்லி ஜேனங்பாய் அ.	மூன்றும்
8	மேரி சி.	"
10	இராஜம்மாள் சி.	"
14	மத்தியாஸ் அளி.	"
16	விமிலிலில்லித்தங்கம் மி.	"
17	அமலோற்பவம் எஸ்.	"
18	மரியஞேணிக்கம்	"
20	கணேசன் தி.	"
21	கட்டித்தங்கம் வெ.	"
22	மரியலங்காரம் வெ.	"
26	ஆசீர்வாதம் வே.	"
26-அ	செல்லம் அ.	"
27	ரிட்டாள் இரா.	"
28	லிலி.டவமணி என்.	"
29	லில்லிபாய் த.	"
30	அன்னபாய் சே.	"
31	ஞானபாய் யோ.	"
32	தங்கக்கன் மெ.	"
33	சானகிபாய் வே.	"
35	ஞேசிலி இரா.	"
43	காதர் எஸ். எம். ஏ.	"
44	பாரததேவி டி.	"
45	சுப்பிரமணியன் கோ.	"
46	ஜேசும்க்கேல் என்	"
47	பகவதீசுவரஐயர் ŝ.	"
49	சுந்தரராசு இரா.	"
53	கணேசன் ஏவி.	"
56	சுப்பிரமணியன் சு.	"
62	செயலட்சுமி	"
65	கோமளவல்லி சி.	"
67	இரமணிதேவி இரா.	"
71	மருதாம்பாள்.	"

COPY OF THE

Proceedings of the Director of Secondary Education, Madras-6.

R. Dis 166528/65 dated 22—12—1965.

GOVERNMENT OF MADRAS.

Education and Public Health Department.

Memorandum No. 105974 E3/65-2 Education, dated. 15—12—65.

Sub:— Schools - Secondary Schools - Utilisation of buildings for conducting Tamil Examinations by Madurai Tamil Sangam - Orders passed.

Ref:— From the Director of Secondary Education, Roc. No. 1666528 E4/65 dated. 16—10—65.

There is no objection to the utilisation of the buildings furniture etc. of the educational institutions such as High Schools and Training Schools (under the Government, local body and private managements) in this state for conducting Tamil Examinations under the auspices of the Madurai Tamil Sangam, Madurai.

(Sd.) J. ANJANI DAYANAND,
Deputy Secretary to Government.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை

1967-தேர்வு விவரம்

1. உயர் பள்ளி. — தேர்வு நாள்

பள்ளியிறுதி வகுப்பு (S. S. L. C.)

முதல்தாள் (I-Paper)	2½ மணி	28—1—67
(செய்யுள் — உரைநடை — இலக்கணம்)		
இரண்டாந்தாள் (II Paper)	2½ மணி	28—1—67
(துணைப்பாடங்கள் — பொதுக்கட்டுரை சுருக்கியெழுதுதல் — மொழிப்பயிற்சி — செய்யுளின் திரண்ட கருத்து.)		
பிரிநிலைக்கல்வி (Diversified Course)	2½ மணி	28—1-67
தனி வினாத்தாள் (செய்யுள் - உரைநடை பொதுவிலக்கணம் - பொதுக்கட்டுரை)		

2. பயிற்சிப் பள்ளி.

இளையோர் கல்வித்தாள்	2 மணி	28—1—67
முதியோர் கல்வித்தாள்	2 மணி	28—1—67
(இளையோர் கல்விப் பயிற்சி — முதியோர் கல்விப்பயிற்சிக்குரிய தமிழ்ப் பாடங்களே இத்தேர்விற்கும் உண்டு.)		

3. கல்லூரிகள்.

I முதனிலை வகுப்பு (P. U. C.)

முதல் தாள் (I-Paper)	3 மணி	11—2—67
(செய்யுள் - உரை நடை - இலக்கணம்)		
2-ஆம் தாள் (II-Paper)	3 மணி	11—2—67
(துணைப்பாடம் - கட்டுரை - மொழிபெயர்ப்பு)		

சிறப்புத்தமிழ். (Advanced Tamil)		3 மணி	13—2—67

(பல்கலைக்கழக முதனிலை வகுப்பிற்குரிய பொது - சிறப்புத் தமிழ்ப் பாடநூல்களே இத்தேர்வுகளுக்கும் உரியவை.)

II. 2-ஆம் ஆண்டு: பட்டப்படிப்பு

(II Year B. A., B. Sc., Degree Classes)

முதல்தாள் (I-Paper)		3 மணி	11—2—67
(செய்யுள் - இலக்கணம்)			
2-ஆம் தாள் (II-Paper)		3 மணி	11—2—67
(உரைநடை நூல்கள்)			
மூன்றுந்தாள் (III-Paper)		3 மணி	13—2—67
(மொழிபெயர்ப்பு - பொதுக்கட்டுரை - இலக்கியவரலாறு)			

(பல்கலைக்கழக இளங்கலை வகுப்புப் பாட நூல்களே இத்தேர்விற்கும் உரியன.)

தேர்வுக் கட்டணங்கள்:

I	பள்ளியிறுதி வகுப்பு (S. S. L. C.)	
	பொதுத் தமிழ் (Academic course I & II)	1—75
	தொழிற் பிரிவு (Diversified course)	1—00
II	பயிற்சிப் பள்ளி	1—00
III	முதனிலை வகுப்பு (P. U. C.)	
	2-ஆம் பிரிவுத் தமிழ்	2—50
	சிறப்புத்தமிழ்	1—00
IV	பட்டப்படிப்பு (B. A., B. Sc.,)	3—50

கட்டணங்கள் செலுத்த வேண்டிய கடைசி நாள்:

உயர் பள்ளி, பயிற்சிப்பள்ளி	21—1—67
கல்லூரி	4—2—67

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:—

மேலாளர்,

மதுரைத் தமிழ்ச் சங்கம்,

தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	வைத்திய சாரசங்கிரகம்	...	ரூ.	7—00
2.	பன்னூற்றிரட்டு	...	ரூ.	3—00
3.	தமிழ்ச் சொல்லகராதி	முதற்பாகம்	ரூ.	10—00
		மூன்றும் பாகம்	ரூ.	10—00
4.	தொல்-செய்யுளியல்-நச்சினார்க்கினியர் உரை		ரூ.	2—00
5.	மாறனலங்காரம் (மூலமும்-உரையும்)		ரூ.	6—00
6.	பெருந்தொகை	...	ரூ.	7—00
7.	அரும்பொருள் விளக்க நிகண்டு		ரூ.	1—25
8.	தமிழ்ச் சங்கத் தொகுப்பு:			
	முதற் பாகம்	கோவை நூல்கள்	ரூ.	3—00
	இரண்டாம் பாகம்	உலா நூல்கள்	ரூ.	3—00
	மூன்றும் பாகம்	பாமாலை நூல்கள்	ரூ.	3—00
	நான்காம் பாகம்	இலக்கிய நூல்கள்	ரூ.	5—00
	ஐந்தாம் பாகம்	இலக்கண நூல்கள்	ரூ	3—00
	ஆறும் பாகம் மனீஷாபஞ்சகம் முதலிய நூல்கள்			2—00
9.	தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர்		ரூ.	2—00
10.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்		ரூ.	0—50
11.	சுகசந்தர்சன தீபிகை	...	ரூ.	0—50

குறிப்பு: 1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25% முன் பணம் அனுப்பவேண்டும். பாக்கித் தொகைக்குப் புத்தகங்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

2. ஒரே தடவையில் ரூ. 50-க்கு மேல் புத்தகம் வாங்குவோர்க்கு 15% கழிவும் ரூ. 100-க்கு மேல் புத்தகம் வாங்குவோர்க்கு 20% கழிவும் கொடுக்கப்படும்.

3. புத்தகங்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குவோரே ஏற்கவேண்டும்.

"செந்தமிழ்"

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இம்மலர் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப் பெறுவது. ஆண்டுச்சந்தா ரூ. 3—00.

புலவர்கள்பலர்எழுதிய அரியகட்டுரைகள், ஆய்வுரைகள்கொண்ட பழைய "செந்தமிழ்" இதழ்கள் ஆண்டுவாரியாகப் பைண்டு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விலை தனித்தனி ரூ. 5—00.

தேவைக்கு,

"மேலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1."

என்ற முகவரிக்கு எழுதவும்.

" செந்தமிழ் "

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இம்மலர் ஆண்டுக்கு நான்கு முறை வெளியிடப்பெறுவது

ஆண்டுக் கட்டணம் ரூ. 3—00

புலவர்கள் பலர் எழுதிய அரிய கட்டுரைகள், ஆய்வுரைகள் கொண்ட பழைய 'செந்தமிழ்' இதழ்கள் ஆண்டுவாரியாகக் கட்டடம் (bind) செய்யப்பெற்றுள்ளன. அவற்றின் விலை தனித்தனி: ரூ. 5—00

விவரங்கட்கு:-

ஆசிரியர், "செந்தமிழ்"
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை-1.

இவ்விதழ் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்காக தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களால் மதுரை இளங்கோ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.